உ

பத்துப் பிரபந்தம்

செவியறிவுறூஉ

(உபதேசம்)





பாம்பன்

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்



C.S.S.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ

ஓம் குஹப்ரஹ்மணே நம:
ஸ்ரீமத் குமர குருதாச முனீந்திர குருப்யோ நம:

அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு

பாம்பன்
ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

1. பத்துப் பிரபந்தம்

(அனைத்துப் பிரபந்தங்களுக்கும் உரையுடன்)

2. செவியறிவுறூஉ.

(உபதேசம்)

மகாதேஜோ மண்டல வெளியீடு
திருவான்மியூர், சென்னை – 600 041.

2020

முதற்பதிப்பு : 1907
இரண்டாம் பதிப்பு : 1990
மூன்றாம் பதிப்பு : 2001
நான்காம் பதிப்பு : 2003
ஐந்தாம் பதிப்பு : 2017
ஆறாம் பதிப்பு : 2020

விலை : ரூ. 65-00

பத்துப்பிரபந்த விவரம் :

1. சஸ்திர பந்தம்
2. மயூரபந்தம்
3. கமலபந்தம் - கோமூத்திரி
4. பிறிதுபடு துவிதபங்கி
5. பிறிதுபடு திரிபங்கி
6. பிறிதுபடு பாட்டுப் பிரபந்தம்
7. பகுபடு பஞ்சகம்
8. சஷ்டி வகுப்பு
9. தங்க ஆனந்தக் களிப்பு
10. அனவரத பாராயணாஷ்டகம்

அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்
9/5, ஐயா முதலித் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.

உ

ஓம் குஹப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத் குமர குருதாச முனீந்திர குருப்யோ நம:

சமர்ப்பணம்.

அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் சாமுசித்தராக 1850 ஆம் ஆண்டு திரு இராமேஸ்வரத்தில் அவதரித்துப் பாம்பனில் வசித்து வந்தவர். பூர்வ ஜென்ம மேம்பாட்டினால் அதியிளமையிலேயே ஸ்ரீகுமார பரமேஸ்வரனே முழுமுதற் கடவுளென சுருதி, யுத்தி, அனுபவ வாயிலாகக் கத்திய பத்திய ரூபங்களில் நிலைநாட்டியவர்கள். அவர்கள் உலகோபகாரமாக அருளிச் செய்த நூல்கள் யாவற்றையும் அவர்கள் காலத்திலேயே அச்சிட்டுள்ளார்கள். அவற்றில் 24 வியாசங்கள் தவிர ஏனைய நூல்கள் இறையருளினால் நமக்குக் கிடைத்துள்ளன.

பத்துப் பிரபந்தம் என்னும் இந்நூல் அதிசித்திர விசித்திர கவிகளையுட் கொண்டது.

இந்நூலில் சஸ்திர பந்தம், மயூர பந்தம், கமலபந்தம், கோமூத்திரி, தங்க ஆனந்தக் களிப்பு ஆகிய பிரபந்தங்களுக்கு ஸ்ரீமத் சுவாமிகளே உரைகண்டுள்ளார்கள். பகுபடு பஞ்கத்திற்கு, சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிவநேயச் செல்வர் ஈ. இரத்தின வேலு முதலியார் அவர்கள் உரை ஆக்கியுள்ளார்கள். சைவ சமயக் காவலர், சைவ சமய சண்ட மாருதம் இராணிப்பேட்டை புலவர் பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் சஷ்டி வகுப்புக்கு உரையாக்கியுள்ளார்கள். கணபதி, கந்தன், சிவன், உமை இந்நான்கு மூர்த்தங்களும் ஒரே பரம் பொருளே என்னும் சிறந்த கருத்தை வலியுறுத்திக் கூறும் சிறப்புடைய அனவரத பாராயணாஷ்டகம், பிறிது படுதுவிதபங்கி, பிறிது படுதிரிபங்கி, பிறிது படுபாட்டுப் பிரபந்தம் ஆகிய பிரபந்தங்களுக்கு பேராசிரியர் டாக்டர் S.P. சபாரத்தினம், M.A., Ph.D., அவர்கள் உரை ஆக்கியுள்ளார்கள். தங்க ஆனந்தக் களிப்புக்கு ஸ்ரீமத் சுவாமிகள் தனியாக ஒரு குறிப்புரை சமைத்துள்ளார்கள்.

ஸ்ரீமத் சுவாமிகள் குக்குட பந்தம் மட்டுமே அமைக்காதது ஒரு குறையாகப்பட்டது. அதனைப் பூர்த்தி

செய்யும் நோக்குடன், ஸ்ரீமத் சுவாமிகள் பேரில் குரு வணக்கமாக குக்குட பந்தம் ஒன்று இராணிப்பேட்டை புலவர் பி.மா.சோமசுந்தரனார் அவர்கள் அமைத்துள்ளார்கள்.

ஸ்ரீமத் சுவாமிகள் தங்கள் மீது மிகவும் அன்பு பாராட்டிய சீடர்களுக்கு சிலசமயங்களில் உபதேசங்களாக அறிவுரை வழங்கியுள்ளார்கள். அவற்றில் மூன்று அறிவுரைகளை செவியறிவுறூஉ (STATEMENT) என்னும் தலைப்பில் 1927ஆம் ஆண்டு அச்சிட்டு உள்ளார்கள். அவற்றில் ஸ்ரீமத் சுவாமிகள் பல உபதேங்களை வழங்கியுள்ளார்கள். அவற்றின் ஆறாம் பதிப்பு இந்நூலின் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் சுவாமிகள் மீது பெரும் பக்தி கொண்டு, சுவாமிகளின் நூல்களை அழகிய முறையில் அச்சிட்டு, மிகவும் குறைந்த விலையில் அடியவர்களுக்குக் கிடைப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ள பாம்பன் பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள் திருவாளர்கள் சிவகுமார் அவர்களுக்கும் சுரேஷ் அவர்களுக்கும், ஆஸ்கர் கிராபிக்ஸ் உரிமையாளர்கள் திருவாளர்கள் சுரேஷ் அவர்களுக்கும், ப.தனசேகர் அவர்களுக்கும் ஸ்ரீ குமார பரமேஸ்வரன் திருவருளும், ஸ்ரீமத் சுவாமிகளின் குருவருளும் பூரணமாக சித்திக்க வேண்டுகிறேன்.

மூவர்க்கும் முனைந்த காரியம் சிறந்து நிறைவுற முன்னின்று நடத்தும் முதல்வன், மூவர் தேவாதிகள் தம்பிரான், செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன், எங்குலக் கடவுள் என்றிருக்கும் வேற்குகன், மங்கலத் திருமுருகையன், வினைப் பகையறுத்து மனத்துயர் கெடுத்து நினைத்தது முடித்து அன்பரை வளர்த்தருள் கிருபைக்கடல், சகல செல்வ யோகமிக்க வாழ்வு தந்து புரந்தருள்பாலிக்க நீடருள் வகைதனை நேடியுய்யுமாறு என்னையும் வழியடிமை கொண்ட ஸ்ரீகுமார பரமேஸ்வரன் தண்ணளிதனை அன்பர்கள் எல்லோரும் பெற்றுய்யுமாறு இஞ்ஞான நூலினை நான்காம் பதிப்பாக வெளியிடுகின்றேன். இந்நூல் வெளி- யீட்டில் மிகவும் ஒத்துழைத்த பாம்பன் நினைவாலயத்தை நடாத்தி வரும் பேரன்பர் ப.வேணுகோபாலன் அவர்களுக்கும், பேரன்பர் ஆ. கதிர் வேலனார் அவர்களுக்கும், பேரன்பர் K. மருதநாயகம் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

அன்பன்

N. ஜெய்ராமன்

உ

குமார ஜெயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாம் பதிப்பின் அணிந்துரை.

சிவனை நிகர் பொதியவரை முனிவனக மகிழ இரு செவிதனிலும் இனிய தமிழ் பகர்ந்த பெருமான் திருவருளே துணைக்கொண்டு பரவிய பல் சமய நூல் யாவுந்தேர்ந்து அனாதி மேவு திரிபொருள் உண்மை விளங்கக் கண்டவர், வடநூற் கடலையும் தென்மொழிக் கடலையும் நிலை கண்டுணர்ந்து இயற்றமிழ் அலையெறியும் பேரறிவுக் கடல், பண்டைத் தமிழரது செந்நெறியாகிய சித்தாந்த சைவக் கொள்கையை விளக்க வந்த அருட் பேராசிரியர், ஏக தெய்வ ழிபாட்டுப் போதகாசிரியர், திருவாறெழுத்து உபதேச ஞானாசிரியர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஸ்ரீ குமார பரமேசுவரன் கருணைப் புகழ் விளங்க சாத்திர தோத்திரங்களாக அருளிய பன்னூற்களுள் 'பத்துப் பிரபந்தம்' ஒன்று, இரண்டாவது வெளியீடாக சுமார் 80 ஆண்டுகட்குப் பின் வெளி வருகின்றது.

வேத நிந்தனை சைவ நிந்தனை யென்பவைகளைப் பொறுத்துக் கொள்ளாத நெஞ்சமுடையவராய், உலகாயத முதலாக ஆண்டவன் தன்னை அடிமையென்றும் அடிமையை ஆண்டவன் என்றும், மாண்பெறு பதியைப் பசு (உயிர்) என்றும் பசுவை (உயிரை)ப் பதியென்று மதித்துச் சிவபிரான் தன்னை யிகழ்ந்திடும் புறச் சமயங்களை ஒழித்திடுந்திறத்தில் சிவபிரான் புகழ்களையே நாடோறும் புகன்றும் எழுதியும் வேத நெறி தழைத்தோங்கி மிகு சைவத் துறை விளங்கத் தொண்டியற்றும் தெய்வப் புலமை அந்தணாளன், சைவ சமய சண்டமாருதம், சைவ சமயக் காவலர், நக்கீரன் வழியடிமை குகஸ்ரீ புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள், இந்நூலில் சஷ்டி வகுப்பிற்கு உரை யெழுதியுள்ளார்கள்.

அஃதன்றியும் ஸ்ரீமத் சுவாமிகள்மீது துதியாக குக்குட பந்தமொன்றும் அமைத்துள்ளார்கள்.

நல்லறச் செல்வரோடு இணக்கமுடையவர், சிவசின்னதாரணர், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருவடிக்கு அடிமைத் திறம் பூண்டவர், பிரப்பன் வலசைத் தவ பூமியாந் தேவர்கள் வாழ் ஊரில் ஸ்ரீமத் சுவாமிகட்கு முதன் முதலாகத் திருக்கோயிலெடுத்துப் புகழ் கொண்ட திருப்பணிச் செல்வர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய ஸ்ரீமத் குமாரசுவாமியம், பரிபூரணானந்த போதம், கடவுளைக் குறித்த வியாசம், பரமசிவம் என்பதைக் குறித்த வியாசம், தேவர்களைக் குறித்த வியாசம் முதலிய நூற்கள் அச்சிற் பதிப்பித்து சைவ உலகிற்கு உதவியவராகிய பேரன்பர், சென்னை மேற்கு மாம்பலம் சைவத் திரு. N. ஜெயராமன் அவர்கள் பத்துப் பிரபந்த நூலையும் பதிப்பிப்பது சிறப்புடையதாகும்.

மூவர்க்கும் முனைந்த காரியம் சிறந்து நிறைவுற முன்னின்று நடத்தும் முதல்வன், மூவர் தேவாதிகள் தம்பிரான், செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன், எங்குலக் கடவுள் என்றிருக்கும் வேற்குகன் மங்கலத் திருமுருகையன் வினைப் பகையறுத்து மனத்துயர் கெடுத்து நினைத்தது முடித்து அன்பரை வளர்த்தருள் கிருபைக் கடல், சகல செல்வ யோகமிக்க வாழ்வு தந்து புரந்தருள் பாலிக்க நீடருள் வகைதனை நேடியுய்யுமாறு என்னையும் வழியடிமை கொண்ட மிக்க மாதவர்வாழ் பழனிமலை யுகந்த கொற்ற வேலவர் ஸ்ரீ ஞான தண்டாயுதபாணிப் பெருமான் தாமரைபுரையும் காமர் சேவடியே கதியெனப் பரவும்.

குகேசனடிமை

24—10—1990

பழனி சாது தங்க வேலுசாமி

உ

ஓம் குஹேசாய நம:

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

பத்துப்பிரபந்தத்தின் சிறப்பு.

முத்தமிழ்க்கடவுள் முருகவேள். அவன் அருள்பெற்றோர் ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம் என்ற நாற்கவிராச நம்பிகள் ஆவர். ஆகையால் அவனருளால் சித்திரகவித்துவத் திருப்புகழைச் சந்தத்தமிழில் அருணகிரியாரும் பாடமுடிந்தது. அருணகிரியாரின் அருள் நெறிநின்றவர் பழுத்த மனத்துப் பாம்பனடிகள் ஆவர். இவரும் அதிசித்திர விசித்திர கவிகள் பல அருளியுள்ளார். அவ்வருளிச் செயல்களின் அருமைத் தொகுப்பே 'பத்துப் பிரபந்தம்' ஆகும். இந்நூல் ஆசிரியரது நூலடைவில் நான்காவது மண்டலத்தைச் சேர்ந்தது.

பத்துப்பிரபந்தம்:

1. சஸ்திர (வேல்) பந்தம், 2. மயூரபந்தம், 3. கமலபந்தம், 4. பிறிதுபடுதுவிதபங்கி, 5. பிறிதுபடுதிரிபங்கி, 6. பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம், 7. பகுபடு பஞ்சகம் 8. சஷ்டிவகுப்பு 9. தங்க ஆனந்தக்களிப்பு 10. அனவரத பாராயணாஷ்டகம் என்ற பத்தும் கொண்ட தாகலின் 'பத்துப்பிரபந்தம்' என இந்நூல் வழங்கும். இவை ஒவ்வொன்றின் அருமை பெருமைகளை ஈண்டுவிரிக்கிற் பெருகும். ஆயினும் சிலகுறிப்போம். 1 முதல் 7 பிரபந்தங்கள் சித்திர விசித்திரகவிகளாய்ப் பெரும்பாலும் கற்றுத்துறை போன கவிஞர்களுக்கே களிப்பூட்டுவன. இவற்றுள் கமலபந்தத்தை ஆசிரியர் சிதம்பரத்தில் 1¼ கடிகையுள் சித்திரம் அமைத்துப்பாடினார் என்றால் இதுவெறும் மனிதமுயற்சியால் எழுந்ததாகுமா என்பதை அறிஞர்களே அறியக்கூடும். இது போன்ற ஒரு புத்தகத்தை வடமொழியிலும் தென்மொழியிலும் காண்டல் அரிது.

சஷ்டி வகுப்பு:

பாட்டுடைத் தலைவனது திருவுருவம், படை, ஊர்தி, அருட்குண முதலியவற்றை வகுத்துக் கூறுவது வகுப்பு. (கந்த) சஷ்டி வழிபாட்டு முறையை வகுத்துக் கூறுவதால் இது சஷ்டிவகுப்பு எனப்பட்டது. இது சோபகிருது ஆண்டு ஐப்பசித் திங்களில் (1903) பாடப்பெற்றது.

இதில் 32 சந்தபேதங்கொண்ட 64 அடிகளுள்ளன. 1 முதல் 32 அடிகள் தோத்திரங்களாகவும் அவற்றில் 17 முதல் 30 அடிகள் பாவும் பாவினங்களையும் குறிப்பன. 33 முதல் 48 அடிகளில் பெருமானுக்கு அபிடேகம், அலங்காரம், நிவேதனம், ஆராதனை பற்றிய விவரமும், 49 முதல் 64 அடிகள் இந்திரன் முதலிய தேவர், முனிவர் முதலியோர்கள்

சூழ்ந்து ஏவல் செய்ய, பலவகைவாத்தியங்கள் முழங்க, ஆலவட்டம் முதலிய ராசவிருதுகளோடு பேருலா-(திருவீதி உற்சவம்) முதலியன விளக்கப்பட்டுள்ளன. ஏதோ கடமைக்காக என்று பெருமான் பூசையை இலேசாகக் கருதும் நம்மவர்க்கும் ஆசார நியமத்தோடும், நேசமோடும் பூசனை செய்யும் முறையை மேற்கொண்ட பாம்பனடிகளுக்கும் உள்ள வேறுபாட்டை ஈண்டு எண்ணிப் பார்க்கவேண்டும்.

தங்க ஆனந்தக்களிப்பு:

மண்ணுலகவாழ்விற்கு வேண்டுவது தங்கம். அதுபோல மறுமை வாழ்விற்கு உதவுபவன் சுப்பிரமணியப் பெருமான் ஆதலின் தங்கத்திற்கும் சுப்பிரமணிய பரமனுக்கும் ஒற்றுமை நயம்பட இரட்டுற மொழிதலாக இந்நூல் பாடப்பட்டுள்ளது. 43 தங்கமும் நாற்பத்து முக்கோணத்தியங்கும்படி அமைந்துள்ளன. இதனைச் சுவாமிகள் சிதம்பரத்தில் பொன்னுசாமிப் பிள்ளை என்பவர்முன் படித்துக்காட்டிக் கொண்டிருந்தார். அவ்வீட்டுக்காரரான சிவசிதம்பரம் பிள்ளை திடீரென்று ஆவேசங் கொண்டவர் போல வந்து ஒரு புதிய உருத்திராக்க மாலையை அடிகளார் கழுத்தில் அணிவித்து 'இதை அணிந்து கொண்டேபாடுக' என்றனர். இதுவும் கந்தபிரான் கட்டளை என்று கருதி அடிகளார் அன்று முதல் அதனை அணியலானார். இவ்வரலாறு 'தங்க மார்சுகக் களிப்பினை யெடுத்தே சாற்று ஞான்றுசி தம்பரத் திடையோர் துங்க நாரரு ணின்றிதை யணிந்தே சொல்கவென்றுகண் மணிவட மெனக்கீ செங்கைவேலவ!' எனவரும் அடிகளார் திருவாக்கினின்றே அறியப்படுகின்றது. பரமன் அருட்பரிசு பெற்றபாடல் இது என்றபின் வேறு சிறப்பு என்ன வேண்டும்?

அனவரத பாராயணாஷ்டகம்:

இதற்கு எப்போதும் பாடற்குரிய எட்டுப் பாடல்கள் என்று பொருள். வலப்பக்கமேனும் இடப்பக்கமேனும் சுற்றிப்படித்தால் ஒரேவகையாக நிகழும் ஆறறை அமைப்பே இதன் தனிச்சிறப்பாகும். முதல் ஐந்து பாடல்கள் வணக்கமாகவும், ஏனைய மூன்றும் கவசநடையில் காப்புவேண்டுவனவாகவும் உள்ளன. 6-ம் பாட்டு மந்திர மறைகளுடையது. இறுதிப் பாட்டில் பிரணவங் கூட்டிய திருவைந் தெழுத்து (சடக்கரம்) பயின்றுள்ள சிறப்புடையது.

இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூலைப் பாராயணஞ்செய்யும் அன்பர்களுக்குக் குருவருளும் திருவருளும் பெருகிச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு உண்டாவதாக.

திருப்புகழ் சதுரர்

சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.,

-பங்கி வகைப் பாக்களின் உட்பொருள்.

(பேராசிரியர். டாக்டர். S.P. சபாரத்தினம் M.A., Ph. D.,)

பங்கி என்பதற்கு பிரிக்கப்படுவதற்கு உரியது, பிரிந்து விளங்குவது என்று பொருள். சித்திரக் கவி வகைகளுள் இதுவும் ஒன்று. திருஞான சம்பந்தப்பெருமான் அருளியுள்ள சித்திர கவிகளை மூல இலக்கியம் எனப் புகழ்ந்து கூறுகிறார் சேக்கிழார். மிகவும் மறைபொருளாக விளங்கிக் குருவின் மூலம் கேட்டு உணர்ந்து கொள்ளக்கூடிய தத்துவ நுட்பங்களை உள்ளடக்கியதாகச் சித்திரக் கவிகள் விளங்குகின்ற காரணத்தால் மூல இலக்கியம் எனச் சிறப்பித்தார். அருணகிரிப் பெருமான் அருளிய 'திருவெழு கூற்றிருக்கை' மிகவும் சிறப்புடையதான, உன்னதமான சித்திரக் கவி 'பங்கி' வகையைச் சேர்ந்த சில திருப்புகழ்ப் பாடல்களும் உண்டு. 'கருப்புவிலில் மருப்பகழி' எனத் தொடங்கும் பழநித் திருப்புகழ் ஓர் எடுத்துக் காட்டு. அந்தத் திருப்புகழில் கரந்துறை பாடலாக மற்றும் ஒரு திருப்புகழ் பாடல் அடங்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட முறைப்படிப் பாடலின் ஒரு பாகத்தை மட்டும் எடுத்து வேறொரு பாடலாக ஆக்குவது ஒருவகை. பாடலின் ஒவ்வோர் அடியையோ, சொல்லமைப்பையோ ஒரு குறிப்பிட்ட முறைப்படி மாற்றி வெவ்வேறு பாடல்களாக அமைப்பது வேறொருவகை. சற்குரு ஸ்ரீமத் பாமபன் சுவாமிகள் இந்த இரண்டாவது வகை பங்கிக் கவியை வெவ்வேறு வகையில் அதிகமாகப் பாடியுள்ளார்கள். துவித பங்கி (இரண்டு பாடல்களாக அமைவது) முதல் பஞ்சவிம்சதி அதிக சதபங்கி (நூற்று இருபத்து ஐந்து பாடல்களாக, ஒரே பாடல் அமைவது) வரை, நம் சுவாமிகள் பங்கிப் பாடல் வகைகளை தத்துவ நுட்பச் செறிவு பொருந்த் தரமான முறையில் அருளியுள்ளார்கள்.

ஒவ்வொரு வகைச் சித்திரக் கவிக்கும் உரிய தத்துவப் பின்னணி உண்டு. 'பங்கி' எனும் சித்திரக் கவிவகை, ஒரே பரம்பொருளே, தன் ஆற்றலும் இயல்பும் நிலையும் குன்றாமல் இரண்டாகவும், மூன்றாகவும், ஐந்தாகவும், எட்டாகவும், இருபத்தைந்து ஆகவும், அறுபத்து நான்கு ஆகவும் (அட்டாட்ட விக்கிரகம்) நூற்று இருபத்து ஐந்தாகவும், மற்றும் ஆயிரக் கணக்காகவும் தன்னை மூர்த்திகரித்துக். கொண்டு வெளிப்படுத்திக் கொள்கிறது என்னும் தத்துவ நுட்பத்தைப் புலப்படுத்துவது. நம் சுவாமிகளுக்கு மிகவும் பிடித்த சித்திர கவிவகை இது எனத் தோன்றுகிறது. இவ்வகைப் பாடல்கள் மூலம் சுவாமிகள் நமக்கு உணர்த்தி அருளும் முருக மகிமைகளும் முருக தத்துவங்களும் மிகப்பலவாகும்.

பத்துப்பிரபந்தம் எனும் தொகுதியுள் அமைந்துள்ள பங்கிப்பாடல்களுள் துவிதபங்கி, திரிபங்கி ஆகியவற்றுக்குரிய விளக்கம், ஒருவாறு இங்கே எழுதப்படுகின்றது.

அன்பன்

S. P. சபாரத்தினம்

உ

பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் மீது இயற்றிய

குரு வணக்கம்

குக்குடபந்தம்.

ஆக்கியோர்: சைவ சமய சண்டமாருதம் புலவர் பி. மா. சோமசுந்தரனார் அவர்கள்



வேதத்தின் வாய்மை விரித்தியம்பு புங்கவனே
நீதத் தியல்பாம்ப னித்தனே — நாதங்
கடந்தொளிர் கந்தனென்று ரைக்கவரு வள்ளான்
மிடல் கொணின்கீர் தித்தித்த வே.

உ

சிவமயம்

குமாரகுருப்யோ நம:

வேலுமயிலுந் துணை

சஸ்திர பந்தம்.

பாட்டு 55 - எழுத்து. சித்திரம் 30 - எழுத்து.

நேரிசை வெண்பா.

வாலவே தாந்தபா வாசம்போ கத்தன்பா
மாலைபூ ணேமதிற மால்வலர்தே - சாலவ
மாபாசம் போக மதிதேசார் மாபூதம்
வாபாதந் தாவேல வா,



(இதன் பொருள்) வால = தூயவனே, வேதாந்த பாவா = வேதாந்த விலாசக் கடவுளே, சம்போகத்து அன்பா = பேரின்பமெனுஞ் சுவானுபவத்திற்கு நாயகனே, மாலை பூண் = மாலைகளை யணியும், ஏம = செம்பொன் னெனத் திகழ்வோனே, திற மால் = வன்மை சான்ற திருமாலுக்கும், வலர் = (மற்ற) வல்லவர்களுக்கும், தே = கடவுளே, சால் அவம் = (என்னகத்தே) மிகுந்துள்ள பயனின்மையும், மா பாசம் = பெரிய ஆணவாதி பந்தங்களும், போக = ஒழிய, மதி தேசு ஆர் = ஞானமும் புகழுமுள்ள, மா பூதம் = பரமான்மாவே, வா = (நீ என்முன்) வந்தருளுக, பாதம் தா = திருவடிச் செல்வத்தைத் தந்தருளுக, வேலவா = வேலிறைவனே என்றவாறு.

குறிப்பு: (ஹாவ:) பாவமெனுஞ் சொல் பதார்த்தம், விலாஸம், சம்பத்தெனும் பொருளையும், (ஹூத:) பூதமெனுஞ் சொல் உண்மை, நியாயமெனும் பொருளையும் தரும்.

பத்துப் பிரபந்தம்.

மயூர பந்தம்.

மயூர பந்தம்.

பாட்டு 100 - எழுத்து. சித்திரம் 64 - எழுத்து.

குற்றெழுத்துச் செய்யுள்.
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தனதன தனதன தனதன தனதன தனதன தனனதன.

வரதந திபநக ரசுமுக வொருகுக வறிதுத புவிரிவிதி
மரகத வரிபர மதுகளி லசலவி மலமழ வெனவிரிய
மரபுறு குறுமுனி வருதிம யலசர மதிவிரி விபுதகுரு
சுரபதி நவரச பரததி நகரம துகமழ முனிவருதி.

(இதன் பொருள்) வர தந = (விரும்புநர்க்கு இல்லையெனா தளிக்கும்) வரத்தையுந் தனத்தையுமுடைய, திப நகர = பிரகாச மயமான நகரத்தானே, சுமுக = நன்முகமுடையானே, ஒரு குக = (ஆன்மாக்களின் இருதய குகையின்க ணிருத்தலின்) ஒப்பற்ற குகனெனும் காரணப்பெய ருடையானே, வறிது தபு = குறைவற்ற, விரி விதி = பெருந்தொழிலுள்ள, மரகத அரி = பச்சை நிறமுள்ள தேராகு மயில்வாகனத்தின், பரம = கடவுளே, துகள்இல் = குற்றமில்லாத, அசல விமல = (திருப்பரங்கிரி - திருச்செந்தில் - திருப்பழநி - திரு வேரகம் - திருச்சோலைமலை - திருக்குன்றுதோறாடலெனப்படு) மலையனைத்தையுந் தனக்குத் திருக்கோவிலாகக் கொண்ட அழுக்கில்லாதவனே, மழஎன் அல் = அறிவுமுதிர்ச்சி யில்லாதவெனது (ஆணவ) இருளானது, இரிய = கெடும்படி, மரபு உறு = பாரம்பரியமான பெரியார் தன்மையுற்ற, குறுமுனிவர் = அங்குஷ்ட அளவான அகஸ்தியமா முனிவர்க்கு, உதி மயல் = உதித்த மயக்கத்தையும், அசர மதி = சுவாசமில்லாத யோக அறிவையும், விரி = விளங்கச் சொல்லி யருளிய, விபுதகுரு = பேரறிவாளனான ஆசாரியனே, சுரபதி = தேவர்கள் தலைவனே,

பத்துப் பிரபந்தம்.

நவரச பரத = சிங்காரம் - வீரியம் - பெருநகை - கருணை - இரௌத்திரம் - குற்சை - சாந்தம் - அற்புதம் - பயமெனும் ஒன்பது இரசமுள்ள நாடக நாயகனே, திநகர = உலகை நோக்கு முயிர்க்கண்ணுக்கு ஒளியாக நிற்கும் வான சூரியனாகவும் அச்சூரியனை யுடம்பாக வுடையானாகவும் ஆன்ம வறிவாகிய கண்ணுக்கு ஒளியாகநிற்கு ஞானசூரியனாகவும் விளங்குவோனே, மதுக மழ முனி = இனிமையர்ன மாறா விளநல முள்ள முனிவடிவுடையானே, வருதி = வந்தருள்வாயாக, என்றவாறு

குறிப்பு: தீப நகர வெனற்பாலது திபநகரவெனக் குறுகும் வழிக் குறுகிற்று. தபு, உறு, உதி, 'விரியென்பன வினைத்தொகை. குவ்வுருபும், ஐயுருபுகளும், உம்மைகளுந்தொக்கன. இச்செய்யுள் -ஐஞ்சீர்க் கலிநிலைத் துறையாகவேனும் எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தமாகவேனும் ஆகாதோ வெனின்; நெடிலும் ஒற்றுமற்ற செய்யுளாதலின் அங்ஙனமாம். ஆயின், சீர்முன் அழகுறநிற்குமோனை யெழுத்துக்கள் அன்னண நில்லா திடைச்சேரும். ஓசை நயமுங் குன்றும். ஆகலி னவ்வா றாக்கொணாதென்க. இதன் முற்போந்த கஸ்திரபந்தத்தில் அதனையு மதன் றலைவனையு முணர்த்தாநின்ற "வேலவா" எனுஞ்சொல் இயைந்தமைபோல இம்மயூர பந்தத்தினும் அம்மயூரத்தையு மதன்றலைவனையு முணர்த்தாநின்ற "மரகதவரிபரம" எனுஞ்சொல் இயைந்தமை மிக்க சிறப்பென்க.

******

கமல பந்தம்.

அந்தாதித்தொடைக்

கமலபந்தம், பலபங்கி.



பாட்டு 56 - எழுத்து. சித்திரம் 25 - எழுத்து.

கலிவிருத்தம்.

தனதன தனன தனதன தனன.

வரவிதி திருவ வருதிபொ னரவ
வரனது கருவ வருகணை குரவ
வரகுக மருவ வருமறை பரவ
வரபத மருவ வருமதி விரவ

பத்துப் பிரபந்தம்.

வருதிபொ னரவ வரனது கருவ
வருக்கணை குரவ வரகுக மருவ
வருமறை பரவ வரபத மருவ
வருமதி விரவ வரவிதி திருவ.

திருவ வருதிபொ னரவ வரனது
கருவ வருகணை குரவ வரகுக
மருவ வருமறை பரவ வரபத
மருவ வருமதி விரவ வரவிதி.

அரவ வரனது கருவ வருகணை
குரவ வரகுக மருவ வருமறை
பரவ வரபத மருவ வருமதி
விரவ வரவிதி திருவ வருதிபொன்.

இவை - தம்மிற் பிறிதுபடுபாட்டுக்களாம். இவற்றுட் பின்னுள்ள இர்ண்டு கலிவிருத்தமும், மோனைநயமுள்ள வஞ்சிவிருத்தமுமாம். வருமாறு:—

[திருவவரு திபொனரவ வரனது
கருவவரு கணைகுரவ வரகுக
மருவவரு மறைபரவ வரபத
மருவவரு மதிவிரவ வரவிதி.

அரவவர னதுகருவ வருகணை
குரவவர குகமருவ வருமறை
பரவவர பதமருவ வருமதி
விரவவர விதிதிருவ வருதிபொன்.]

வஞ்சி விருத்தம்.

வரவிதி திருவ வருதிபொன்
அரனது கருவ வருக்கணை
வரகுக மருவ வருமறை
வரபத மருவ வருமதி.

கமல பந்தம்.

வருதிபொ னரவ வரனது
வருகணை குரவ வரகுக
வருமறை பரவ வரபத
வருமதி விரவ வரவிதி.

திருவ வருதிபொ னரவ
கருவ வருகணை குரவ
மருவ வருமறை பரவ
மருவ வருமதி விரவ.

அரவ வரனது கருவ
குரவ வரகுக மருவ
பரவ வரபத மருவ
விரவ வரவிதி திருவ.

இவற்றுட் பின்னுள்ள இரண்டு விருத்தமும், மோனைநயமுள்ள வஞ்சித்துறையுமாம். வருமாறு:-

[திருவவரு திபொனரவ
கருவவரு கணைகுரவ
மருவவரு மறைபரவ
மருவவரு மதிவிரவ.

அரவவர னதுகருவ
குரவவர குகமருவ
பரவவர பதமருவ
விரவவர விதிதிருவ.]

வஞ்சித்துறை.

வரவிதி திருவ
வரனது கருவ
வரகுக மருவ
வரபத மருவ.

திருவ வருதிபொன்
கருவ வருக்கணை
மருவ வருமறை
மருவ வருமதி.

பத்துப் பிரபந்தம்.

வருதிபொ னரவ	அரவ வரனது
வருகணை குரவ	குரவ வரகுக
வருமறை பரவ	பரவ வரபத
வருமதி விரவ.	விரவ வரவிதி.

மாலை மாற்று.

திருவ வருதி
கருவ வருக
மருவ வரும
மருவ வரும.

சொற்பிரிவு - திருவ, வருதி, கருவ, அருகு, அமர், உ, அ, அரு, ம, மருவ, வரும.

(இதன் பொருள்) திருவ = செல்வமுள்ளவனே, வரும = (சூரபதுமனை நசித்துத் தேவர்களைக் காத்தருளுமாறு பொன்) கவசந் தரித்தவனே, உ = உகாரமும், அ = அகாரமும், அரு = அருமையான, ம = மகாரமும், மருவ = வடிவாகப் பொருந்த, வருதி = என்முன் வந்தருள்க, கருவ = (அனைத்துக்குங்) காரணமா யுள்ளவனே, அருகு அமர் = என்னை நீங்காதிருப்பாயாக; என்றவாறு.

குறிப்பு: கர்வம் = விசேடம். கர்வம் = அன்பு என்று பொருளாமாற்றானே, கருவ என்பதற்கு விசேடமுள்ளவனே, அன்புள்ளவனே யென்றலுமாம். வர்மம் = கவசம். வர்மம் வருமமென்றாதலும், கர்வம் கருவமென்றாதலுந் தென்மொழி வழக்கு. வியட்டிப் பிரணவமான அகார உகார மகாரங்களொன்றாய் நிற்குநிலையே சமட்டிப் பிரணவமெனும் ஓங்காரமாம். இப்பிரணவப் பொருள் முருகப்பெருமா னென்பது. "ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம்" எனுஞ்சுருதியானும் பெறுதும். மாலைமாற்றாவது, ஒரு செய்யுளை ஈறு முதலாகக் கொண்டு வாசிப்பினும் அச்செய்யுளே யாவது. ஒவ்வோரடியும் அவ்வாறாதல் காண்க.

கமல பந்தம்.

இம் மாலைமாற்றுச் செய்யுளின் ஈற்றடியை நான்குமுறை வாசிக்க அடியிலுள்ள ஏகபாதமாலைமாற்றுச் செய்யுளாகும்.

ஏகபாதமாலைமாற்று

வஞ்சித்துறை.

மருவ வரும
மருவ வரும
மருவ வரும
மருவ வரும.

(இதன் பொருள்) மருவ = மலைகளை யுடையவனே, வரும = கவசந்தரித்தவனே, மருவ = நல்ல வாசனை கமழவுள்ளவனே, வரும் மமர் (மம்மர்) உ = என்னிடத்துண்டாகும் மயக்க மனத்தை, வவு (வவ்வு) = கவர்ந்துகொள், அரும் = காண்டற்கரிய, ம = அக்கினி மேனியாய் விளங்கியவனே, மருவ = (என்னைக்) கலந்துகொள்ள, வரும் அ = வரத்தக்க அகாரப்பொருளே. எ-று.

குறிப்பு:– மருவெனும் மலை, முற்போந்த மயூரபந்தத்தின் குறிப்பில் விளக்கப்பட்ட திருப்பரங்கிரியாதி மலை யனைத்துமாம். நாநார்த்த ரத்நமாலாவெனும் வடமொழிநூல் கூறுகின்றபடி "அ" என்பதற்குப் பொருள் பெருந்தன்மையெனக் கோடலு மொன்று. அக்கினி மேனியைச் சேந்தன், சேய், செவ்வேளெனுந் திருப்பெயர்களே யினிது விளக்கும். ஏகபாதமாவது, ஓரடியே மற்ற மூன்றடியுமாக வெவ்வேறு பொருள் பயப்ப வருவது.

இச்செய்யுளையே யிரண்டு வரியாக்கிக் கோமூத்திரஞ் செல்லுமாறு மேலுங் கீழும் ஒவ்வோ ரெழுத்து இடையிட்டு வாசிக்கக் கோமூத்திரி யெனுஞ் சித்திரகவியாகும். அடியிற் காண்க.

பத்துப் பிரபந்தம்.

கோமூத்திரி.



இக்கமல பந்தத்தின் தலைச் செய்யுள் முதலடியின் 2-ஆவது வகரத்தையும், இரண்டாம் மூன்றாமடிகளின் 2-ஆவது 4-ஆவது வகரங்களையும், நான்காமடியின் 2-ஆவது வகரத்தையும் அடுத்துவரு சீர்களுக்கு ஆதியாகக் கொண்டு நான்கடிகளையும் படித்தால் நடுவிலொரு வகரமும், சூட்டின்மேல் நான்கு வகரமுஞ் சந்தியாய் நின்று முற்றுப்பெறு நான்காரைச் சக்கரபந்தமாம். அடியிற் காண்க.



மேலைய தலைச் செய்யுளின் முதலடி யீற்றெழுத்துத் தொடங்கி மற்றை மூன்றடிகளிலும், முதலடியிலுமுள்ள வெழுத்துக்களில் ஒவ்வோ ரெழுத்து இடையிட்டு வாசிக்க, ஒரு காதைகரப்புச் செய்யுள் வரும். அது வருமாறு:-

கமல பந்தம்.

காதைகரப்பு.

வஞ்சித்துறை. யமகம்.

வரதுரு வககு
வரகரு வமப்
வரதரு „வமவி
வரதிரு வதின.

சொற்பிரிவு - வர, துருவ, ககுவர், அகருவம், அபவர், அதர், உ, வம், அவி, வர, திருவ, தின.

(இதன் பொருள்) ககுவர்=திசைகளிலுள்ள ஜீவர்களுக்கு, வர=வரமளிக்கும் வள்ளலே, துருவ=மலைகளையுடையானே, அகருவம்=அன்பில்லாமையையும், அபவர் அதர்=உள்ளத்தைப் பற்றாதவரது வழிச்செல்லும், உ=மனத்தின், வம்=விருப்பத்தையும், அவி=(என்னிடஞ் சேராத வண்ணம்) கெடுத்தருள், வர=(என்) விருப்பத்திற்குரியவனே, திருவ=சிறப்புடையானே, தின=அஞ்ஞான விருளை யொழிக்க ஞானப்பகலாக விளங்குவோனே. எ - று.

குறிப்பு:- திசைகள். - இந்திரதிசை முதல் ஈசானதிசை வரையுள்ள எட்டும், கீழும், மேலுமாகப் பத்தாம். ககுபரெனும் வடசொல் ககுவரெனத் திரிந்தது. ககுபம்=திசை. அபாவர் அபவரெனக் குறுகிற்று: தின என்றதனாலே, அஞ்ஞானவிருளும் ஞானமுந் தந்துரைக்கப்பட்டன. உ:— மனமென்பது நாநார்த்த ரத்நமாலா எனும் வடமொழி நூலிலும், வ:— விருப்பமென்பது விச்வப்ரகாசம் எனும் வடமொழி நூலிலுங் காண்க. யமகமாவது அடி முதலெழுத்தோடு இரண்டெழுத்து முதற் பத்தெழுத்து வரை ஓரடிபோல நான்கடியும் வெவ்வேறு பொருள்பயப்ப வருவது. இதனைக் கரந்துறைச் செய்யுளென்று சிலர் கூறுவர். தண்டியலங்கார எடுத்துக் காட்டின்படி இது காதைகரப்பெனப் பட்டது.

இக் காதைகரப்புச் செய்யுள் மற்றோரெதுகையா னடக்குமொரு பிறிதுபடுபாட்டுமாம். ஆயினும் எதுகை

மோனையில்லாதது சித்திர கவி யாகாதென்றல் இந்நூலாசிரியர் கோட்பாடாகலின், மூன்றடிகளின் மோனையெழுத்தில்லாத இஃதங்கீகரிக்கப் படவில்லை. அது வருமாறு:-

துருவ கருவர
கருவ மபவர
தருவ மவிவர
திருவ தினவர.

தலைச் செய்யுளில் "பொனரவ" (பொன் அரவ) எனப் பட்டதற்குப் பொற்சிலம் பணிந்தவனே யென்று பொருள் கொள்க. மற்றவைகளின் பொருள் வெளிப்படையாகலின் அவை யீண்டு விளக்கப்படவில்லை.

குறிப்பு:- "அரவம்" நூபுரமெனுஞ் சிலம்பென்பதை "அரவநூபுரமும் பாம்பு மோசையுமாம்" எனும் பிங்கலந்தைச் சூத்திரத்திற் காண்க. இப்பந்தத்திலிருந்து வெளிப்படுஞ் செய்யுள்களில், சிலவற்றி னடிகட்குரிய மோனை யெழுத்துக்கள் அடிகளினிடையிலேனும், ஈற்றிலேனு முள்ளவா றுணர்க. அடிகளி னந்தத்தினிற்கு மெழுத்து நான்கும், ஆதியினிற்கு மெழுத்து நான்கும் ஒருவகையாயிருத்தலால் இப்பாட்டு, அந்தாதித்தொடைக் கமலபந்தமெனும் பெயர்பெற்றது. சித்திரத்தினுள்ளே பல சித்திர கவிகளைத் தருதலானே இது விசித்திரகவியாம். முருகப்பெருமான், ஆன்மகோடிகளின் இருதயகமல குகையி லிருத்தலினாலே குகனெனப்பட்டனன். இக்குகனெனுந் திருப்பெயர் மேலைத் தலைச் செய்யுள் 3-ஆம் அடியில் வந்துளதாகலின், இக்கமலம் அவனது அந்தரியாமித்துவத்தை விளக்கி நிற்பதுமாயிற்று. ஒரு செய்யுளே 125 - செய்யுளாகின்ற பஞ்சவிம்சதியதிகசதபங்கியை, இந்நூலாசிரியரது குமரகுருதாச சுவாமிகள் பாடலிலும், மற்றைய சித்திரகவி முதலிய விசேட பந்தங்களை, திருவலங்கற்றிரட்டு 2-ஆம் கண்டத்திலும் காண்க.

(அந்தாதித்தொடைக் கமலபந்தம் பூரணம்.)

பிறிதுபடு துவிதபங்கி.

நேரிசை வெண்பா.

கட்டங்கா வென்றுதிகொள் காதாகைத் தண்டாமா
மட்டங்கால் சாதமலர் வண்டாளா - வட்டம்பூண்
மாதுமையாண் மைந்தாவை வாரயிலா விட்டந்தா
வேதுதுமி யேகண்டா டீ.

கண்டாடீ கட்டங்கா வென்றுதிகொள் காதாகைத்
தண்டாமா மட்டங்கால் சாதமலர்-வண்டாளா
வட்டம்பூண் மாதுமையாண் மைந்தாவை வாரயிலா
விட்டந்தா வேதுதுமி யே.

பிரபஞ்ச இயக்கம் சீர்மை பெற நடைபெறுவதைக் காணும் பொருட்டு ஞான நடனத்தையும் ஊன நடனத்தையும் நிகழ்த்துபவனே! உத்தம இலக்கணம் வாய்ந்த கட்டமைப்போடு கூடிய திருமேனியை உடையவனே! எனது தோத்திரத்தை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் திருச்செவி உடையவனே! தண்டாயுதம் தாங்கிய திருக்கரம் உடையவனே! சிறந்த நறுமணம் கமழும் நூற்றிதழ்த் தாமரை போன்ற, வண்மை மிக்க திருவடிகளை உடையவனே! கலாமயமான மந்திரத் திருமேனி தாங்கிய உமையம்பிகையின் திருக்குமார்னே! கூரிய நீண்ட வேற்படை தாங்கியவனே! எனது ஆணவ மறைப்பாகிய துன்பத்தின் மூல வேரினை வெட்டி எறிந்து அருள்க.

(கண்டாடீ என் முடியும் நேரிசை வெண்பா அதே சொல்லையே தொடக்கமாகக் கொண்டு எதுகையும் மோனையும் பொருளும் குன்றாமல் அடுத்து வேறொரு நேரிசை வெண்பாவாக அமைகிறது.)

பிறிதுபடு திரிபங்கி.

நேரிசை வெண்பா.

பத்துப்பா மேலாமோர் பாவோன் வரதாபல்
வித்துப்பார் மாலாம் விரகிலருன்-மத்தத்தா
வேலா மராமுடியா வெய்யமலா பத்தைத்தீர்
சீலா பராபரசீர் செய்.

பரசீர்செய் பத்துப்பா மேலாமோர் பாவோன்
வரதாபல் வித்துப்பார் மாலாம்-விரகிலருன்
மத்தத்தா வேலா மராமுடியா வெய்யமலா
பத்தைத்தீர் சீலா பரா.

மேலாமோர் பாவோன் வரதாபல் வித்துப்பார்
மாலாம் விரகிலருன் மத்தத்தா-வேலா
மராமுடியா வெய்யமலா பத்தைத்தீர் சீலா
பராபரசீர் செய்பத்துப் பா.

பதினோராம் திருமுறையுள் ஒன்றான திருமுருகாற்றுப் படை எனும் அரிய பாவினை இயற்றிய நக்கீர தேவனார்க்கு வரங்களை அருளியவனே! பற்பல துன்பவிளைவுகளுக்குரிய விதைகளை ஊன்றுவதற்குரிய உலகியல் வேட்கையாகிய தாபம் இல்லாத தூயோரின் களிப்புநிலையில் எழுந்தருளும் தலைவனே! வேலனே! கடம்பமலர் சூடிய திருமுடி உடையவனே! கொடியதாகி, நெருங்கிச் சூழும் ஆபத்தைத் தீர்த்து அருளும் அருட் சீலம் வாய்ந்தவனே! பரமும் அபரமுமாக விளங்கு பவனே! எனது மேன்மைக்குரிய அருள் வளத்தை வழங்கியருள்க!

அடுத்து வரும் செய்யுளில் "பரசீர் செய் பத்துப்பா" என்பதற்கு "மேன்மைமிக்க சிறப்புநிலைகளை அருளும் பதினோராம் திருமுறை" எனப் பொருள் கொள்ளலாம். 'பரமாக விளங்கு பவனே, சீர் செய்' என முற்செய்யுளில் கொண்டது போலவும் பொருள் கொள்ளலாம்.

மூன்றாவதாக அமைந்துள்ள செய்யுளில், 'சீர் செய்பத்துப்பா' —' சீர் செய்யும் திருமுறைப் பாடல் மயமாக இருப்பவனே' எனப் பொருள் காணலாம்.

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம்.

கட்டளைக்கலித்துறை.

1. ஓமய வேலவ னோய்வறு சீர்த்திய னோமவுன
சீமய வுத்தமர் நாதன் மயின்மிசைச் செல்லிளைஞன்
கோமய மின்னிய வீடேறு மிட்டர் குரவனென
தாமய வீறிறு மாறன கானந்த மார்கவன்றே.

நேரிசையாசிரியப்பா.

ஓமய வேலவ னோய்வறு சீர்த்திய
னோமவு னசீமய வுத்தமர் நாதன்
மயின்மிசைச் செல்லிளை ஞன்கோ மயமின்
னியவீ டேறு மிட்டர் குரவ
னெனதா மயவீ றிறுமா
றனகா னந்த மார்க வன்றே.

பிரணவமயமாக விளங்கும் வேலவன்; என்றும் மங்காததும் அழியாததுமாகிய பெரும் புகழையும் அருட் செல்வத்தையும் உடையவன்; பிரணவ சிந்தனையில் ஆழ்ந்து நின்று மௌனம் கடைப்பிடித்து அருட்கலை மயமாக விளங்கும் உத்தம அடியார்களின் தலைவன்; மயில்மேல் ஆரோகணித்து தத்துவ புவனங்கள் தோறும் சென்று அருளும் இளையோன்; சித்பிரகாச ஞானமயமான பர வெளியாகிய வீட்டு நிலைக்கு உயர்ந்து விளங்கும் ஞான யோக சாதனை மிக்க யோகியர்களுக்கு வாய்த்துள்ள குரு மகான் – என, முருகப் பெருமானைத் துதித்து, துதித்த அளவிலேயே, உடலும் உள்ளமும் தமது பௌதிகத் தன்மையை இழக்க சிவதேகமும் சிவகரணமும் வாய்க்கப் பெற்று, உயர்ந்து பொலியுமாறு, தூய ஆனந்த நிலையை அடைந்து விளங்குக.

பத்துப் பிரபந்தம்.

கட்டளைக்கலித்துறை.

2. வாளவிர் தண்முக வள்ளி மணாளன்வில் வாளுடைய
கோளவிர் வஞ்சரைத் தேய்த்த பொருநன் குருகில்வரு
தாளவிர் தேமுரு கோன்வேலன் முத்தன் சரதநிறை
கேளவிர் கானித முங்குறை யாக்கொன்னர் கேட்குமின்பே.

நேரிசையாசிரியப்பா.

வாளவிர் தண்முக வள்ளி மணாளன்வில்
வாளுடைய கோளவிர் வஞ்சரைத் தேய்த்த
பொருநன் குருகில் வருதா ளவிர்தே
முருகோன் வேலன் முத்தன் சரத
நிறைகே ளவிர்கா னிதமுங்
குறையாக் கொன்னர் கேட்கு மின்பே.

ஒளிமிகுந்து விளங்குகின்ற, நில்வு போன்ற குளிர்ச்சியான முகப் பொலிவு வாய்க்கப் பெற்றுள்ள வள்ளி நாயகியின் மணவாளன்; வில் வாள் முதலான ஆயுதங்களை ஏந்திக் கொடுமை மிக்க நடையுடையவராக விளங்கும் வஞ்சக அசுரர்களை அழித்த போர்வீரன்; மயில் மேல் ஆரோகணித்து அன்பர்கள் பக்கம் விரைந்து வரும் அருட் செயல் மிகுந்துள்ள முருகப்பெருமான்; எப்பொழுதுமே முத்திநிலையில் இருப்பவன் (ஒருபோதும் பந்தங்களுக்கு ஆட்படாதவன்; நித்திய முத்தன்); அவனது நிலையான ஆனந்தப் பேறு நிறைந்து விளங்கும், பேரொளிமிக்க திருவடிகளை எப்போதும், அன்புகுன்றாமல் வணங்கித்துதிக்கும் நோன்பு உடைய சிவயோகியரின் அனுபவத்துக்கு உள்ளாகும் நாத இன்பமாகவும் நாதாந்த இன்பமாகவும் விளங்கும் குகப்பெருமான்.

(– என, அவனது மேன்மைகளைச் சிந்திக்க).

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம்.

நேரிசைவெண்பா.

3. மாண்டாங்கும் வேலா மலர்குவளை மார்பாவாண்
டாண்டுதோ றுங்குறை யாதவத்தம்-வேண்டான்ற
கொன்பேண் விபுத குருவேநோய் தாண்டாண்மை
யின்பே தரவருதி யின்று.

கலிவிருத்தம். காய் மா காய் மா.

மாண்டாங்கும் வேலா மலர்குவளை மார்பா
வாண்டாண்டு தோறுங் குறையாத வத்தம்
வேண்டான்ற கொன்பேண் விபுதகுரு வேநோய்
தாண்டாண்மை யின்பே தரவருதி யின்று.

பெருமை நிறைந்துள்ள வேற்படையோய்! நன்கு மலர்ந்துள்ள குவளைப்பூமாலை அணிந்துள்ள மார்பு உடையோய்! அவ்வத் தலங்களுக்கும் சென்று, என்றைக்கும் குறைவுபடாமல் திகழும் புண்ணியச் செல்வத்தையும் அருட்பேறுகளையும் வேண்டிப் பெற்று, நிறைவான உள்ளம் கொண்டு, தவப்பெருமையை என்றும் பேணிக் காத்துவரும் ஞானச் செல்வர்களுக்கு வாய்த் துள்ள குருவே! தீராநோயாக உள்ள ஆணவமலமாகிய பிணியை நீக்கவல்ல பேராண்மையாகிய இன்பத்தையே எனக்கு வழங்கும் பொருட்டு, இன்றே எழுந்தருள்க.

நேரிசைவெண்பா.

4. பாட்டாத்த சேந்தா பசுவெவையு நீதானாட்
டாட்டமரு ளென்றறி யார்வுகொள்ளென்-கூட்டாக்கை
நோய்தான் குலைய நுனியாது பீட்டாக்க
வாய்தான் பெருகவருள் வந்து.

கலிவிருத்தம். காய் மா காய் மா.

பாட்டாத்த சேந்தா பசுவெவையு நீதா
னாட்டாட்ட மருளென் றறியார்வு கொள்ளென்
கூட்டாக்கை நோய்தான் குலையநுனி யாது
பீட்டாக்க வாய்தான் பெருகவருள் வந்து.

திருமறைகளாகிய பாடல்களை வெளிப்படுத்திய, முழு முதல் இறைவனே! செம்மை நிறம் வாய்ந்துள்ளவனே! உயிர்க் கூட்டங்கள் அனைத்தையும் பிறப்புக்கும் இறப்புக்கும் உட்படுத்தி நீ ஆடும் பிரபஞ்ச நடனம், உனது திருவருள் விலாசத்தை உணர்த்துவதே ஆகும் என அறிந்துணரவல்ல ஆர்வத்தைக் கொண்டுள்ள எனக்கு, இனி வரக் கடவதாகிய பிறவி எனும் நோய் அடியோடு அழிந்துபட, என்மீது வெறுப்புக் காட்டாமல் இன்றே என்முன் வந்து, உன்னதமானதும் உசிதமானதுமான ஞான நெறியில் நான் பெரிதும் ஈடுபடும் வகையில் அருள்புரிவாயாக.

(ஆப்தன் என்பது ஆத்தன், ஆத்த எனத் திரிந்தது)

(ஆப்தன் – தன் நிறைவு வாய்த்துள்ளவன்; அறிவதற்கோ, செய்வதற்கோ வேறொரு துணை வேண்டாதவன்)

கலிவிருத்தம்.

5. மாடுடைமா டிவரொருவன் மாவடிவோ டுலவோர்
பீடுடையா னயிலவன்மண் ணோர்பெருமான் மனமாம்
வீடுடைவின் ணவனிமலன் வீரனடிக் களிசெய்
பாடுடையார் திருவினுய்வர் பாதமுற்றுய் குவரே.

நேரிசையாசிரியப்பா.

மாடுடை மாடிவ ரொருவன் மாவடி
வோடுல வோர்பீ டுடையா னயிலவன்
மண்ணோர் பெருமான் மனமாம் வீடுடை
விண்ணவ னிமலன் வீர னடிக்களி
செய்பா டுடையார் திருவி
னுய்வர் பாத முற்றுய் குவரே.

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம்.

கட்டளைக் கலித்துறை.

மாடுடை மாடி வரொருவன் மாவடி வோடுலவோர்
பீடுடை யான யிலவன்மண் ணோர்பெரு மான்மனமாம்
வீடுடை விண்ண வனிமலன் வீர னடிக்களிசெய்
பாடுடை யார்தி ருவினுய்வர் பாதமுற் றுய்குவரே.

வீறுமிக்க இடப வாகனத்தின் மேல் ஆரோகணித்துச் செல்லும் சிவபெருமானின் பெருமைமிக்க வடிவத்தோடு உலகம்தோறும் உலவிடும் ஒப்பற்ற சீர்த்தி உடையவன்; வேற்படை உடையவன்; அந்தந்த யோக பூமியில் அனுபவத்தால் உயர்ந்து இருக்கும் யோகியர்க் கெல்லாம் தலைவன்; நிலையான இன்பப்பேறு மயமானதும் சிதாகாச மயமானதுமான வீட்டுலகத்தை உரிமையாகக் கொண்டுள்ள தேவன்; இயல்பாகவே மலத்திலிருந்து நீங்கித் தூய்மை பெற்றிருப்பவன்; வீரன் என்னும் சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்பவன். இத்தகைய முருகப்பெருமானின் திருவடிகளிடம் மாறாத அன்பு பூண்டிருக்கும் செயற்பாடு உடையோர் அருட்செல்வப் பேற்றில் மேன்மேலும் உயர்ந்து நிற்பர்; அவனது திருவடிப் பேறாகிய முத்தி நிலையையும் எளிதில் அடைந்து, பந்தப் பிணிப்பிலிருந்து நிலையாக விடுபட்டு இருப்பார்கள்.

கலிவிருத்தம்.

6. மாலணைமான் மருகனுயர் மாதவர்நூ லவர்தே
வாலணைவே ணுவலருமெய் யாளனிறா மழவன்
வேலணைகை யழகனறை வீசடிக்கன் புளர்வன்
னீலணையா மதியினன்னர் நீடுநன்குய் குவரே.

நேரிசையாசிரியப்பா.

மாலணை மான்ம ருகனுயர் மாதவர்
நூலவர் தேவா லணைவே ணுவலரு
மெய்யா ளனிறா மழவன் வேலணை
கையழ கனறை வீசடிக் கன்புளர்
வன்னீ லணையா மதியி
னன்னர் நீடு நன்குய் குவரே.

கட்டளைக்கலித்துறை.

மாலணை மான்ம ருகனுயர் மாதவர் நூலவர்தே
வாலணை வேணு வலருமெய் யாள னிறாமழவன்
வேலணை கைய ழகனறை வீசடிக் கன்புளர்வன்
னீலணை யாம தியினன்னர் நீடுநன் குய்குவரே.

திருமால் அணைத்துக் கொள்ளும் இலக்குமியின் மருகன்; உயர்ந்த பெரும் தவச் செல்வர்க்கும், ஞானியர்க்கும் வாய்த்துள்ள முழுமுதல் தெய்வம்; தூய்மையே வடிவாக அணைந்துள்ள முருகவேள்; விரித்துக் கூற இயலாதவகையில் அளவற்ற பராக்கிரமம் வாய்ந்துள்ள சத்தியப் பரம்பொருள்; என்றும் நீங்காமல் இருக்கும் இளமை நலம் மிகப் பெற்றுள்ளவன்; வேற்படை தாங்கியுள்ள திருக்கரத்தை உடைய அழகன்; இத்தகைய பெருமைகளை உடைய முருகப் பெருமானின் நறுமணம் கமழும் திருவடிகளுக்கு அன்பு பூண்டிருக்கும் அடியார்கள் கொடிய அழுக்காக உள்ள ஆணவமலத்தால் ஏற்படும் மறைப்பு என்பது இல்லாத நிறைஞானப் பேறு வாய்த்தவர்களாய் நன்கு நீண்ட காலம் வாழ்ந்திருப்பார்கள்.

கலிநிலைத்துறை.

தானனந் தானந்த தானதனா தந்த தானதனா.

7. வேரியஞ் சேரிண்டை வேய்சுரனே தொங்கன் மீதுறுமோர்
சூரியன் போல்வென்றி வேலரசே துன்பு சூலருளீ
யாரியந் தாவிஞ்சு சீர்பரமே யென்றுள் கார்வெழமா
பாரியண் டாதுந்த வாவிரவாய் வண்டில் பாவலனே.

---

*இக்கலி நிலைத்துறை — அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தமாதலை நோக்கப் பிறிதுபடுபாட்டாகவும், கட்டளைக் கலித்தறை யாதலை நோக்கப் பகுபடுபாட்டாகவு மிருக்கின்றது. இவ்விதபேதம் முன்வந்த 5-6ஆம் விருத்தங்களிலும் பின்வரும் வெண்கலிப் பாக்களிலு முள்ளவாறு காண்க.

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தனனா தந்த தானதனா தான தந்தா தந்தனா.

சுரனே தொங்கன் மீதுறுமோர் சூரி யன்போல் வென்றிவே
லரசே துன்பு சூலருளீ யாரி யந்தா விஞ்சுசீர்
பரமே யென்றுள் கார்வெழமா பாரி யண்டா துந்தவா
விரவாய் வண்டில் பாவலனே வேரி யஞ்சே ரிண்டைவேய்.

கட்டளைக் கலித்துறை.

வேரியஞ் சேரிண்டை வேய்சுர னேதொங்கன் மீதுறுமோர்
சூரியன் போல்வென்றி வேலர சேதுன்பு சூலருளீ
யாரியந் தாவிஞ்சு சீர்பர மேயென்றுள் கார்வெழமா
பாரியண் டாதுந்த வாவிர வாய்வண்டில் பாவலனே.

தேனும் அழகும் மணமும் சேர்ந்துள்ள இண்டை மாலையை அணிந்துள்ள தேவனே! மலைமேல் எழுந்து ஒளிரும் சூரியன் இருளை நீக்குவது போன்று, எனது துன்பமாகிய இருளை அழித்து அருள் பொழியும் வெற்றி வேல் ஏந்தியுள்ள அரசனே! இணையற்ற மேன்மை பொருந்தியுள்ள அழகு நலம் மிகுந்தவனே! ஏனைய தெய்வங்கள் அனைத்தையும் இறைமையாலும் அருளாலும் விஞ்சிநின்று மேம்பட்டுள்ள சீர்த்தி மிக்க பரம் பொருளே! பொய்ம்மை, வஞ்சகம் முதலான குற்றங்கள் அற்றுள்ள பாவலனே! — என இவ்வாறெல்லாம் நினது பெருமையைச் சிந்திக்கும் ஆர்வம் கிளர்ந்து எழும் பொருட்டு, அனைத்துயிர் களிடத்தும் வியாபித்து நிறைந்துள்ள நினது ஆனந்த நிலை உள்ளத்துள் அலைபாய்ந்து எழ என்முன்னர் எழுந்தருள்! என்னுடன் இரண்டறக் கலந்து கொள்!

(ஆரியந்தா என்பதற்கு உமையம்பிகையின் செல்வக் குமாரனே எனவும் பொருள் கொள்ளலாம்)

பத்துப் பிரபந்தம்.

நேரிசையாசிரியப்பா.

(இதழ்குவிக்கு முயிரெழுத்து மெய்யெழுத்துந்
தீண்டாமற்பாடும்) நிரோட்டகம்.

8. நாரிணை நெஞ்சினர் நாயக னெஃகின
னாரியரி சீரிணை தங்கையெ னல்லா
டனதிளஞ் சேய்செறி தண்டா ரிணைசெங்
கனலா தார கண்டன் சகல
கலையே ரிணைகா னினையா
ரலலே யெய்த லாணை யன்றே.

கட்டளைக் கலித்துறை.

நாரிணை நெஞ்சினர் நாயக னெஃகின னாரியரி
சீரிணை தங்கையெ னல்லா டனதிளஞ் சேய்செறிதண்
டாரிணை செங்கன லாதார கண்டன் சகலகலை
யேரிணை கானினை யாரல லேயெய்த லாணையன்றே.

(உதடுகள் சேரா வகையில் ஒலிப்பதற்குரிய சொற்களை மட்டும் கொண்டுள பாட்டு. நிர்+ஓஷ்டகம்; ஓஷ்டகம் – ஓட்டகம் – உதடு)

தூய அன்பு செறிந்துள்ள உள்ளம் கொண்டுள்ள அடியார் களின் தலைவன்; வேற்படை உடையவன்; திருமகள் கேள்வனாம் திருமாலின் சீர்மைமிக்க தங்கையும், என் உயிர்க்கு நல்ல தாயும் ஆன உமையம்பிகையின் இளைய புதல்வன்; உடலில் பொருந்தியுள்ள வீணாதண்டம் எனப்படும் முதுகெலும்பின் அடிப்பாகத்தே சூக்கும அங்கமாகப் பொருந்தியுள்ளதும் மூல நெருப்புத் தானமும் ஆன மூலாதாரம் முதலான ஆதார நிலைகள் தோறும் எழுந்தருளும் தெய்வ வீரன்; இத்தகைய முருகப் பெருமானின் எல்லாக் கலை ஞானங்களுக்கும் இருப்பிடமாகப் பொருந்தியுள்ள இரண்டு திருவடிகளையும் சிந்திக்க இயலாதவர் கள் துன்பத்தையே அடைவர் என்பது அருள் உலகில் நிலவும் ஆணை அன்றோ!

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம்.

நேரிசையாசிரியப்பா.
(மேற்படி) நிரோட்டகம்.

9. ஆறணி செஞ்சடை யந்தண னந்தன
னாறிடத் தனீறணி யாக்கையர் நேயன்
சிகண்டிய னித்தியன் செஞ்சே றணிநச்
சகந்தேர்ந் தீயெ னாதி திறத்தண்
ணளியே றணிசார் தகையார்
களியேய் நெஞ்சக் கந்த னெஞ்சே.

கட்டளைக்கலித்துறை.

ஆறணி செஞ்சடை யந்தண னந்தன னாறிடத்த
னீறணி யாக்கையர் நேயன் சிகண்டிய னித்தியன்செஞ்
சேறணி நச்சகந் தேர்ந்தீயெ னாதி திறத்தண்ணளி
யேறணி சார்தகை யார்களி யேய்நெஞ்சக் கந்தனெஞ்சே.

கங்கை ஆற்றை அணிந்துள்ள சிவந்த சடைமுடியை உடைய அந்தணனாகிய சிவபெருமானின் திருக்குமாரன்; திருப்பரங் குன்றம் முதலான ஆறு தலங்களிலும் மூலாதாரம் முதலான ஆறு இடங்களிலும் எழுந்து அருள்பவன்; திருநீற்றை முறைப்படி அணிந்துள்ள திருமேனிப் பொலிவு மிக்க அடியார்களிடம் விருப்பம் கொண்டுள்ளவன்; மயிலை வாகனமாகக் கொண்டி ருப்பவன்; என்றும் அழியாதவன்; செம்மை நலப் பேறாகிய பேரின்பப் பெருநிலையை அடைய விரும்பும் உள்ளத்தின் பக்குவ நிலையைத் தேர்ந்து அருளவல்ல எனது ஆதி முதல்வனாகிய முருகனிடம், மாறாமல் பொருந்தியுள்ள அன்பு கொண்டுள்ள பெருமைமிக்க அடியார்களின் நெஞ்சத்தையே கோயிலாகக் கொண்டுள்ள கந்தன் – என, இவ்வாறெல்லாம், எனது நெஞ்சே, அவனது பெருமைகளைச் சிந்தித்து இரு.

வெண்கலிப்பா.
(மேற்படி) நிரோட்டகம்.

10. தனநிறை தெரியறரி தகையணெறி யரசிகன
னனிநிகழ் நயனனிச நறியகதி கணினையென
தினியரி கனெடிலயி லிறையடியி னததரணை
நனரளி செயினியைத னயன்.

கலிநிலைத்துறை.
தனதன தனன தனதன தனன தனன

தனநிறை தெரிய றரிதகை யணெறி யரசி
கனனனி நிகழ்ந யனனிச நறிய கதிக
ணினையென தினிய ரிகனெடி லயிலி றையடி
யினதத ரணைந னரளிசெ யினியை தனயன்.

கலிவிருத்தம்.
தனனதனன தனன தனனதன தனன.

தனநிறைதெரி யறரி தகையணெறி யரசி
கனனனிநிகழ் நயன னிசநறிய கதிக
ணினையெனதினி யரிக னெடிலயிலி றையடி
யினததரணை நனர ளிசெயினியை தனயன்.

ஞான அமிழ்தம் திரண்டுள்ள கொங்கைகள் முழுமையுற நிறையப் பெற்றுள்ள சக்தி, அனைத்து உலகங்களையும் உயிர்களையும் தாங்கும் பெருமை மிக்கவள்; உன்னதமான அருள் நெறிக்கு அரசி; "நெருப்பு கிளர்ந்து எழும் நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானுக்குரிய நன்மை மிக்க நிலையையே கருதியுள்ளனை" – என, எனது அன்புக்குரிய நல்லோர்களின் பகைமையைப் போக்கும் நீண்ட வேற்படை ஏந்தியுள்ள கடவுளின் திருவடிப் பேற்றுக்குரிய நன்னெறியை நன்கு கடைப்பிடிக்கும் வண்ணம் கருணையை வழங்கும் இனிய அம்பிகை – எனத் திகழும் பார்வதி தேவியாரின் திருக்குமரன் முருகப்பெருமான்.

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம்.

வெண்கலிப்பா.

11. நயமுள புதுநறவு கமழடியி னவையிறய
வியல்பெனை யுறவெணுக வினிமைதரு கவெயினக
ரயனரி வெருவவெழு கிரியதுபெ யரனடிக
ளுயரரி சுதைபிரிய முளன்.

கலிநிலைத்துறை.

தனதன தனன தனதன தனன தனன.

நயமுள புதுந றவுகம ழடியி னவையி
றயவியல் பெனையு றவெணுக வினிமை தருக
வெயினக ரயன ரிவெருவ வெழுகி ரியது
பெயரன டிகளு யரரிசு தைபிரி யமுளன்.

கலிவிருத்தம்.

தனனதனன தனன தனனதன தன்ன.

நயமுளபுது நறவு கமழடியி னவையி
றயவியல்பெனை யுறவெ ணுகவினிமை தருக
வெயினகரய னரிவெ ருவவெழுகி ரியது
பெயரனடிக ளுயர ரிசுதைபிரி யமுளன்.

ஒளிவீசும் நகரில் உள்ள பிரமனும் திருமாலும் அச்சம் கொள்ளும் வகையில் நெருப்புத் தூணாக-நிமிர்ந்து எழும் அருணாசலத்தின் திருப்பெயர் தாங்கிய அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்துள்ள சுவாமி; சிவநலத்தில் உயர்ந்துள்ள மானின் மகளாகிய வள்ளிப்பிராட்டியின் தூய காதலுக்கு உரிமை உள்ளவன் — ஆகிய முருகப்பெருமான், பேரின்பம் தரவல்ல புதிய தேன் மணம் கமழும் அவனது இரண்டு திருவடிகளிலும் குற்றமற்ற அன்பு பூண்டு ஒழுகும் நல்ல குணமானது என்னிடம் சிறந்து விளங்கத் திருவுளம் கொள்வானாக! இன்பப் பெருநிலையை எனக்கு வழங்கி அருள்வானாக!

இதன்கண்ணேயுள்ள கட்டளைக்கலித்துறைகள், பண்-நட்ட ராகத்தினும் பாட வியையும்.

பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம் முற்றிற்று.

குமரகுருபரன் றிருவடி வாழ்க.

பத்துப் பிரபந்தம்.

ஐந்தந்தாதியெனும்

பகுபடுபஞ்சகம்.

1. கட்டளைக்கலித்துறை.

சிவகந்தன் சீர்மயின் மேற்றிகழ் செய்யுந் தினமதொன்றி
னவகண்டஞ் சூழினன் றானமின் விஞ்சொண் ணகையிதென்னென்
கவலொன்றுங் காலவற் குட்கதி ரென்முக் கணிறையெஞ்சே
யவனங்கங் காணதென் றானரி வந்தித் தனனெழுந்தே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புளிமாங்காய் தேமா தேமா புளிமாங்காய் புளிமா தேமா.

சிவகந்தன் சீர்ம யின்மேற் றிகழ்செய்யுந் தினம தொன்றி
னவகண்டஞ் சூழி னன்றா னமின்விஞ்சொண் ணகையி தென்னென்
கவலொன்றுங் கால வற்குட் கதிரென்முக் கணிறை யெஞ்சே
யவன்ங்கங் காண தென்றா னரிவந்தித் தனனெ ழுந்தே.

புளிமா தேமா புளிமா, புளிமா கூவிளங்காய் தேமா.

சிவகந் தன்சீர் மயின்மேற் றிகழ்செய் யுந்தினம தொன்றி
னவகண் டஞ்சூ ழினன்றா னமின்விஞ் சொண்ணகைமி தென்னென்
கவலொன் றுங்கா லவற்குட் கதிரென் முக்கணிறை யெஞ்சே
யவனங் கங்கா ணதென்றா னரிவந் தித்தனனெ ழுந்தே.

தரவுகொச்சகக்கலிப்பா.

புளிமாங்காய் கூவிளங்காய் புளிமாங்காய் கருவிளங்காய்.

சிவகந்தன் சீர்மயின்மேற் றிகழ்செய்யுந் தினமதொன்றி
னவகண்டஞ் சூழினன்றா னமின்விஞ்சொண் ணகையிதென்னென்
கவலொன்றுங் காலவற்குட் கதிரென்முக் கணிறையெஞ்சே
யவனங்கங் காணதென்றா னரிவந்தித் தனனெழுந்தே.

பகுபடுபஞ்சகம்.

கலிநிலைத்துறை. பண் -நட்டராகம்.

புளிமாங்காய் கூவிளங்காய் புளிமாங்காய் புளிமா தேமா.

சிவகந்தன் சீர்மயின்மேற் றிகழ்செய்யுந் தினம தொன்றி
னவகண்டஞ் சூழினன்றா னமின்விஞ்சொண் ணகையி தென்னென்
கவலொன்றுங் காலவற்குட் கதிரென்முக் கணிறை யெஞ்சே
யவனங்கங் காணதென்றா னரிவந்தித் தனனெ ழுந்தே.

சிவகந்தன்=மங்கல சொருபியாகிய கந்தசுவாமியானவர், சீர் மயில்மேல் திகழ்செய்யும் தினம் அது ஒன்றில்= சீர்த்தி தங்கிய மயில் வாகனத்தில் ஆரோகணித்து விளக்கத்தைப் புரியும் ஒருநாளில், நவகண்டம் சூழ் இனன்=நவகண்டங்களையும் வலஞ்செய்கின்ற சூரியன் (அவ்விளக்கத்தைக் கண்டு), நமின் விஞ்சு ஒள் நகை இது என் என்=நம்மைக் காட்டினுமேம்பட்ட ஒள்ளிய (பெரிய) ஒளியாய இஃதென்னென்று (உணரகில்லானாய்), கவல் ஒன்றும் கால்=(மனத்தின்கண்) துன்பெய்து மமையத்தில், அவற்கு உள் கதிர்என் முக்கண் இறை=(ஒளி செய்வோனாகிய) அச்சூரியனுக்கு உள்ளொளியென விளங்குந் திரிநேத்திரங்களை யுடைய தலைவனாகிய சிவபெருமான், எம் சேய் அவன் அங்கம் அது காண் என்றான்=எம்முடைய குமாரனது (தேஜோ) ரூபம் அஃதாகும் காண்க என்றனன், அரி எழுந்து வந்தித்தனன்=சூரியன் (துண்ணென) எழுந்து நமஸ்கரித்தனன்.

சிவகந்தன் - சிவகுமாரனாகிய கந்தசுவாமி. திகழ்செய்யுந்தினம் - பிரகாசத்தைச் செய்யும் ஒருநாள் எனினுமாம். அல்லலாந்தொழில் படைத்தே யடிக்கடி யுருவெடுத்தே மல்லன் மாஞாலங்காக்க வரு கடவுளர் போலாது, "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாளன்" என்றபடி என்றும் விளங்குகின்றவரும், சிவகுமாரனு மாகலின் "சிவகந்தன்" என்றும், சுவாமிநாதனான இளையபிள்ளையாரைப் பணியார் உலகிலில்லாமையின் இவ்விறைவனை வணங்கும் யாவராலும் வந்திக்கப்படு சிறப்பு

வாய்ந்தது மயிலாகலானும், அம்மயில் பூர்வத்திற் சூரபன் மனாயிருந்த ஞான்று பல தேவ முனிவர்களாலும் பயத்தால் வணங்கப்பட்டும், மயிலுருக்கொண்ட பின்றைப் பிள்ளையாரைப் பரிக்கும் பெருமை கருதி அன்பால் வணங்கப்பட்டும் சீர்பொருந்தி நிற்றலானும் "சீர்மயில்" என்றும், "பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு" என்ற நக்கீரனார் கூற்றுப்போன்று கடலிற் பசுமையும் ஞாயிற்றிற் செம்மையுந் தோன்றியவாறு மயிலிற் பசுமையும் தந்திருமேனியிற் செம்மையுந் தோன்றக் குமாரக்கடவுள் நிற்றலின் "மயின்மேற்றிகழ் செய்யும்" என்றும், அநுக்ரகார்த்தம் இறைவன் உண் முகமன்றி வெளிமுகமாதல் ஒரோகாலத்தன்றி யென்று மின்மையால் "தினமதொன்றில்" என்றும், "உலகமுவப்ப வலன் ஏர்பு திரிதரு ஞாயிறு" என்றபடி உலக முழுவதும் களிப்பெய்த, அவ்வுலகினிடையேயுள்ள மேருவை வலமாகத் திரிதலைச் செய்யுமாற்றாற் பாரதம் கிம்புருஷம் ஹரிகேது மாலம் இளாவிரதம் ரம்மியம் ஹிரண்மயம் குரு பத்திராசுவ மெனப்படு நவகண்டங்களையுஞ் சூழ்ந்து வருகை சூரியனியற்கையாகலின் "நவகண்டஞ் சூழினன்" என்றும், உலகிலுள்ள ஒளிகட்கெல்லாம் பேரொளியாய் விளங்குகின்ற வனாகலின் தனக்கு மேம்பட்ட பேரொளிப்பிழம்பினைத் தன் புறக்கண்ணால் விளங்கக்கண்டு இன்ன தென்றோர்தற் கேலாது சூரியன் மனக்கவலை கொண்டிருந்தா னென்பார் "நமின் விஞ்சொண் ணகையி தென்னென் கவலொன்றுங் கால்" என்றும், சிவனார் காரணங்கட்கெல்லாங் காரணரும் "இமையாக் குஞ்சரமும் படங்கொள் நாகப்பாம்பணையும் பூவணையும்" தந்தருளினவரும்; சூரியசோமாக்கினிகளி னொளிக் கொளியாயிருந்து அவற்றைப் பிறங்கச் செய்பவரும்; காமனுக்குக் காமனும் காலனுக்குக் காலனும் உயிருக்குயிருமாய் விளங்குபவரும்; "அறிவே சிவமாயமர்ந்திருப்பான்" என்றபடி அறிவும்மயமாக நிற்பவரும்; "மஹாதேவ முமார்த்த க்ருதசேகரக் ஸோமஸூர்யாக்நி நயநம்" என்று அதர்வணவேத பஸ்மஜாபாலம் பகர்கின்றபடி சூரிய சோமாக்கினிகளுக்குக் காரணமான

திரிநேத்திரங்களையுடையவரும்; சூரிய மண்டலத்திற் சூரியாந்தரியாமியாய்ப் பர்க்க சப்தவாச்சியராய்க் காயத்திரிப் பொருளாயிருப்பவருமாகலின் "அவற்குட்கதிரென் முக்கணிறை" என்றும், யாம் ஸநகனாதியர்க் குபதேசித்த பரம்பரை யொன்றுபோல, எமது ஐம்முகங்களுடன் அதோ முகமொன்றுங் கூடி நின்று அறுமுகச்சிவமாகி யுணர்த்து பரம்பரை யொன்றாமெனத் தெரிக்கக் குமாரக் கோலங்கொண்டனம்: "மகனறிவு தந்தை யறிவு" ஆம்: யாம் ஸநகாதியர்க்குக் குரு: இவன் எமக்குக் குரு: எமக்குங் குமாரனுக்கும் வேறுபாடின்று: எம்பாலுற்ற குணங்களெல்லாம் இவன்பாலுள: இவனெம் குமாரனென்றுணர்கவென் றரனாரறிவித்தாரென்பார் "எஞ்சேய்" என்றும், குமாரப் பெருமானது திருவுருத்தேஜசைத் தரிசித்தற்கும் வழிபடற்கும் அவனருளாலே யவன்றாள் வணங்க வேண்டு வதாகலிற் கண்டு பணிகவென ஐம்முகச் சிவனாருணர்த்தின ரென்பார் "அவனங்கங்காண தென்றான்" என்றும், அங்ஙனம் உணர்த்த வுணர்ந்த சூரியன் அறுமுகச் சிவனாரைத் தரிசித்து மகிழும் ஆற்றலுற்றானாகி எழுந்து வாழ்த்தவாயும் நினைக்க மட நெஞ்சுந் தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைத் துதித்துப் பஞ்சாங்க ஷடங்க சாஷ்டாங்க நமஸ்காரங்களைச் செய்தன னென்பார் "அரிவந்தித்தனனெழுந்தே" என்றுங் கூறினர்.

தான் - அசை. ஏகாரம் - கட்டளைக் கலித்துறையி னீற்றிற் குரியது. இது பிற செய்யுட்கண் ஈற்றசையாம்.

உருத்திரராகிய சிவனார் பர்க்கசப்த வாச்சியரென்பதை, "பர்கோபர் ஜயதீ திவைஷ பர்கஇதி ருத்ரோப்ரஹ்மவாதிநோதபர்கஇதி" என்று சாமவேத மைத்ராயண்யுபநிஷத்தும், "பர்கஸ்த்ர்யம்பக:" என்று நிகண்டு அமரஸிம்ஹமும் கூறுதல்கொண் டுணர்க. பர்க்கர் தியானிக்கற்பாலர்: அவர் காயத்திரி மந்திரப் பொருளென்பதை மேலைய உபநிஷத்து "பர்கோதேவஸ்யதீமஹி" என்ற வழிக் காண்க.

பத்துப் பிரபந்தம்.

கலவத்தேரூர்ந்து வள்ளிநாயகியார் திருமாளிகை நோக்கி அதனை நடத்தும் அறுமுகச்சிவனாரது பேரொளிப்பிழம்பாந் திருமேனி விளக்கத்தை இற்றென்றுணர வியலாச் சூரியன் நம்மினும் மேலான சூரியன் வந்துளனோவென அர்த்தோதயனா யிருந்து வருந்துகையில் சிவபிரானார் "எம்போன்றவனும் எம்குமாரனும் சுவாமிநாதனுமாவானவன் தேஜோரூபத்தை நீ காண்க" என வுணர்த்த வுணர்ந்தெழுந்து பணிந்தனன் சூரிய னென்பதாம். (1)

2. கட்டளைக்கலித்துறை.

தேனார் சுமன்முரு கோன்மயி லேறச் சிகிதிகழ்தன்
வானார் குரல்கொடு மூடிட வேனிவ் வணமெனவேள்
கானார் வெயின்மரு வாவண மென்னக் கதிரயிலோ
னானார் பரன்மதி யென்றுதை யிட்டா னனிசெலவே

கலிவிருத்தம்.

தேமாங்கனி புளிமாங்கனி தேமாங்கனி புளிமா.

தேனார்சுமன் முருகோன்மயி லேறச்சிகி திகழ்தன்
வானார்குரல் கொடுமூடிட வேனிவ்வண மெனவேள்
கானார்வெயின் மருவாவண மென்னக்கதி ரயிலோ
னானார்பரன் மதியென்றுதை யிட்டானனி செலவே.

தரவுகொச்சகக்கலிப்பா.

தேமாங்காய் கூவிளங்காய் புளிமாங்காய் கருவிளங்காய்.

தேனார்சு மன்முருகோன் மயிலேறச் சிகிதிகழ்தன்
வானார்கு ரல்கொடுமூ டிடவேனிவ் வணமெனவேள்
கானார்வெ யின்மருவா வணமென்னக் கதிரயிலோ
னானார்ப ரன்மதியென் றுதையிட்டா னனிசெலவே.

கலிநிலைத்துறை, பண் - நட்டராகம்.

தேமா கருவிளம் கூவிளங்காய் கூவிளம் புளிமா.

தேனார் சுமன்முரு கோன்மயிலே றச்சிகி திகழ்தன்
வானார் குரல்கொடு மூடிடவே னிவ்வண மெனவேள்
கானார் வெயின்மரு வாவணமென் னக்கதி ரயிலோ
னானார் பரன்மதி யென்றுதையிட் டானனி செலவே.

பகுபடுபஞ்சகம்.

தேன் ஆர் சுமன் முருகோன் = தேன் பொருந்துதலையுடைய (கடப்ப) மலர் மாலையணிந்த இளைய பிள்ளையாராகிய இறைவன், மயில் ஏற=மயிலின் மீது ஆரோகணஞ் செய்ய, சிகி திகழ் தன் வான் ஆர் குரல்கொடு மூடிட=அம்மயிலானது விளக்கஞ் செய்வதும் ஆகாயமளாவுவது மாகிய தன் தோகையால் (இறைவனது திருமேனியை) மூடுதல் செய்ய, வேள் இ வணம் ஏன் என=(செவ்வேளாகிய) முருகக்கடவுள் (இலீலார்த்தமாக மயிலே! நீ) இவ்வாறு (என் திருமேனிப் பொலிவினை மறைத்தல்) செய்தல் யாதுகாரணமெனவினவ, கான் ஆர் வெயில் மருவா வண்ணம் என்ன=(மயிலானது) கானக மார்க்கத்திற் பொருந்தும் வெயில் வெப்பம் (திருமேனியில்) எய்தாத வகை (ஆகச் செய்தனன்) என்று சொல்ல, கதிர் அயிலோன்=ஒளியைச் செய்யும் வேற்படை தாங்கிய விமலன், நான் ஆர் பரன் மதி என்று=என்னை யாரென்று கருதினை மேலானவனென மதிப்பாயாக வென்று, நனிசெல உதையிட்டான்=நன்றாகச் செல்ல உதைத்தருளினன்.

பருவ மலருக்கு மணமுண்டு தேனுண்டு ஆகலின் "உருளிணர்க் கடம்பினொலி தாராயே" எனப் பரிபாடலும், "உருள்பசுந் தண்டார் புரளுமார்பினன்" எனத் திருமுருகாற்றுப் படையும், அதற்குத் "தேருருள் போலும் பூவாற் செய்யப்பட்ட போகத்திற்குரிய குளிர்ந்த மாலை யசையுமார்பினையுடையன்" என நச்சினார்க் கினியருங் கூறினாராகலின் "தேனார் சுமன்முருகோன்" என்றும், இறைவன் ஐராவதம், நாரதன் வேள்வியிலுதித்த தகர் முதலிய பல ஊர்திகளையுடைமையின் அவற்றுளெல்லாஞ் சீர்த்தி மிக்கு ஆயிரத்தெட்டண்டங்களையும் நூற்றெட்டுகம் அரசுசெய்த ஆற்றலுடைய சூரனாகிய மயூரவாகனத் தாரோகணித்து விளங்கினனென்பார் "மயிலேற" என்றும், அம்மயில் உச்சிக்கொண்டையாகிய சிகையை யுடையதும், பொன்னிற முதலிய பன்னிற முற்று விளக்கம் பெற்று ஆகாய மளாவு நெடிய கலாபமுடையது மாகலின் "சிகிதிகழ்

தன்வானார் குரல்” என்றும், அம்மயில் இறைவனைச் சுமக்கு மானந்தங்கருதித் திருமேனியை மறைத்துக்கொண்டு மெல்ல நடந்த தென்பார் “குரல் கொடுமூடிட” என்றும், விருப்பங்களை யெல்லாம் அருள்புரியுமவனாகலின் “வேள்” என்றும், முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டாதவாறு, என் அழகிய மேனிக்கு ஒரழகு செய்வாய் போல அதன் விளக்கத்தை மறைத்ததென்னெனக் கடாவினனென்பார் “ஏனிவ்வணமென” என்றும், அதற்குள்ளபடி விடைகூற மனமில்லாத அம்மயூரமானது இறைவனது அதிகோமள திவ்விய மேனியானது கான் வழிப்படர்கையிற் சூரியப் பிரபையால் வருந்தாவண்ணஞ் செய்தேனென விண்ணப்பித்த தென்பார் “கானார் வெயின்மரு வாவண மென்ன” என்றும், இறைவன் வில்வாள் அங்குச முதலிய பல படைகளையுடைய் னெனினும், தாரகன் சூரனாதியசுரரைத் தொலைத்து இந்திராதி யிமையவர்கட் கெல்லாம் அருள்புரிந்து ஞானசத்தியாய் விளங்குவது பிரகாசத்தோடு கூடிய வேற்படையேயாகலின் “கதிரயிலோன்” என்றும், நான் யாரென்பதனையும் என் பராக்கிரமங்கள் இத்தகைய வென்பதனையும் மறந்தனையோ? அறியாய் கொல்லோ? ஆயினுங் கூறுவல்-சர்வலோக நாயகனாகிய மேலானவனென்றறிதி: என் மூர்த்தங்களி லொன்றாகிய சூரியனது வெயில் வெப்பு என்னை நலிதல் செய்யாது: ஒழுங்கு பெறச்செல்க வென்று அதன் கருத்துணர்ந்த இறைவன் அதன் விடைக்கிசையவுதைத்தன னென்பார் “நானார் பரன் மதியென் றுதையிட்டா னனிசெல” என்றுங் கூறினர். “தேனார் சுமன் முருகோன்” என்றது கடம்ப னென்ப தொக்கும்.

“கானார் வெயில்” என்றது வள்ளி நாயகியார் திருமாளிகைக்குக் குறிஞ்சி நிலவழியில் எழுந்தருளுதலின் என்றும்; உதையிட்டான் என்றது அம்மயில் தன் காலத்திலும் முற்பிறப்பிலும் அதன் முற்பிறப்பிலும் இறைவன் பிரபாவங்களை யறிந்திருந்தும் மறைத்துக் கூறுதல் கூடாதென் றறிவித்தலைக்

கருணையாற் செய்தமை யென்றுங் கொள்க. மயில்வாகனங் குரல்கொடு மூடி இறைவனை நெடுநேரஞ் சுமக்குமானந்தங் கருதி மெல்ல நடந்ததும், வினாவுக்கு விடையிறுத்ததும் இன்ப அன்புக்கும் அறியாமைக்குஞ் சிலேடையாய் நிற்றலும்; இறைவன் வினவி உதைத்தருளினது நாயகியார் திருமாளிகைக்கு விரைந்து செல்லுமாறு தூண்டினதற்கும் மயக்கம் நீக்குங் கிருபைக்குஞ் சிலேடையாய் நிற்றலுங் காண்க.

குமாரக்கடவுள் குறிஞ்சி நிலநோக்கிக் கடவிச் செலுத்திய மயூரமானது மென்னடை தருமாறு தோகையால் திருமேனியை மறைப்ப, இறைவன் இஃதென்னெனெ, சூரியப் பிரபையை மறைத்த தாமென, தண்மை, வெம்மை முதலியவற்றால் இன்ப துன்பங்க ளெய்துகை பசுக்களுள் மாநுடர்க்கன்றி வானவர்க்கின்று: அவ்வானவர் தொழுஞ் சிவகுருநாதனும், சுவாமிநாதனுமாகிய யான் பதியாகிய பரனென்றறிந்து செவ்வே செல்க வென்று தூண்டினனென்பதாம். (2)

3. கட்டளைக்கலித்துறை.

செலவுதிப் பில்கந்த வண்ணல் சிலம்பருஞ் செல்வத்தரேய்
நலவடிக் கண்மன்னு மெங்க ணலங்கொனென் றுள்விம்முமா
லிலகரைக் கண்மன்ன னெய்தை யெனுங்கொலங் கண்மல்குபூ
ணலருரத் தின்மத்த கத்துள வுஞ்சொலும் மவ்வண்ணமே.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புளிமா தேமா தேமா தேமா புளிமா தேமா கூவிளம்.

செலவு திப்பில் கந்த வண்ணல் சிலம்ப ருஞ்செல் வத்தரேய்
நலவ டிக்கண் மன்னு மெங்க ணலங்கொ னென்றுள் விம்முமா
லிலக ரைக்கண் மன்ன னெய்தை யெனுங்கொ லங்கண் மல்குபூ
ணலரு ரத்தின் மத்த கத்து ளவுஞ்சொ லும்மவ் வண்ணமே.

தரவுகொச்சகக்கலிப்பா.

கருவிளங்காய் கூவிளங்காய் கருவிளங்காய் கூவிளம்.

செலவுதிப்பில் கந்தவண்ணல் சிலம்பருஞ்செல் வத்தரேய்
நலவடிக்கண் மன்னுமெங்க ணலங்கொனென்றுள் விம்முமா
லிலகரைக்கண் மன்னனெய்தை யெனுங்கொலங்கண் மல்குபூ
ணலருரத்தின் மத்தகத்து ளவுஞ்சொலும்மவ் வண்ணமே.

கலிநிலைத்துறை. பண் - நட்டராகம்.

கருவிளம் தேமாங்காய் தேமா கருவிளம் தேமாங்கனி.

செலவுதிப் பில்கந்த வண்ணல் சிலம்பருஞ் செல்வத்தரேய்
நலவடிக் கண்மன்னு மெங்க ணலங்கொனென் றுள்விம்முமா
லிலகரைக் கண்மன்ன னெய்தை யெனுங்கொலங் கண்மல்குபூ
ணலருரத் தின்மத்த கத்து ளவுஞ்சொலும் மவ்வண்ணமே.

செலவு உதிப்பு இல் கந்த அண்ணல்=இறத்தல் பிறத்தலில்லாத (நித்தியப் பொருளாகிய) கந்தப் பெருமானது, சிலம்பு= (திருவடியிலணியப்பெற்ற) சிலம்பு முதலிய காலணிகள், அரும் செல்வத்தர் ஏய்=அரிய (தவஞானச்) செல்வர்கள் அடையத்தக்க, நல அடிக்கண் மன்னும்=நலத்தைப்புரியும் திருவடிக்கண் நிலைபெற்றிருக்கும், எங்கள் நலம் கொன் என்று=எங்கள் மேம்பாடு எத்தகையது என்று, உள் விம்மும்=எண்ணுதல் செய்து ஒலிக்கும், இலகு அரைக்கண் மன்னல்=பிரகாசிக்கின்ற திருவிடையிலே நிலைத்திருத்தல், நெய்தை எனும்=(திருவடியினும் உயர்விடத்திருத்தலால்) பெருமையென்று பேசும், அங்கண் மல்குபூண்=அவ்விடத்திற் பொருந்திய அரைப்பட்டிகை முதலிய இடையணிகள், அலர் உரத்தில் மத்தகத்து உளவும்=பரந்த திருமார்பிலும் திருநெற்றியிலும் திருமுடியிலும் பொருந்திய ஆரம் பட்டம் கிரீட முதலியனவும், அ வண்ணம் ஏ சொல்லும்=அவ்வகையே (ஒன்றினொன்று உன்னத ஸ்தானத்தி லிருக்கின்றோமென்று தம்மைப் புகழ்ந்து) சொல்லா நிற்கும்.

"சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர் கண்ணூனந் தருவினீழல்-இந்திரற்கோ பகக்குறியா மியமனுக்கோ புழுக்காலா மிரவி யீன்ற-மைந்தனுக்கோர் கான்முடமாம் வனசனுக்கோர் தலைகுறையாம்" என்றும், "தீய வசுரர் பகையுண்டு செற்ற மார்வமிகவுண்டு-நோயுண் டனங்கனாருண்டு நோய்கட் கெல்லாந் தாயான-காயமுண்டு கைதொழவேண் டினரு முண்டு கற்பத்தே-மாயுந் தன்மை யுண்டானால் வானோர்க்கென்ன வளனுண்டே" என்றும், "நூறு கோடி பிரமர்க ணொங்கினார்-ஆறு கோடி நாராயண ரங்ஙனே-ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்-ஈறி லாதவ னீச னொருவனே". என்றும் வரும் இவையனைய பிரமாணங்களானே எல்லாத் தேவர்களும் சதுர்முகப்பிரமன் தைக்குஞ்சட்டையும், விதிவழித் தருமன் வெட்டுங்கட்டையுமாய் வினைக்கீடாகத் தநுகரண புவன போகங்களை நுகர்ந்து புண்ணிய மகன்றவழி மீண்டும் பல பிறவியடைவார்போலல்லாது "பெம்மான் முருகன் பிறவா னிறவான்" எனும் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளி னமுதவுரையின்படி இறத்தல் பிறத்தல்களில்லாதவனும் உயிர் கவருங் கர்த்தாவாகிய இயமனுக்கு இயமனும், சிருட்டி கர்த்தாவாகிய பிரமனுக்குப் பிரமனுமாக விளங்குகின்றவனும் "உனது தாய் உலக சராசர மெவையும் ஒருங்குடன் பூத்தவளுந்தை-கனபரிபுரண சுத்தனின்றமையன் காரிய முதல்வனுன் மாமன்-வனசனாதியர்கள் பணிபதனிவர்கள் வளனெலா முனக்குரித் திதனால்-வினவு செல்வத்துட் செல்வனீ போரூர் வீழிவா ழாறுமாமுகனே" என்றபடி எல்லா மேம்பாடுகளும் பெற்றுள்ள வனும் குமாரக் கடவுளேயென்பார் "செலவுதிப்பில் கந்த வண்ணல்" என்றும், இறைவன் திருவடி, மக்களை மனைவியை யொக்கலை .யொரீஇத் தளர்வுறும்யாக்கை தளர்வித்துத் தவஞ்செய்தும், இல்லறநின்றே பல்லறமியற்றிச் சடக்கர மநுவைச் சதாகாலமும் ஜபித்தும், அண்ணலா ரடியை மறவாது துதித்தும் அடைதற் கரியபெருஞ் செல்வர்களா னெய்தற்குரியதும் ஆகலின் "பெருஞ் செல்வத்தர் ஏய் அடி" என்றும், அத்திருவடி, திருமால்

பிரமனாதி தேவர்களின் அடியுற்றார் அவ்வத்தேவர்க் கறுதியிட்ட காலவளவிலே அப்பதங்களழிய அழிதல் போலாது, தன்னை யடைந்தாரைச் சமானாதிக ரகிதமான நிரதிசயானந்த அற்புத ஞான நிலையில் என்றும் இருத்துதலின் “நலவடி” என்றும், அத்தகைய பெறுதற்கரிய பேறாகிய திருவடிக் கண் நிலைபேறாக விளங்கத்தக்க எம் பெருமையிருந்தவா றென்னென அகங்களி துளும்பிச் சிலம்பு ஒலித்த தென்பார் “சிலம்பு........ நலங் கொனென்றுள் விம்மும்” என்றும், திருவடியிலுள்ள சிலம்பு முதலிய காலணிகள் இவ்வாறு களிக்கக்கண்ட திருவரை திருவுரம் திருமத்தகம் முதலிய உன்னத ஸ்தானங்களிலுள்ள அணிகள், அக்காலணிகளிருக்கு மிடத்தினு முயர்ந்தவிடத்தில் இருத்தல் கருதித் தத்தம் பெருமையைப் புகழ்ந்து பேசிக்களித்தனவென்பார் “இலகரைக்கண்........பூண்” என்றும், “அலருரத்தின்....... அவ் வண்ணமே” என்றுங் கூறினர்.

பிறப்பிறப்பில்லாப் பெருமானாய அறுமுகச் சிவபிரானார் மயூரவாஹநாருடராய் விரைந்து சேறலாலசையும் அடித்தாமரை யிலணிந்துள்ள பாதசாலம் காற்சரியாகிய பரியகம் பாத கிண்கிணியாகிய பரிபுரம் சிலம்பு சதங்கை கழல் முதலிய காலணிகள் ஒலித்தலை, தவஞானச் செல்வர்களேயன்றி ஏனையோர் அடைதற்கரிய திருவடியை நிலைபேறாயடையப் பெற்ற நம்மேன்மை யென்னவெனக் களித்துரைத்ததாகவும்; இடையின்கணணியப் பெற்ற அரைப்பட்டிகை அரைஞாண் கச்சு மதலிகை யெனப்படு தொங்கல் முதலிய இடையணிகள் விளக்கம் புரிதலையும், மேலிடத்து மேவுதலையுமே அவை சிறப்பெனக் களிகூர்ந்தனவாகவும்; கண்டிகை, ஆரங்கள், மதாணி, மலர் மாலை, சரப்பணி முதலிய மார்பணிகளும், பட்டம், சுட்டி, சூட்டு கிரீடம் முதலிய சிரவணிகளும் அங்ஙனமே களிசிறந்தனவாகவுங் கற்பித்தலங்கரித்துரைத்ததாம். (3)

பகுபடுபஞ்சகம்.

4. கட்டளைக்கலித்துறை.

வண்ணந் திகழுந் திருமால்வண் போதயன் வாழ்வினையா
டிண்ணங் கெழுசிங் கனையான்றின் றேனெனுஞ் சேயொளிர்கை
யண்ணம் பெறுவச் சிரம்வேலன் னோனர சாருயிரை
யுண்ணென் றிறநன் றெனுமாலொண் டேவரு முட்குறவே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேமா புளிமா புளிமா தேமா புளிமா புளிமா

வண்ணந் திகழுந் திருமால் வண்போ தயன்வாழ் வினையா
டிண்ணங் கெழுசிங் கனையான் றின்றே னெனுஞ்சே யொளிர்கை
யண்ணம் பெறுவச் சிரம்வே லன்னோ னரசா ருயிரை
யுண்ணென் றிறநன் றெனுமா லொண்டே வருமுட் குறவே.

கலிவிருத்தம்.

தேமாங்கனி கூவிளங்காய் தேமாங்கனி கூவிளங்காய்

வண்ணந்திக முந்திருமால் வண்போதயன் வாழ்வினையா
டிண்ணங்கெழு சிங்கனையான் றின்றேனெனுஞ் சேயொளிர்கை
யண்ணம்பெறு வச்சிரம்வே லன்னோனர சாருயிரை
யுண்ணென்றிற நன்றெனுமா லொண்டேவரு முட்குறவே.

கலிநிலைத்துறை. பண் - நட்டராகம்.

தேமா புளிமாங்கனி தேமா கூவிளம் கூவிளங்காய்

வண்ணந் திகழுந்திரு மால்வண் போதயன் வாழ்வினையா
டிண்ணங் கெழுசிங்கனை யான்றின் றேனெனுஞ் சேயொளிர்கை
யண்ணம் பெறுவச்சிரம் வேலன் னோனர சாருயிரை
யுண்ணென் றிறநன்றெனு மாலொண் டேவரு முட்குறவே.

சேய் ஒளிர்கை அண் அம் பெறுவச்சிரம்=குமாரக் கடவுளின் பிரகாசிக்குந் திருக்கரத்திற் பொருந்திய (படைகளில்) அழகு வாய்ந்த வச்சிராயுதமானது, ஒள் தேவரும் உட்கு உற=விளக்கமமைந்த விண்ணவர்களும் நாணெய்துமாறு, வண்ணம் திகழும் திருமால்=நிறம் விளங்குந் திருமால், வள்போது

அயன்=வளந்தங்கிய தாமரை மலரிலெழுந்தருளிய பிரமன் (ஆதிய தேவர்களது); வாழ்வினை ஆள்=வாழ்க்கையை ஆளுதல் புரிந்த, திண்ணம் கெழு சிங்கனையான் தின்றேன் எனும்=வலிமை மிக்க சிங்கமுகாசுரனை யான் உயிர் பருகினே னெனக்கூறும். வேல்=(அவ்விறைவனுடைய பிறபடைகளிற் சிறந்த) வேற்படை யானது, அன்னோன் அரசு ஆர் உயிரை=(வச்சிராயுதமே!) அச்சிங்கமுகாசுரனது தலைவனாகிய சூரபன்மனது அரிய வுயிரை, உண் என் திறம் நன்று எனும் = உண்ட எனது வல்லமை சிறந்தது எனக் கூறாநிற்கும். ஆல் = அசை.

விஷ்ணுமூர்த்தி தனக்குரிய தாமசகுணத்திற்கேற்ப நித்திரை, சோம்பு, பக்தவஞ்சனை முதலிய குணங்களுடன் மேகம், கடல், காயாம்பூ இவற்றை யொத்த கரிய வண்ணனாக விளங்குதலானும், திருமகள் கணவனாகலானும், மயக்கினைச் செய்வோனாகலானும் "வண்ணந் திகழுந் திருமால்" என்றும்; "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" எனக் கூறப்படுதலின் "பொழுதின் மலர் வுடையது போது" எனப்பட்டு, பிற கமல மலர்கள் போலாது சகத்திர தளங்களுடன் கூடிய தாமரையினிடத்திருந்து சிருட்டி புரிவோனாகலின் "வண் போதயன்" என்றும்; திருமாலாதி தேவர்களையெல்லாம் தன் கட்டளை கோடாது நடத்துவித்து, அவ்வவரை அவ்வப்பதவியில் அமர்த்தவும் அகற்றவும், ஆற்றல் பெற்றிருந்தவனாகலின் சிங்கனை, "திருமால்" "அயன் வாழ்வினையாள் திண்ணங்கெழு சிங்கனை" என்றும்; முருகவேளின் முண்டகத் திருக்கரங்கள் பன்னிரண்டும் பல்வேறு படையேற்றுப் பல தொழில் புரியுமாகலின், அவற்றில் ஒரு திருக்கரத்தேற்ற வச்சிரப்படை, சிங்கனைச் சங்கரித்தமையின், தன்னுள் அது தருக்கிப் பிறபடைகளை நோக்கி, ஆயிரஞ் சிங்கமுகங்களும் இரண்டாயிரங் கரங்களுமுள்ளவனாய் மாயாவியாயிருந்த சிங்கமுகாசுரனைக் கொன்றேனெனப் பிரதாபத்தோடு கூறிற்றென்பார் "சிங்கனையான் தின்றேனெனுஞ் சேயொளிர்கை அண்ணம் பெறுவச்சிரம்" என்றும்; அங்ஙனஞ்

சிங்கனைக்கொன்றது பல தேவர்க்கும் புரிந்த உதவியேயாகினும், அவர்கள் பின்னிடத் தான் முன்னிட்டு இக்கரும முடித்தமையின், அவர் நாணுறும்படி செய்ததென்பார் "ஒண்டேவருமுட்குற" என்றும்; சிவபெருமான் குமாரக்கடவுளை நோக்கிச் சூரனாதியரைத் தொலைத்துச் சுவர்க்க லோகத்திற் சுரரைக் குடியேற்றி வருகவெனக்கூறிப் பதினோ ருருத்திரர்களைப் பதினொரு படையாகவுஞ், சத்தியை வேற்படையாகவும் விளங்கக்கொடுத்து விடுத்தமையின் அப்பெரும்படை, சிங்கன் முதலிய கணக்கிறந்த அசுரர் தொகுதிகட்கெல்லாம் அரசனாகிய சூரபன்மனது அரிய உயிரையுண்ட என் வல்லமை மிகச் சிறந்ததெனத் தன் முன்னர்த்தருக்கிக் கூறிய வச்சிரப் படையினது பெருமிதமடங்கக்கூறிய தென்பார் "அன்னோனரசாருயிரை உண்ணென்றிற நன்றெனும்" என்றுங் கூறினர்.

"ஒண்டேவரு முட்குற" என்றதை வேலுக்குக் கூட்டினு மமையும்.

அக்கினி சுடாமலெரியவும், இயமன் ஓரசுரனையும் கொல்லாதொழியவும், வருணன் வீதிகளிற் பனிநீர் முதலியவற்றை வாசனையுடன் தெளிக்கவும், வாயு வீதியிலுள்ள குப்பைகளை யெடுத்துப் புறத்தெறியவும், பிற தேவர்கள் பிற குற்றேவல் குயிற்றவும, சில தேவர் கடலிற் சென்று மச்சம் பிடித்து நிச்சலும் வழங்கவும், சூரியன் மகேந்திரபுரியிற் சுடுகிரணமின்றிப் புறஞ்சூழ்ந்து செல்லவும், சந்திரன் வளர்வுந் தேய்வுமின்றிச் சோடசகலையுடன் நாடோறும் பிரகாசிக்கவும், பிரமன் நாடோறும் அங்க மைந்துங் கூறிச் செல்லவும், திருமால் வேண்டுந் தோறும் வந்து ஆலோசனை சொல்லவும் சூரபன்ம னரசு நிகழ்ந்தமையின் "மால்வண்போதயன்" என்றவிடத்து, "ஒரு மொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே" என்றபடி ஆதிய பிறதேவர்கள் என்பது வருவித் துரைக்கப்பட்டது.

"அன்னோனரசாருயிரை" என்றது, சூரபன்மன் ஏனைய அசுரரையுந் தேவரையும் பூதரையும் மானவரையும் போலாது சூரனும் பதுமனுமாகிய இருவருமொருவடிவா யுதித்து நிகழ்ந்த உயிராகலினென்க. ஆருயிர் = அருமை + உயிர்.

அறுமுகச்சிவனார் ஆபரணங்கள் தத்தம் பெருமையைப் பேசுதனோக்கிய ஆயுதங்கள், அங்ஙனமே தத்தம் ஆற்றலையு மெடுத்துப் பேசியதாக் அலங்கரித் துரைத்ததாம். (4)

5. கட்டளைக்கலித்துறை.

குறமக டன்னகஞ் சேர்ந்தகொன் னேறு குகனயிலோன்
விறலரு ணன்கரப் பூஞ்செண்டம் மார்பு விரையணிபார்த்
தறவளை பன்னகம் போன்றதென் னென்ன வதுவெலிபோற்
சிறுகுற லென்னெனப் போகிலார்ப் புற்ற சிவணியவே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கருவிளம் கூவிளம் தேமா தேமா புளிமா புளிமா

குறமக டன்னகஞ் சேர்ந்த கொன்னே றுகுக னயிலோன்
விறலரு ணன்கரப் பூஞ்செண் டம்மார் புவிரை யணிபார்த்
தறவளை பன்னகம் போன்ற தென்னென் னவது வெலிபோற்
சிறுகுற லென்னெனப் போகி லார்ப்புற் றசிவ ணியவே.

தரவுகொச்சகக்கலிப்பா.

கருவிளங்காய் புளிமாங்காய் தேமாங்காய் கருவிளங்காய்

குறமகடன் னகஞ்சேர்ந்த கொன்னேறு குகனயிலோன்
விறலருணன் கரப்பூஞ்செண் டம்மார்பு விரையணிபார்த்
தறவளைபன் னகம்போன்ற தென்னென்ன வதுவெலிபோற்
சிறுகுறலென் னெனப்போகி லார்ப்புற்ற சிவணியவே.

கலிநிலைத்துறை. பண் - நட்டராகம்.

கருவிளம் தேமா தேமாங்காய் தேமாங்காய் கருவிளங்காய்

குறமக டன்ன கஞ்சேர்ந்த கொன்னேறு குகனயிலோன்
விறலரு ணன்க ரப்பூஞ்செண் டம்மார்பு விரையணிபார்த்
தறவளை பன்ன கம்போன்ற தென்னென்ன வதுவெலிபோற்
சிறுகுற லென்னெ னப்போகி லார்ப்புற்ற சிவணியவே.

குறமகள் தன் அகம் சேர்ந்த=எயினர்குல மீடேற அவதரித்த சிறுமியாகிய வள்ளிநாயகியாரது திருமாளிகையைச் சார்ந்த, கொன் ஏறு குகன் அயிலோன்=பெருமை மிகுந்த குகப் பெருமானாகிய வேலாயுதக் கடவுளது, விறல் அருள் நல் கரம் பூசெண்டு=வெற்றியை யருள்புரியும் நல்ல திருக்கரத்திற் பொருந்திய மலர்ப்பந்தானது, அம்மார்பின் விரை அணி பார்த்து=அழகிய திரு மார்பிலணியப்பெற்ற மணங் கமழும் (கடப்ப) மலர் மாலையை நோக்கி, அறவளை பன்னகம் போன்றது என் என்ன = நீ மிகுதியும் வளைந்து பாம்பினை யொத்திருத்தல் யாதுகாரணமென வினவ, அது எலிபோல் சிறுகுரல் என் என= அம் மலர்மாலை நீ எலியைப் போலக் குறுகி யிருத்தல் யாது காரணமென (த் திருப்பி)க் கடாவ, சிவணிய போகில் ஆர்ப்பு உற்ற=(வள்ளி நாயகியாரது திருமாளிகையில் மலரும் பருவத்தனவாய்ப்) பொருந்தியிருந்த அரும்புகள் நகையினைச் செய்தன (மலர்ந்தன).

விறல் அருள் நன் கரம் என்றது கருணைபுரியும் நல்ல அபயாஸ்தமென்றும், அருணன் கரம் எனப் பிரிக்கப்பட்டுச் சூரியன்போலுஞ் சிவந்த திருக்கரமென்றும் பொருள்படும்.

தேவியாரது வேட்கையினை முடிப்ப அதிகாலையில் மயிலூர்ந்து போந்த மாணிக்க வண்ணனாகிய இறைவன் பலநிலங் கடந்து குறிஞ்சி நிலத்துக் குறிச்சியை யடைந்து, ஆங்கு எயினர்குலம் ஈடேறும்படி அம்மன்னன் வளர்க்க மகளாய் வளர்ந்த மரகதவடிவின ளாய வள்ளிநாயகியார் திருமாளிகையை

யடைந்தனனென்பார் "குறமகடன்னகஞ் சேர்ந்த" என்றும்; அங்ஙனஞ் சென்ற கடவுள் தேவநாயகனும் சேனாபதியும் சிவகுருவுமாய்ப் பெருமை மிக்கவனும், கந்தகிரியும் பரங்கிரி முதலிய பல்வேறு தலங்களும் குன்றங்களும் இடமாகக் கோடலன்றி அடியவர் மனமாகிய குகையையும் இடமாகக் கொண்டவனும், வேற்படை யேந்தியவனுமாவனென்பார் "கொன் னேறு குகனயிலோன்" என்றும்; தன்னை யடைந்தோரது ஆணவாதி பந்தங்களை யகற்றி இஷ்டகாமியமுதல் முத்திவரையி லாம்பயன் கொடுக்கும் இயற்கையது அபயாஸ்தமாகலின் அதனை "விறலருணன் கரம்" என்றும்; அவ் வபயாஸ்தத்திற் றாங்கிய மலர்ச்செண்டானது திருமார்பிலணிந்த கடப்பமாலை வளைவுற்றிருத்தலை நோக்கி நீ மிகவும் வளைந்து பாம்பு போலிருத்தல் ஏன் என உல்லங்கனமாக வினாவிற்றென்பார் "அறவளை பன்னகம் போன்ற தென்னென்ன" என்றும்; அம்மாலை, மலர்ச்செண்டு இறைவனது திருக்கரத்தடங்கிச் சிறுகியிருத்தலை நோக்கி நீ யென்னைப் பாம்பெனப் பகர்ந்தனை அப்பாம்பினால் நுகரப்படும் எலிபோல நீ சிறுகியிருத்தல் ஏன் எனத் திருப்பிக் கடாவிற்றென்பார் "அது எலிபோற் சிறுகுற லென்னென" என்றும்; அரும்புகள் மாலைக் காலத்தில் மலரும் இயற்கையால் மலர்ந்ததைப் "போகிலார்ப்புற்ற சிவணிய" என்றுங் கூறினர். கொன் ஏறு என்றதற்கு இறைவன் குறிஞ்சி நோக்கி சென்றதுபற்றி வலிய சிங்கமெனப் பொருள்கூறினு மிழுக்காது.

"வளை பன்னகம்" இதனை வினைத்தொகையெனக் கொண் டால் மீண்டும் வளைந்து என்பது முதலியன கொண்டுகூட்டாக வருவித் துரைக்க வேண்டுதலின் அங்ஙனமின்றி, விகுதி குறைந்த வினையெச்சமாகக் கொள்ளப்பட்டது. போகில் = அரும்பு. அரும்புகள் மலர்தல் மாலைக் காலத்தை யுணர்த்தி நின்றது.

இறைவன் அணிகள் களிகூர்ந்ததையும், ஆயுதங்கள் ஆர்ப்பரித்ததையுங் கண்டு கேட்டுக் கழிபேருவகை கொண்ட மலர்ச் செண்டு, தெரியலென்பவைகளும் தம் மகிழ்ச்சியால் நகைச்சுவை பொருந்த வசனித்தனவாகவும், அரும்புகள்

மலர்தலையே அவ்வசனங்களைக் கேட்டு நகைத்தனவாகவும் அலங்கரித் துரைத்ததாம்.

"அடியடி தோறு மைஞ்சீ ராகி - முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக் - கடையொரு சீரும் விளங்கா யாகி - நேர்பதி னாறே நிரைபதி னேழென் - றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே" எனுஞ் சூத்திரப்படி இந்நூற்கண் வந்த கட்டளைக்கலித்துறை ஐந்தனுள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பாட்டுக்க ளாதலானே, அவ்வைந்து மொன்றற்கொன்று பேதமே யென்பதையும்; 3-ஞ் செய்யுளடிகளின் ஈற்றுச்சீர்கள் "சொல்லாரும் வல்லின மெல்லின மோடிடைத் தோன்று மொற்று-நில்லாது நேர்நிரை நேராய் முடியு நிரம்பியநூற்-கல்லாத மாந்தர்க டேமாங் கனியென்பர் கற்றுணர்ந்த - நல்லார்கள் யாவருங் கூவிளங் காயென நாட்டுவரே", எனும் விதிப்படிக் "கூவிளங்காய்" எனும் வாய்பாடுடையன வென்பதையும்; சொல்லும் பொருளும் வேறுபடாமல் அடியுந் தொடையும் வேறுபட்டு வரும் பிறிதுபடுபாட்டிற்கு வேறாகச் சீர்களளவாகப் பிரிக்கப்படு மாற்றானே சந்தபேதத்தின் வெவ்வேறு செய்யுளாகப் பகுபடுதலையே இந்நூலாசிரியர் பகுபடுபாட்டெனும் மிறைக்கவியாக வமைத்தனரென்பது மறிக. ஒரு செய்யுள் 5-ஆகவும், 4-ஆகவும் பகுபடுதலிற் சிறந்த மிறைக்கவியாம். அருமறையினிருதயத்துள்ளதாய் விசேட மங்கல மொழியாய் விளங்கும் "சிவ" என்பதை முதற்கட்கொண்ட "ஐந்தந்தாதி" எனு மிந்நூல்-அந்தச் சிவவெனுஞ் சொல்லே யீற்றிலுற மண்டலித்து முடிக்கப்படுவ தாயிற்று.

இவற்றினின்றும் கட்டளைக்கலித்துறை வேறாகப் பகுபடுதலை யித்னோடுள்ள பிறிதுபடுபாட்டுப் பிரபந்தத்திற் காண்க. (5)

ஐந்தந்தாதி யெனும் பகுபடுபஞ்சக மூலமுமுரையும் முற்றுற்றன.

குமரகுருபரன் திருவடி வாழ்க.

சஷ்டி வகுப்பு.

குழிப்பு. (சந்தபேதம் - 32)

தந்தன தனதன தானன தானன
தந்தன தனதன தானன தானன
தனதன தனதன தானனா - தன -
தனதன தனதன தானனா

தத்தத் தனதன தத்தத் தனதன
தத்தத் தனதன தத்தத் தனதன
தந்த தனதன தானனா - தன -
தந்த தனதன தானனா

தனத்த தனதன தனத்த தனதன
தனத்த தனதன தனத்த தனதன
தான தானன தானனா - தன -
தான தானன தானனா

தானன தானன தானன தானன
தானன தானன தானன தானன
தத்த தனத்தன தானனா - தன -
தத்த தனத்தன தானனா

தனதன தனன தனந்த தானன
தனதன தனன தனந்த தானன
தனந்த தானன தானனா - தன -
தனந்த தானன தானனா

தானதன தந்தனன தத்தான தானதன
தானதன தந்தனன தத்தான தானதன
தனதன தனதன தத்தனா - தன -
தனதன தனதன தத்தனா

தனனதன தனதத்த தனனந் தனத்தா
தனனதன தனதத்த தனனந் தனத்தா
தனனதனா தானதத்த தானனா - தன
தனனதனா தானதத்த தானனா

சஷ்டி வகுப்பு.

தனனதன தத்தன தனனதன தாத்தன
தனனதன தத்தன தனனதன தாத்தன
தாந்தன தனதன தாந்தனா - தன -
தாந்தன தனதன தாந்தனா

தனன தனத்தன தாந்தன தந்தன
தனன தனத்தன தாந்தன தந்தன
தனன தனதன தந்தனா - தன -
தனன தனதன தந்தனா

தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தனத்த தனதன தானனா - தன-
தனத்த தனதன தானனா

தாந்த தந்தன தாந்த தந்தன
தாந்த தந்தன தாந்த தந்தன
தனதன தனதன தந்தனா - தன -
தனதன தனதன தந்தனா

தந்தந் தந்தன தந்தந் தனதன
தந்தந் தந்தன தந்தந் தனதன
தனந்த தான தனாதனா - தன
தனந்த தான தனாதனா

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தத்தா தத்தா தானதனா - தன
தத்தா தத்தா தானதனா

தத்ததன தந்ததன தத்ததன தந்ததன
தத்ததன தந்ததன தத்ததன தந்ததன
தனதன தத்தன தாந்தனா - தன -
தனதன தத்தன தாந்தனா

தன்னன தத்தன தன்னன தத்தன
தன்னன தத்தன தன்னன தத்தன
தானனத் தானன தையனா - தன -
தானனத் தானன தையனா

தனதன தனத்ததன தனதன தனத்ததன
தனதன தனத்ததன தனதன தனத்ததன
தானன தனன தானதனா - தன
தானன தனன தானதனா

பத்துப் பிரபந்தம்.

1. அந்தரர் முனிவரர் நாகர்க டானவ
ரங்கெழு மனுடர்க ணாடொரு வாழ்வுள
வரனுதல் விழிவரு தூயனே - யுமை -
யவண்முலை யமுதுணும் வாயனே

2. யத்தித் திருமுக நித்தற் கிளையவ
வப்புச் சுரநதி நச்சற் புதசுத
வண்டர் பதிபணி பாதனே - குண -
சந்த்ர னெனவரு நீதனே

3. யரத்த மலரினு நயத்த துகிரினு
மழுக்கி லழலினு மிகுத்த துவரொளி
ராக ஞானவி னோதனே - சிவ -
போக போதக நாதனே

4. யாசினி யாரறு மீன்மத லாய்தக
ராகிய வாகன மேறிய வானவ
வட்ட குணப்பர மேசனே - சிவ -
சித்தர் கணக்கிரு பேசனே

5. யளிபல குடையு மலங்க லோடெழி
லவிழ்மண முடைய கடம்பு மேபுனை
யகன்ற மார்புடை யாதியே - களி -
நிறைந்து ளோரடை சோதியே

6. யாடகந றும்பணிம ணிப்பூனெ லாமிளிர
வாசறுந டம்புரியி றைச்சீர றாமயிலி
னனுதின மமருமுன் மத்தனே - யர -
னொடுநவில் பிரணவ கத்தனே

7. யடலவுண குலமுற்று மழியும் படிக்கே
யசுரபதி வரையொத்த வுருவங் கிழித்தே
யவிரயிலார் நீடிருக்கை வீரனே - யென -
தளியகலா தூடிருக்கு நீரனே

சஷ்டி வகுப்பு.

8. யணிமதுகை யுற்றபல் பறவையர சாத்திரி
யதியுரமு டைக்கலு ழைமுனிசெ மாப்புய
ராண்டலை யணைகொடி யாண்டவா - குடை -
தோன்றிட வசையொரு தாண்டவா

9. வகிலம் வழுத்தரு ளாஞ்சுர குஞ்சரி
யரிய கொடிச்சிய வாம்படி வந்திக
ழழக முருகர விந்தனே - குளிர் -
நயன வறுமுக கந்தனே

10. யாழி சங்கநி லாவுகை மாயனு
மாத ரஞ்செறி பாரதி நேயனு
மருக்க னொளியன மேனியே - யுள -
வுருத்தி ரனுநினை ஞானியே

11. யாம்ப ரம்பர வோஞ்சி தம்பர
வான்ற துங்கம னாம்பு யந்தனி
லமர்குக சரவண சம்புவே - சுப -
மழைதரு மருளெனு மம்புவே

12. யஞ்சஞ் சும்படி யுந்தும்பெரியவ
ரண்டுஞ் செந்திரு நின்றின் புதவிடு
மனந்த வேத விலாசனே - நனி -
சிறந்த யோக வுலாசனே

13. யமுதம் விழைநல முடைய குறுமுனி
யதிக மகிழ்வுற வமுத வுரைநவி
லத்தா முப்போ தூறிலியே - யுயர் -
சத்தா சித்தா வீறிலியே

14. யற்றமறு கந்தகிரி யைக்கருது சிந்தையர
கத்துனித டிந்ததைய ளித்தருள வன்புசெயு
மகணித வற்புத சாந்தனே - பர -
சிவநிலை யைத்தரு சேந்தனே

15. யன்னையு மப்பனு மண்ணுக னிட்டனு
மண்ணனு மற்புறு செம்மலு மத்தனு
மாறெழுத் தானென வுள்ளியே - பல -
நூறெழுத் தார்கவி சொல்லியே

16. யலையுமெ னினைப்பிலுள குருபர தமிழ்க்கலைஞ
ரவையிடை மணித்தவிசில் வதியொரு திருப்புலவ
வார்வொடு பொருநர் சூழ்பரனே - துடி -
நாடக மதுசெய் மாசுரனே

17. *சுந்தர முறுகுற ணேரிசை காசறு
சிந்தியல் பலதொடை நாலடி கீரணை
தொகலறு சவலைக ளேகெடா - முத -
லுறுகவி யகவலி னேர்மைசேர்

18. சுத்தத் தொடர்புமி ரட்டைக் குறளிசை
துற்றத் தெகுள்கவி யற்றற் றமைவது
துண்டு படுகலி நாலிலே - யிசை -
சந்த முளகலி நூலிலே

19. தொடுக்க வருதர வுகொச்ச கமடிகள்
சுருக்க மறவரு மியற்ற ரவிணைசி *
லேயொர் தாழிசை தோல்களார் - பல -
வேயொர் தாழிசை மீறியே

20. சோர்வுமு றோர்கலி நேரிசை சேர்கலி
தூயசு வேதம தார்கலி சீறடி
துப்ப லையொத்துறு பாவரோ - நல -
கட்ட ளைபெற்றவொர் பாவரோ

"சுந்தரம்" என்றத் றொடக்கத்து இவ்விரண்டாமடி-பாவையும் பாவினத்தையும் பகர்கின்ற யாப்பிலக்கணமா யமைந்துளது. இலக்கியம் - திருவல்ங்கற் றிரட்டின் 2-ஆம் கண்டத்தினும் இப்பிரபந்தத்தினுங் காண்க. * சில் ஏய் ஓர் தாழிசை - சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

சஷ்டி வகுப்பு.

21. தொனிமலி குறள டிவஞ்சி சீர்மிகு
தொடையடி யுளவொ ருவஞ்சி யேமரு
டொடர்ந்த பாவிரு பாதமே - யுள -
குறைந்த தாழிசை நாதமே

22. தூவுடனி யங்குமொரு முத்தாள தாழிசைக
ளீரடிகொள் செந்துறைகண் முப்பாத மார்துறைக
டுரிசிறி ரிபதவி ருத்தமே - சது -
ரடியுடை யவெளிவி ருத்தமே

23. துறுமகவ லளவொத்து நிகழுஞ் சதுர்ச்சீர்
சிவணியிடு மொருமுப்ப தமுறுஞ் சிறப்பார்
தொடையுடையோர் தாழிசைச்சொ லேறுபா - வக -
வலதிழியா நீடுறைச்சொ லார்வதே

24. தொடையொலி மிகுத்தெழு நெடிலடியின் மேற்படு
மகவலின் விருத்தமு மிருபதம றாத்தளை
தோன்றொரு திரிபத நான்குமா - முடி -
வாம்பத மிகுகலி சேர்ந்தசீர்

25. துதையு மிழிப்பிசை நான்கடி யைந்துசி
ருடைய நிலைத்துறை மேன்கணி தம்பெறு
துறைக ளளவடி நன்குமே - வுரை -
பலவு முறுகலி யந்தமே

26. தோன்மு ழங்கிரு சீரடி நாலினே
மூவி தங்கிள ரோர்பொருண் மீதினேர்
சுரக்கு மியல்புடை யேசிலா - நறி -
யவச்சி யிசையிரு சீரினே

27. தோங்க ளங்கமி னான்க ரும்பத
மோங்கு வஞ்சியை யேய்ந்தி டுந்துறை
துகளறு துழனிகொள் சிந்துசேர் - சது -
ரடியுடை யிறுதியு மின்சொலே

28. துன்றுஞ் சந்தநெ டுஞ்செங் கவிசது
ரங்கம் பொங்ககி பந்தந் திகிரிகள்
சுருங்கு பாநல வேகபா - தமு -
மிகுந்த பாவெழு கூறுசீர்

29. சுலவு சுழிகுள முரசி ரதகவி
சுடரு மயிலயில் வினவல் விடைபிறி
துப்பா நற்கான் மாறுதலே - கர -
வுப்பா வொற்றே றாததுமா

30. சொற்சுவைகொள் பங்கிகள்ச துர்த்தமொர்த ரம்படுவி
கற்பநடை பங்கயமி னச்செயுள்கள் கொம்பிலது
சுகவித ழூற்றது கூம்புபா - முர -
ணுறுபசு முத்திர நோன்பொடே

31. சொன்னவர் மெச்சிட மின்னுதி ருப்புகழ்
பன்னிய வற்கரு ளின்னமு தக்கட
றோன்மரைப் பூவுறை செல்வமா - மரு
காவிருப் பாலென துள்ளுளே

32. தொடர்வெரு வறப்பெரிய வருள்புரி நினைப்பொடு
மறதியும்வி ளைக்குமிரு மலமத மறக்களை
சூர்தபு நினது சேணுளே - யுற -
வாகிட வருள்செ யாயினியே,

33. மந்திர விதிவழி பாறயிர் நீடுக
ரும்பிடை வருதெளி சாறிள நீர்நறு
மணமுள வுதகமெ லாமொரே - மன -
தொடுநல திருவபி டேகமே

34. மத்துப் பிரசமு மிட்டக் கனிகளு
மொட்பச் சுரபதி சிட்டிப் பவனரி
வஞ்ச மறுசிவ னாரெலா - மணி -
யொண்பொ டியெனபி டேகமே

சஷ்டி வகுப்பு.

35. வழுக்க ளறமிக விழைத்து ரியவுடை
யுடுத்து நவையற முறுக்கி யகனக
மார்பு நூலிட லேசெயா - விரை -
நாறு தேய்வைக ளேயிடா

36. மாலதி கூவிள நீபம சோகுக
லார*மி ராசிவ மாதிந றாமலர்
வைத்த புதுத்தொடை யேயிடா - வரி -
யட்ச தையிற்சில தூவியே

37. மருமலி புகைக ளெழும்ப வேபணி
யெரிசுடர் பலவு மிலங்க வேபணி
வளர்ந்த வாழை பலாவிளா - வுதிர் -
குளஞ்சி மாதுளை கோளியே

38. மாவினிய முந்திரிபு ளிப்பேயி லாவதரி
யாசினிக ளின்கனிகு வித்தேயெ ளோடுபொரி
வடையதி ரசமிடி யப்பமோ - தக -
மகலிலை யடையவல் பிட்டுமா

39. மதுரரச மருவுற்ற புனலின் றயிர்க்கூழ்
கடலைபல பயறுப்பொ டறுநன் சுவைச்சீர்
மலியநிலா வேநிகர்த்த பாகலே - யுய -
ரெகினமெலீ போலிருக்கு மோசையே

40. வரியவரை கத்தரி துவரைபுடல் பூச்சுணை
கொடிவெளரி கக்ரி யிவைகளது காய்த்திரள்
வான்படர் முனைவரும் வேண்டுமோர் - சுவை -
.தேங்கிய பலமுலம் வாங்கியே

---

*இராசிவம்=தாமரைப்பூ - இராசிவமென மரீஇயிற்று. வடநூலர் "ராஜீவம்" என்பர்.

41. மலர நறுக்குபு மூண்டெரி யங்கியி
லூரிய குணப்பதம் வீங்கவ யர்ந்திறை
வதியி லெழுசிறு செம்புநா - லிலை -
யுளது பசளைபொ னொன்றுமோர்

42. வாட னந்திய கீரைகொய் கீரைசில்
கீரை தண்டுறு கீரைகள் யாவையும்
வதக்கி நயனுற மூடியே - யிலை -
யிருத்தி நறுவய லூரிலே

43. வாய்ந்த தண்புனல் பாய்ந்த பைம்பயி
ரீன்ற வின்சுவை யார்ந்த செஞ்சிறு
மணிமிள கிவிலையு யர்ந்தசீ - ரக -
வரிசிய டிசில்பணி யன்பிலா

44. வண்டன் சண்டனி டம்பன் கொலையினன்
வம்பன் றுன்பின னெங்குந் திரிபவன்
மறங்கொ ளீனர்கள் காணொணா - வணம் -
வளைந்த சீரையு ளேயெலாம்

45. வரிசை நிரனிறை யிசையு மழகது
பெருகி யமர்வுற வடுவில் சுசியுடன்
வைத்தே நட்பா மேன்மனதோ - டுப -
டைத்தே நற்பா கேயிலையே

46. வட்டகையி னன்கமைய வைத்தமல சுந்தமல
ரர்ச்சனைபு ரிந்துபிர சித்தசிவ கொன்றலையில்
வகுளமு டித்தசு ரேந்திரா - வடி -
யவர்கள்ப ழிச்சுபு ராந்தகா

47. வன்னியு மத்தமும் வெண்மைய ருக்கமு
மன்னுபு யச்சிவ னண்ணுமொ ருத்திகை
மாமணித் தீபகம் வல்லியே - விழி -
யாயிரக் கோபதி செல்வியே

சஷ்டி வகுப்பு.

48. வதுவைசெ யருட்குமர மறைபுகழ் பரப்பிரம
வெனநனி துதித்தெமிட ரிறவரு ளெனப்பணியு
மாதவர் தலைவ னேநயனே - படர் -
பாளித மணிய னாமயனே,

49. இந்திர னலரயன் மாதவ னாதவ
னந்தக னறலிறை யீசனி சாபதி
யெரியிறை யளகையன் வாயுவீ - டுள -
நிருதிய ரிவறவர் பூதரே

50. யிட்டக் கருடர்கள் சித்துப் புருடர்கள்
செச்சைக் கினரர ருத்தப் பணிமிலை
யிஞ்சை யுடையபி சாசர்வே - ணியர் -
விஞ்சை யினரிசை பாடுவோ

51. ரியக்க ரிவர்பலர் விதித்த பணிசெய
வுடுக்கை திமிலைகள் பெருத்த பதலைக
ளேதி லாகுளி பேரிமா - முர -
சோடு தூரிய மாமுழா

52. வேணுடை யானகம் வானிடி போலிரை
யேதர வூதுபல் கோடுகள் காகள
மிக்கு மணிக்குழ லேமுகோ - லுள -
பொற்க லமெற்கிணி கோடியே

53. யிமிரொலி யிசைக டனந்த தானன
தனதன தனன தனந்த னாவெனு
மியம்ப.லேதர வானளா - முரு -
விலங்கி யானைகள் கோடியே

54. யேசறுபெ ருங்கிரிக ளைத்தாவு தூசிமுது
கானதுவ ளைந்திரவ ணப்பேரு லாமிருக
மெழுசத மெழுதர மிக்கதீ - பிகை -
முழுமதி நிகர்குடை பிச்சமே

55. யிணைசிவிறி விரிவட்ட மெனுநெஞ் சரைத்தான்
வருகவென வசைபொற்கை புரையுங் கொடித்தே
ரிரிதலிலா வார்கழைக்க ணேறுநீள் - கொடி -
சுழலருகா வேழிலக்க மாகவே

56. யிருபுறந டக்கவொர் பெரியதுச நாட்டிய
விரதமிசை யொப்பறு பவளமலை போற்படை
யேந்துபு வருபெரு வேந்தனே - கிரி -
சாய்ந்திட வயிலெறி காந்தனே

57. இகலுந ருக்கெம னாந்தனி மந்திர
வினியவ ருக்கினி தாங்குண பஞ்சர
விமையர் களிகொள வென்றுளே - யெணி -
யவர்கள் புரிதரு மங்களா

58. வேம பந்தன பூடண சேமனே
நாகர் சிந்தையி லேயுள வீமனே
யிடுக்க ணறுதவ ராஜனே - மறை -
முடிக்கு ளுளபர தேஜனே

59. யேங்கெ னெஞ்சினை யாய்ந்தி டுந்தயை
சான்ற சம்ப்ரம பூஞ்ச தங்கைக
ளிலகிடு பதபர மண்டலா - பக -
லனையக னமகர குண்டலா

60. வெங்குந் தங்குவி சும்புஞ் சிறிதென
மிஞ்சொண் பண்பொடு நின்றெங் குநிகழு
மிரண்டி லேகுவ னாதியே - கறை -
யிறந்த சாதம னாதியே

61. யிடரில் கலமுனி யுரிய சுகமுனி
யரைய முசுமுக னறிய பசுமுக
னிப்பார் மெச்சோர் கீரனுமே - னசை -
யுற்றோய் வற்றே சூழ்குரவா

சஷ்டி வகுப்பு.

62. வெட்டுமலை யுந்தகர வெற்றிமல ரங்கைகளி
லட்டகரிபந்தென வெடுத்த விறல் பம்பிளைஞ
விரணிய வெற்பெனு மாண்புசால் - பொறை -
யதனைய சைத்ததி லேய்ந்தகோ

63. டென்னுமு கட்டினை விண்ணிலி றைத்தகை
மன்னவ வைப்பசி மன்னிடு சட்டியி
லேபுசிப் பார்திரு வுள்ளமே - யெனை -
யாதரித் தாளருள் வெள்ளமே

64. யெவையும றிசித்துருவ மகுடமு டியுற்றவர்க
டொழுசடை முடித்திருவர் புரவல குணத்திரய
வேதமில் பெயர்க ளாயிரமே - யுள -
பாவகி துரியப ராபரமே.

உரை: நக்கீரன் வழியடிமை: புலவர் பி.மா. சோமசுந்தரனார்.

1. மேல் உலகத்தில் வாழும் தேவர்களும் முனிவர்களும் கீழ் உலகத்தில் வாழும் பாம்பு இனத்தவர்களும் அரக்கர்களும் அழகு கெழுமிய மக்களும் விரும்புகின்ற ஒப்பற்ற (பேரின்பப் பெரு) வாழ்வைத் தன்பால் வைத்திருக்கும் சிவபெருமானுடைய நெற்றிக்கண் வழியாக வெளிப்பட்ட தூயவனே! உமையம்மை யாரின் பாலையுண்ட திருவாய் மலர் உடையவனே!

2. யானைத் திருமுகமுடைய அழிவில்லாத விநாயகப் பெருமானுக்கு இளையவனே! நீர்ப்பெருக்கையுடைய தேவ நதியாகிய கங்கையானவள் விரும்பும் ஞான வடிவனாகிய மகனே! தேவ அரசன் ஆகிய இந்திரன் வழிபடும் திருவடியோனே! எண் குணங்களும் நிறைந்த அமுதம் பொழியும் சந்திரன் என்று அறவோர் போற்ற விளங்கும் அறவடிவனே!

3. செங்கடம்பு மலரும், யாவரும் விரும்பும் பவளமும், (ஏனைய பொருள்களின் அழுக்கைப் போக்கியும்) தன்பால் அழுக்குக் கூடாத தீயும் ஆகிய இவைகளினும் மிகுந்த செவ்வொளி வீசும்

திருமேனியுடைய ஞான வினோதனே! சிவஞானத்தை அறிவுறுத்தும் குரவன்மாரின் தலைவனே!

4. வானத்தில் விளங்கும் அறுமீன் ஆகிய கார்த்திகைப் பெண்களின் திருமகனே! ஆட்டை வாகனமாகக் கொண்டருளிய தேவனே! தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கையறிவினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை ஆகிய எட்டுக் குணங்களை உடைய பெரிய பொருள் ஆகிய ஈசனே! சித்தத்தைச் சிவன்பாலே வைத்த அடியார்களின் திருக்கூட்டத்துக்கு அருள் வழங்கும் செல்வனே!

5. வண்டுகள் தேனை நாடிக் குடையும் பல மாலைகளும் அழகோடு மணம் வீசும் கடம்ப மாலைகளும் அணிந்துள்ள அகன்ற திருமார்புடைய முதல்வனே! பேரின்பம் துய்த்தற்குப் பெரியோர் வந்து அடையும் ஒளிப்பிழம்பு வடிவினனே!

6. நவமணி நுதல் அணிஏர் நகைபல மிடற்றிலும் காலிலும் கலகலகல என மாக் கவினொடு நடம்புரியும் பெருஞ்சிறப்புடைய மயிலின் மீது என்றும் விளங்கும் பித்தனே! சிவபெருமானுக்குப் பிரணவம் ஓதியருளிய தலைவனே!

7. வலிமையுடைய அசுரகுலம் முழுதும் அழியும்படி அசுரர் மன்னன் ஆகிய சூரபதுமனின் மலைநிகர்த்த உடம்பை இரண்டாகப் பிளந்த ஒளிகொண்ட கூர்மை நீங்காத வேலை நீண்ட திருக்கையில் கொண்ட வீரனே! அருள் குறையாது எனது உள்ளக் குகையில் எழுந்தருளியுள்ள இயல்பினனே!

8. அழகும் வலிமையும் கொண்ட பல பறவைகளுக்கும் அரசன் என்று உலவுகின்ற மிக்க வண்மையுடைய கருடனை வெகுண்டு அலைத்துச் செம்மாப்பினால் உயர்ந்து விளங்கும் சேவல் தங்கிய கொடியையுடைய ஆண்டவனே! குடைக்கூத்து விளக்கும்

பெறும்படி ஆடிய ஒப்பற்ற திருக்கூத்தனே! (கோழி கருடனை யலைத்த வரலாற்றைக் கந்த புராணம் உபதேச காண்டத்திலும் ஸ்ரீமத் சுவாமிகள் அருளிய சுப்பிரமணிய வியாசத்திலும் கண்டு கொள்க.)

9. உயர்ந்தோர் போற்றும் அருட்சத்தியாகிய தேவயானை யம்மையாரும், அருமைமிக்க வள்ளிப்பிராட்டியும் விரும்பும் திருமேனி கொண்ட அழகனே! முருகனே! தாமரை மலரில் எழுந்தருளிய பெருமானே! அருள்பொழியும் திருவிழிகளை யுடையவனே! ஆறு திருமுகம் உடையவனே! ஆற்றல் மிக்க கந்தனே!

10. சங்கு சக்கரங்கள் விளங்கும் கையினனாகிய திருமாலும், அன்பு நிறைந்த நாமகள் மணாளன் ஆகிய பிரமனும், கதிரவன்போல் ஒளி வீசும் திருமேனி கொண்ட உருத்திரப் பெருமானும் சிந்திக்கும் ஞான வண்ணனே!

11. பெரிய பொருட்குப் பெரிய பொருளாயும், பிரணவப் பொருளாயும், தகராலயப் பொருளாயும், மாட்சிமையும் தூய்மையும் கொண்ட உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் குகனே! சரவண சிவமே! பேரின்ப மழைபொழியும் அருளாகிய மேகமே!

12. ஐம்புலன்களும் அஞ்சி ஏவல் செய்யும்படி நடாத்தும் பெரியவர் அடைகின்ற சிறந்த மேம்பாடு கொண்ட பேரின்பத்தை அருளும் தலைவனாய் வேதங்களால் புகழப்படுவனே! மிகச் சிறந்த சிவ யோகத்தில் விளங்கும் இன்பப் பொருளானவனே!

13. சிவப்பேற்றினை விரும்பும் மேம்பாடுடைய அகத்திய முனிவர் பெரிதும் மகிழும்படி பிரணவப் பொருளை அறிவுறுத்திய குருவே! முக்காலத்தும் எவ்வகைத் துன்பமும் தீண்டாதவனே! உயர்ந்த சத்துப்பொருளே! சித்துப் பொருளே! அழிவிலியே!

14. அழிவற்ற கந்தகிரியைச் சிந்திப்பவரின் மனத்துயரை யழித்து, அந்த கந்தகிரியில் இன்புற்று வாழும்படி அளித்தருள அன்பு செய்யும் எல்லையற்ற ஞான சந்திரனே! பரசிவ நிலையை அடியவர்கட்கு வழங்கி யருளும் சேந்தனே!

15. அடியவனாகிய ஏனக்குத் தாயும், தந்தையும், உடன்பிறந்த தம்பியும், அண்ணனும், அன்புமிக்க மகனும், குருவும், ஆறெழுத்திறைவனாகிய நீயே என்று கருதிப் பலநூறு எழுத்துக் களால் அமையும் பாடல்களைக் கூறி,

16. இவ்வுலகில் திரிகின்ற எனது உள்ளத்தில் நிலவும் குரவர் முதல்வனே! தமிழ்ப் புலவர் சங்கத்தில் அழகிய சங்கப் பலகையில் வீற்றிருந்த ஒப்பற்ற திருவுடைய புலவனே! வேடர் ஆர்வத்தோடு வழிபடும் இறைவனே! துடிக்கூத்து ஆடும் பெரிய தேவனே!

(இதுகாறும் முருகன் திருப்புகழ் வழூத்தப்பட்டது.)

17-18. அழகுடைய குறள் வெண்பா, நேரிசை வெண்பா, குற்ற மற்ற சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, இன்னிசை வெண்பா, தனிச்சொல் பெற்றும் பெறாதும்வரும் சவலை வெண்பா, அழியா முதன்மையுடைய ஆசிரியப்பாவில் நேரிய சந்தம்கொண்ட நேரிசையாசிரியப்பா, இணைக் குறளாசிரியப்பா, இசை நிறைந்த தெள்ளிய நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா, துள்ளலோசை கூடிய கலிப்பாக்கள் நான்கனுள் இயைபுடைய வண்ணமுடைய கலிப்பாக்களை தாம் இயற்றப்புகும் நூல்களில்

19-20. அமைக்கப் பயன்படும் தரவு கொச்சகக் கலிப்பா, பாடலில் அடிகள் சுருங்குதலின்றி வரும் இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா, ஒப்பற்ற சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, அழகு நிரம்பிய ஒப்பற்ற பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பாடல் இலக்கணத்தை மீறிச் சோர்வுறும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, தூய்மையான

வெண்டளை கூடிய கலிவெண்பா, சிறிய அடிகள் வலி நிறைந்த் கடலலைகளை ஒத்து நடக்கும் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, எழுத்துக் கட்டளை பெற்றுள்ள கட்டளைக் கலிப்பா, (இனம்பற்றி வெண்கலிப்பாவும், கட்டளைக் கலித்துறையும் ஈண்டுக்கொள்ளப்படும்).

21-22. ஓசை நயம் நிறைந்த குறளடி வஞ்சிப்பா, அதனில் ஒரு சீர்மிக்குத் தொடுக்கப்பட்ட சிந்தடி வஞ்சிப்பா, மருட்பா, ஈரடியே கொண்டு நாற்சீரின் மிக்க முதலடியும் அதனிற் குறைந்து வரும் இரண்டாமடியும் பெற்று நடக்கும் குறட்டாழிசையும், ஓசைத்தூய்மையோடு நடக்கும் மூன்றடி கொண்ட வெண்டாழி சைகள், இரண்டடியாய்த் 'தம்முள் அளவொத்து வரும்வெண் செந்துறைகள், மூன்றடிச் சிறுமையாய் வரும்வெண்டுறைகள், அடிதோறும் ஒரு சொல்லையே இறுதிக்கண் தனிச்சொல்லாய்க் கொண்டு மூன்றடியானும் நான்கடியானும் வரும் வெளி விருத்தங்கள்,

23. செறிவுடைய ஆசிரியத்துள் அளவொத்து நடந்து நாற்சீர் பொருந்தி வரும் ஒப்பற்ற மூன்றடியால் நடக்கும் சிறப்பு நிரம்பித்தொடுக்கப்படும் பெருமை கொண்ட ஆசிரியத் தாழிசை, புகழ்மிக்க பாவாய ஆசிரியத்தைச் சேர்ந்த ஏற்றம் நிறைந்த ஆசிரியத்துறை எனும் பெயர்கொண்டபா,

24-25. தொடுப்பதால் உண்டாகும் ஓசை நயம்மிக்குத் தோன்றி நெடிலடியினும் மேற்பட்டு நடக்கும் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம், இரண்டடியானும், மூன்றடியானும், நான்கடியானும் வந்தும் ஈற்றடிச் சீர்மிக்கும் அல்லாதவடி தம்முள் ஒத்தும் ஒவ்வாதும் நடக்கும் கலித்தாழிசை, தன்பால் கூடிய சிறப்பு நெருங்கித் தாழோசை கொண்டு நான்கடியாய் அடிதோறும் ஐஞ்சீருடையதாய் நடக்கும் நெடிலடிகாப்பியக் கலித்துறை எனப்படும் கலிநிலைத்துறை மற்றும் எண்ணப்படும் நாற்சீரடி நான்காய் நிகழும் கலிவிருத்தம்,

26-27. சொல்லோசையுடைய இரண்டு சீரடி நான்காய் ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வந்து அழகு விளங்கும் இயல்பும் புகழும் கொண்டு நன்கு அமைந்த வஞ்சித்தாழிசை, இருசீர் கொண்டு குற்றமாகிய கறைபடியாத நான்கடியாய்த் தனித்து நடக்கும் வஞ்சித்துறை, குற்றமற்ற ஓசையுடைய மூன்றுசீர்அடி நான்காய் நடக்கும் வஞ்சி விருத்தம்,

28. வண்ணத்தால் நிரம்பிய நீண்ட சிறந்த பாடல், சதுரங்க பந்தம், சீறுகின்ற நாகபந்தம், சக்கரங்கள், மாத்திரைச் சுருக்கம், நல்ல ஏக பாதம், எழுத்து வருத்தனம், எழுகூற்றிருக்கை, சிறப்பு

29. சூழும் சுழிகுளம், முரசபந்தம், இரத பந்தம், விளக்க முடைய மயில் பந்தம், வேல் பந்தம், வினாவுத்தரம், பிறிதுபடுபாட்டு, நல்ல பாடகமடக்கு, காதைகரப்பு, ஒற்றிலாச் செய்யுள், பெருமையுடைய

30. சொற்சுவைகொண்ட பங்கிகள், கூட சதுக்கம், ஒப்பற்ற உயர்வுடைய செந்தொடை, கமலபந்தம், இனச்செய்யுள்கள், கொம்பில்லாத செய்யுள், இதழ்படாத பாட்டு, இதழ்குவிப்பாட்டு, முரண்தொடைப் பாட்டு, கோமூத்திரி என்று இதுகாறும் கூறிய பாடல் வகைகளை முருகன் திருவடியே புகழும் நோன்போடு.

31-32. ஓதியவர் புகழும்படி விளங்கும் திருப்புகழை அருளிய அருணகிரிநாதப் பெருமானுக்குத் திருவருள் புரிந்த இனிய அமுதக் கடலே! அழகுடைய தாமரை மலரில் வாழும் செல்வத்தின் தெய்வமாகிய திருமகளின் மருகனே! விருப்போடு எனது உள்ளத்தினுள்ளே தொடரும் அச்சம் நீங்கும்படி பேரருள் புரிவாயாக. பிறப்பையும் இறப்பையும் விளைவிக்கும் ஒப்பற்ற ஆணவமலத்தின் செருக்கு ஒழியும்படி களைவாயாக. சூரனை ஒழித்த உனது உயர்ந்த திருவருளே இனி எனக்கு உறவாகும்படி செய்தருள்வாயாக.

(இதுவரை பாடல் விகற்பங்கள் கூறப்பட்டன.)

33. மந்திர விதிவழாது பால், தயிர், நீண்ட கரும்பிலிருந்து பெறப்படும் தெளிந்த கருப்பஞ்சாறு, இளநீர், நறியமணப் பொருள்கள் கலந்த நீர் வகைகள் யாவற்றையும் கொண்டு ஒருமனப்பட்டுச் செய்கின்ற திருமுழுக்கும்.

34. இனிய தேனும், விருப்பமூட்டும் பழங்களும் கொண்டு அறிவார்ந்த இந்திரன், பிரமன், திருமால், வஞ்சகமற்ற உருத்திரப் பெருமான் ஆகியவர் எல்லாம் தங்கள் திருமேனிகளில் அணி கின்ற புகழ்வாய்ந்த திருநீற்றைக் கொண்டும் செய்யப்படும் திருமுழுக்கும்.

35. யாதொரு குற்றமும் நேராதபடி பெரிதும் பண்ணி உரிய (வண்ண) ஆடையை உடுப்பித்துப் பழுதில்லாது முறுக்கிய பொன்னாலான முந்நூலை மார்பிலே அணிவித்து மணம் கமழும் சாந்துகளையிட்டு.

36. மல்லிகை, வில்வம், கடம்பு, அசோகு, செங்கழுநீர், தாமரை முதலிய மண மலர்கள் கொண்டு தொடுக்கப்பட்ட புதிய மாலையை அணிவித்து மங்கல அரிசி தூவி.

(இதுவரை இறைவனை முழுக்காட்டி அணி செய்தல் கூறப்பட்டது)

37. மணம் நிறைந்த புகை எழுப்பி, ஒளிதரும் விளக்குகள் சுடர் விடும்படி செய்து, நன்கு பழுத்த வாழை, பலா, விளா, உதிர்ந்த கிச்சிலி, அத்திப்பழம்,

38. மா, இனிய முந்திரிப்பழம், புளிப்பில்லாத இலந்தை, ஈரப்பலா முதலிய கனிகளை குவியலாக வைத்து, எள், பொரி, வடை, அதிரசம், இடித்தமா, அப்பம், மோதகம், அகன்ற இலையடை, அவல், பிட்டுமா,

39. இன்சுவையுடைய பானகம், இனிய தயிர்ச்சோறு, கடலை, பயறு வகைகள் சேர்ந்த உவர்ப்பு முதலிய அறுசுவை சிறக்கும்படி, பிறைமதியை ஒத்த பாகற்காய், உயர்ந்த புளி மாங்காய், எலிபோன்றுள்ள வாழை

40. பசிய நிறமுடைய அவரை, கத்தரி, துவரை, புடல், பூச்சுணை, கொடி வெள்ளரி, கீரைக்காய் ஆகியவற்றின் காய்த்திரளும், வானில் செல்லும் முனிவரும் விரும்பும்படி ஒப்பற்ற சுவை நிரம்பிய பலவகைக் கிழங்குகளும் திரட்டி,

41. நன்கு விளங்கும்படி நறுக்கி, மூண்டு எரியும் தீயில் உரிய பக்குவம் அடையும்படி வேகவைத்து, சிறுசேற்றில் முளைக்கும் சேம்பு, ஆரைக்கீரை, பசலைக்கீரை, பொன்னை ஒத்ததாய் உள்ள

42. வாடாத பொன்னாங்கண்ணிக்கீரை, கொய்கீரை, சிறு கீரை, தண்டுக்கீரை முதலியவும் வதக்கப்பட்டு நன்கு மூடியிட்டு, வாழையிலையிட்டு நறிய வயல்களையுடைய ஊர்களிலே

43. வாய்ப்புடைய குளிர்ந்த நீர் பாய்ந்த பசிய பயிரில் விளைந்த இனிய சுவை நிரம்பிச் சிறந்த சிறுமணிச் சம்பா, மிளகுச் சம்பா, விலையுயர்ந்த சீரகச் சம்பா அரிசியால் அடப்பட்ட சோற்றை, திருவடி வழிபடும் அன்பில்லர்த

44. குற்றமுடையோன், அலி, ஆரவாரம் புரிவோன், கொலைக் குணமுடையவன், வம்பன், துன்பில் உழல்பவன் (அல்லது பிறரைத் துன்புறுத்துவோன்), எங்கும் திரிபவன், தீமை செய்யும் இழிந்தோர் முதலியோர் பாராத வகையில் கட்டப்பட்ட திரையினுள்ளே (முற்கூறிய) பொருள்களை எல்லாம்

45. வரிசையாக ஒழுங்கும் அழகும் மிகுந்து விளங்கும்படி குற்ற மற்ற தூய்மையோடு வைத்து அன்புள்ளத்தோடு படைத்து நல்ல வெற்றிலைபாக்கு.

46. வட்டமான தட்டில் நன்கு பொருந்த வைத்து தூய்மையும் மணமும் உடைய மலர் கொண்டு அருச்சித்து புகழ் நிரம்பிய சிவனே! பெருமை மிக்க தலையில் மகிழம்பூ அணிந்த தேவ தேவனே! அடியார்கள் போற்ற (ஆணவம் மாயை கன்மம் ஆகிய) முப்புரங்களை அழித்தவனே!

சஷ்டி வகுப்பு.

47. வன்னி, மத்தம், வெள்ளெருக்கு ஆகிய மாலைகள் தங்கிய திருத்தோளையுடைய சிவனார் விரும்பும் ஒப்பற்ற அம்பிகையின் திருக்கையில் தங்கும் பெருமையுடைய மாணிக்க ஒளி வீசும் விளக்கை ஒத்தவனே! வள்ளிப் பிராட்டியையும் ஆயிரம் கண் படைத்த இந்திரன் மகளாகிய தேவயானையையும்

48. திருமணம் கொண்ட அருளார்ந்த குமரனே! வேதங்கள் போற்றும் முழுமுதற் பொருளே என்று நன்கு வாழ்த்தி எம் துன்பம் ஒழியும்படி திருவருள் செய்க என்று பணியும் மாதவர் தலைவனே! இன்ப வடிவனே! நறுமணம் வீசுகின்ற பச்சைக் கற்பூரமும் சந்தனச் சாந்து மணிந்துள்ள மல நோயற்றவனே!

(மேல் சென்ற 16 அடிகளிலும் பூசை முறை கூறப்பட்டது).

49. இந்திரன், தாமரையில் வாழும் பிரமன்; திருமால், சூரியன், இயமன், வருணன், ஈசானன், சந்திரன், தீக்கடவுள், குபேரன், வாயு, வலிமை மிக்க நிருதி, முக்காலமும் உணரும் முனிவர், பூதகணங்கள்,

50. விருப்பமுடைய கருடர்கள், சித்துக்கள் வல்லோர், வெட்சியணியும் கின்னரர்கள், செல்வமிக்த நாகர்கள், கொலையிச்சையுடைய பைசாசர், சடைமுடியுடைய முனிவர், வித்தியாதரர், யாழோர்

51. இயக்கர் முதலிய பல்ரும் தத்தமக்கு விதிக்கப்பட்ட ஏவல் பணிகளைச் செய்ய உடுக்கை, பம்பைகள், பெரிய ஒருகண் பகுவாய்ப்பறைகள், விழைவைக் கூட்டும் சிறுபறை, பேரிகை, பெரிய முரசு, தூரியம், பெரிய முழா

52. திண்மை கொண்ட ஆனகம் முதலியன வானத்தின் இடிபோல முழங்க பலவகை ஊது கொம்புகள், எக்காளம் முதலியன மிக்க ஒலி செய்யவும் அழகிய குழல், ஏழ்ழ்கோல் உள்ள பொற்கலம் எனும் கோடிக் கைத்தாளங்கள்.

53. ஒலியைத் தனந்த தானன தனதன தனன தனந்தனா என்று இசைக்கவும் வான் அளாவும் உருவமுடைய ஒரு கோடி யானைகள்

54. குற்றமற்ற பெரிய மலைகளைத் தாவும் குதிரைகள், முதுகு வளைந்துள்ள விலங்காகிய ஒட்டகம் எழுநூறு ஆகச் செல்ல, எண்ணற்ற விளக்குகளும் முழுமதியை ஒத்தவெண்கொற்றக் குடைகளும்

55. குஞ்சம் அமைந்துள்ள சிற்றாலவட்டம் பேரால வட்டங்களும் முருகனின் திருவடியைச் சிந்திக்கும் அடியவரை வருக என அழகிய கையால் அழைப்பது போல அசைந்தாடும் கொடிகளை யுடைய தேர்களும் முரிவுபடாத நீண்ட கழைகளின் உச்சியில் அருகருகே பறந்து கொண்டு நெருங்கி வரும் ஏழு இலட்சம் நீண்ட கொடிகளும்.

56. இருபுறங்களிலும் சூழ ஒரு பெரிய கொடி நிறுவப்பட்ட தேரின் கண் இணையில்லாத பவளமலைபோல வேற்படை ஏந்திவரும் வேந்தர் வேந்தனே! கிரவுஞ்சமலை அழியும்படி வேலை ஏவிய எப்பொருட்கும் தலைவனே!

57. பகைவருக்குக் கூற்றாகிய ஒப்பற்ற சடக்கர மந்திரப்பொருளே! அன்பு செய்வார்க்கு இன்பம் விளைக்கும் எண் குணங்கள் தங்கும் இருக்கையானவனே! தேவர்கள் மகிழ்ச்சியைக் கருத்தில் கொண்டு தேவ லோகத்தைச் சூரனிடமிருந்து மீட்டுத் தந்த மங்களனே!

58. திருநீற்றின் அணி விளங்குபவனே! நல்வாழ்வின் உறைவிட மானவனே! தேவர்களின் உள்ளத்தில் கொண்டுள்ள ஒப்பற்ற ஏந்தலே! துன்பம் துடைக்கும் தவராசனே! வேதமுடிவில் விளங்கும் பேரொளி வடிவினனே!

59. என் நெஞ்சின் ஏக்கத்தை ஆராய்ந்து தீர்க்கும் அருள்சான்ற இன்பப் பொருளே! அழகிய சதங்கைகள் விளங்கும் திருவடியோனே! பேரின்ப உலகத் தலைவனே! ஞாயிறு போன்று ஒளிதரும் மகரகுண்டலம் அணிந்தவனே!

60. எங்கும் நிறைந்துள்ள வானமும் சிறிது எனும்படி வீறிநிற்கும் ஒள்ளிய பண்போடு யாண்டும் நிறைந்து நின்று தனக்கு இணையொரு பொருள் இல்லாத ஒருவனே! தோற்றம் இல்லாதவனே! குற்றம் தீண்டாத உண்மைப் பொருளே! நிலைபெற்ற முதற்பொருளே!

61. துன்பில்லா அகத்திய முனிவர், பக்குவம்பெற்ற சுகமுனிவர், முசுகுந்த மன்னன், நறியநந்தியெம்பெருமான், இவ்வுலகம் புகழும் ஒப்பற்ற நக்கீரன் ஆகியோர் விருப்பத்தோடு இடைவிடாது போற்றும் குருவே!

62. எட்டு மலையும் தூளாகச் செய்த வெற்றி விளங்கும் அழகிய கைகளில் எட்டுத்திக்கு யானைகளையும் பந்தாடிய வன்மை நிறைந்த இளையோனே! மாட்சி நிறைந்த பொன் மலையாகிய மேருமலையைப் பெயர்த்து எடுத்து விளையாடிப் பின்னர் அம்மலையில் பொருந்திய கோடு

63. எனப்படும் மலையுச்சியை வானத்தில் சிறு தூள்களாக இறைத்திட்ட திருக்கைகளையுடைய நிலைபேறுடைய பெருமானே! ஐப்பசித் திங்களில் நிகழ்கின்ற சஷ்டி நாளில் விதிமுறை வழுவாது நோன்பு பூண்டு நின்திருவருளை நுகரும் பெரியோரின் உள்ளத்தில் எழுந்தருளும் திருவுள்ளமே! என்னை ஆதரித்து ஆண்டு கொள்ளும் அருள் வெள்ளமே!

64. முற்றுமுணரும் சித்துவடிவனே! பொன்முடி யணிந்த மன்னவர் தொழும் சடைமுடி யணிந்த செல்வராகிய முனிவரின் புரவலனே! முத்தொழில் செய்தற்குரிய பண்புகளை மேற்கொண்டவனே! குற்ற மற்ற ஆயிரம் பெயர்களைத் தாங்கியுள்ள பாவகியே! மேம்பாடுடைய பராபரமே!

இது காறும் இறைவன் சிறப்பு கூறப்பட்டது.

சஷ்டி வகுப்பு முற்றிற்று.

கலியுகம் 5005-க்கு நேரான சோபகிருபது வருடம் (கி.பி. 1903) ஐப்பசி மாதம் 10-ஆம் நாள் கந்த சஷ்டியன்று சென்னையி லருளிச் செய்யப்பட்டது.

தங்க ஆனந்தக் களிப்பு.

சுய*மான தங்கமித் தங்கம்-சிவ
சுப்பிரமணியமெனுந் தெய்வத் தங்கம்

1. அந்தரர் வேண்டொரு தங்கம்-ஈறி
லறுசிக ரக்கிரி நின்றெழு தங்கம்
சுந்தர மாய்ச்சுடர் தங்கம்-உமை
துங்க மலர்க்கரந் தங்கொரு தங்கம் (சுயமான)

2. வேதத்திலேயுள்ள தங்கம்-சுத்த
வித்தைசொல் லாகம நித்தியத் தங்கம்
நாதத்தின் மேலுள்ள தங்கம்-அந்த
நாதங் கடந்தபின் னாமடை தங்கம் (சுயமான)

3. பார்ப்பவர்க் கின்புசெய் தங்கம்-சிவ
பாக்கிய மெல்லாம் பகுக்கின்ற தங்கம்
சீர்ப்பர தத்துவத் தங்கம்-நிறை
சிற்பர தேஜோ மயானந்தத் தங்கம் (சுயமான)

4. நினைப்பவர்க் கின்புசெய் தங்கம்-தொண்டர்
நெஞ்செனும் பேழையி லேநிறை தங்கம்
வினைப்பவம் வெல்பசுந் தங்கம்-ஞான
விளைவற்ற பூமியிற் புதைபட்ட தங்கம் (சுயமான)

5. வாதிகட் கெட்டாத தங்கம்-அன்பு
வறண்டலை வோரறி யாவருந் தங்கம்
தீதிகற் சூள்களை தங்கம்-தவச்
செல்வர்க்குச் செல்வம தாந்திருத் தங்கம் (சுயமான)

---

* ஸ்வயம் என்பர் வடநூலர்

தங்க ஆனந்தக் களிப்பு.

6. அஞ்சனத் தெட்டாத	தங்கம் - பத்தி
யஞ்சனத் தேயெட்டு மற்புதத்	தங்கம்
செஞ்சயத் தைத்தரு	தங்கம்-சிவ
சித்தர்கள் யோகிகண் மெச்சிடு	தங்கம் (சுயமான)
7. மாற்றி லுயர்ந்தொளிர்	தங்கம்-எல்லாம்
மங்கும் படிக்கருள் செய்தனித்	தங்கம்
ஆற்றலின் மேம்படு	தங்கம்-பகி
ரண்டமெல் லாம்விலை கொண்டுயர்	தங்கம் (சுயமான)
8. அளவைக் கடங்காத	தங்கம்-தின
மனலிட் டுருக்கினு முருகாத	தங்கம்
களவுக் கிணங்காத	தங்கம்-தன்னைக்
காமுறு வார்மிடி தீர்க்கின்ற	தங்கம் (சுயமான)
9. யாதனை யைத்தெறு	தங்கம்-தெய்வ
யானை விழிக்கித மாயவிர்	தங்கம்
ஏதணை யாநறுந்	தங்கம்-எழி
லேனவி னோர்கொடி தான்படர்	தங்கம் (சுயமான)
10. ஞானவின் ணாகின்ற	தங்கம்-நல
நல்குந் திருப்புக ழோன்கண்ட	தங்கம்
வானவர் மாமுடித்	தங்கம்-நம்மை
வாழ்விக்க வந்த பராபரத்	தங்கம்.(சுயமான)

தங்க ஆனந்தக் களிப்பு உலக வாழ்வாய் உள்ள பொன்னுக்கும் பரம வாழ்வாய் உள்ள சுப்பிரமணியப் பிரமத்துக்கும் பொருளாமாறு பாடப்பட்ட இரட்டுற மொழிதலே. 43–தங்கமும் நாற்பத்து முக்கோணத்து இயங்கவுள்ளன. பொன்னுக்குப் பொருளாமாற்றிலே:– சுப்பிரமணியம்=அழகிய பிரகாசப் பிழம்பு. தெய்வத் தங்கம்=மேலான பொன். கரம்தங்கல்=கையிலே மோதிரம் முதலியனவாகத் தங்குதல்.

வேதத்தில் இருத்தல்=ஹிரண்ய பாஹு முதலியனவாகக் காணப்படல். நாதத்தின் மேலாதல்=ஒலிதரத் தக்க உலோகப் பொருள்களுள் ஒலிதாராது மேம்பட்டு இருத்தல். அஞ்சனத் தெட்டாமை=மேம்பட்ட பொற்குவைகளைக் காத்திருக்கும் முனியின் காப்பில் புதையலாக இருத்தல். எல்லாம் மங்கல்=பொன்னாகிய தன்னைப் போற்றா நிலவாழ்வு கீழாதல். அளவைக் கடங்காமை - நிலமெங்கும் மண்ணொடு கலந்திருக்கும் ஒரு நீர்மை. உருகாமை=உருக்கலில் கழிவு காட்டாமை. களவு=பொற்கொல்லர் இரகசியம். விழிக்கிதமாயவிர் தெய்வயானை = கண்ணுக்கு இனிமையாய் மிளிரும் தெய்வச் சிவிகை; பாரணம் = பாரணை என ஆயவாறு யானம் யானை என ஆயது எனலாம். ஏனல் = தினைப்புனம்; இது குறிஞ்சி நிலத்து ஊர் சார்தலில் குறும்பொறை எனப்படும். குறும்பொறை காடு எனவும்படும். படவே "ஏனலினோர் கொடி தான் படர்தல்", என்பது ஆலமரம் அல்லாத காட்டுமரம் செடிகளின் நின்று இறங்கு விழுது எனும் கொடி படர்ந்து கொண்டிருத்தல் எனும் பொருள் பயக்கும். ஞான விண்ணாதல் = அறிவுக்குரிய பொன்னா டாய் இருத்தல். திருப்புகழோன் கண்ட தங்கம்=புகழுடைத் திருவனாகிய குபேரன் கண்டு கொண்ட சங்கநிதி, பதுமநிதி எனும் பொன் எனக்கோடல் வேண்டும்.

மாற்று—5 மாற்று முதல் 1008 மாற்று வரை கொள்ளப்படு பொன்னின் மாற்றிற்கும் சீவன் சிவமாகு மாற்றிற்கும் கொள்ளக் கிடப்பது. ஏனையவை வெளிப்படை

இப்பொருள் புதுப்பாக்கத் துறைதரு குமார பக்தர்கள் கேட்டு உவகையுறுமாறு சுவாமிகள் நாவால் நவின்றதேயாம். இவ்வரும் பொருள் மறைந்து போகாமே இங்ஙனம் எழுதப்படுவதாயிற்று.

தங்க ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

*அனவரதபாராயணாஷ்டகம்.

உரை: பேராசிரியர் Dr. S.P. சபாரத்தினம் M.A., Ph.D.,

கலிவிருத்தம். பண் - முதிர்குறிஞ்சி

மன்றெனும் பதியுறை மழவிப முகவனு
நன்றெனும் பிரணவ வவனிளை ஞனுமறை
தொன்றெனும் பொருளெனச் சுடர்சிவ னுமுமையு
மொன்றெனும் பெரியவ ருயர்பதம் பணிவேன். (1)

மன்று எனும் பதியுறை மழ இப முகவனும் - ஞானத் திருமன்று எனப்படும் பொன்னம்பலத்தில் எழுந்தருளித்திகழும் இளமை நலம் பொருந்திய யானை முகத்தை உடைய விநாயகப் பெருமானும்; நன்றெனும் பிரணவ அவன் இளைஞனும் - எப்பொழுதும் மங்கள நாதமாக உள்ள பிரணவத்தின் வடிவாக உள்ள விநாயகப் பெருமானின் இளவலான குகப்பெருமானும்; அறை—வேதாகமங்களில் புகழ்ந்து கூறப்படுகின்ற; தொன்றெனும் பொருள் எனச் சுடர் சிவனும் - முன்னைப் பழம் பொருளுக்கும் பழம் பொருளாகத் திகழ்பவனான சிவபெருமானும்; (தொன்றெனும் பொருள் எனச் சுடர்) உமையும் - அவ்வாறே சிவத்தோடு ஒத்துப் பழம் பொருளாக விளங்கும் உமையும் (ஆகிய இந் நாற்பெரும் தெய்வமும்); ஒன்றெனும் பெரியவர் - உண்மையில் ஒரே பரம் பொருளே: வேறுபட்ட தெய்வங்கள் அல்ல என உணரும் ஞானப் பெரியோர்களின்; உயர்பதம் பணிவேன் - உயர்ந்த பெருநிலையில் விளங்கும் திருவடிகளை நான் வணங்குவேன்.

---

*எப்பொழுதும் பாராயணம் செய்யத்தக்க எட்டுப் பாடல்கள்

(கணபதி, கந்தன், சிவன், உமை - இந்நால்வரும் ஒருவரே. இந்தக் கருத்தை உறுதியாக நெஞ்சிற்கொண்டுள்ள பெரியோர்களின் திருவடிகளை எப்பொழுதும் வணங்குகின்றேன் - இக்கருத்தே இனிவரும் ஏழுபாடல்களிலும் வலியுறுத்திக் கூறப்படுகிறது).

அள்ளுலை யாப்படை யறுமுக வனுமனந்
துள்ளுலை வோட்டுதண் சுடரணி பரமனும்
வள்ளுலை யாக்கிரி மகளுமைங் கரனுமெ
னுள்ளுலை யாப்பொரு ளொன்றெனத் தொழுதேன். (2)

அள்ளுலையாப் படை அறுமுகவனும் - கூர்மையில் சிறிதும் குறைந்து விளங்காத வேற்படையைக் கொண்டுள்ள அறுமுகப் பெருமானும்; மனம் துள் உலைவு ஓட்டு தண் சுடர் அணி பரமனும் - மனம் துள்ளி அலைபாய்வதையும் வருத்தம் உறுவதையும் தவிர்த்து விடுபவனும், குளிர்ந்த பிறைச் சந்திரனை அணிந்திருப்பவனுமான சிவபெருமானும்; வள்உலையாக் கிரிமகளும் - அழகு அல்லது அருள்வளம் என்றும் குறைவு படாமல் உள்ள மலைமகளாம் உமையும்; ஐங்கரனும் - ஐந்து திருக்கரங்களை உடைய கணபதியும்; என்னுள் உலையாப் பொருள் ஒன்று எனத் தொழுதேன் - என் உள்ளத்துள் எப்பொழுதும் அணையாமல் ஒளிவீசிக் கொண்டிருக்கும் ஒரு பரம் பொருளே எனக் கருதி வணங்குகிறேன்.

ஆதித்தன் மதியன லாகுமுந் நயனனஞ்
சோதித்தண் முகவுமை தோமிலைங் கரன்முரண்
காதித்தன் களிதரு கடம்பனொன் றெனுநிச
மோதித்தண் ணளிமிக வுறுதுயர் களைவேன். (3)

அனவரதபாராயணாஷ்டகம்.

ஆதித்தன் மதி அனல் ஆகும் முந்நயனன் - சூரியன், சந்திரன், அக்கினி இவர்களையே தனது மூன்று கண்களாகக் கொண்டிருக்கும் சிவபெருமானும்; அஞ்சோதித் தண்முக உமை - அழகிய ஒளிபொருந்திய சந்திரன் போன்ற திருமுகம் உடைய உமையும்; தோம் இல் ஐங்கரன் - வணங்குவாருடைய குற்றங்களைப் போக்கி விடுகின்ற ஐங்கரனான கணபதியும்; முரண் காதித் தன் களிதரு கடம்பன் - பகையை வென்று தனது ஆனந்த நிலையை அடியார்க்கு அளித்தருள் கடம்ப மாலை அணிந்த கந்தப் பெருமானும்; ஒன்றெனும் நிசம் ஓதி - உண்மையில் ஒருபரம் பொருளே எனும் உண்மையை ஓதுவதன் மூலம்; தண் அளி மிக - இறைவனின் குளிர்ந்த கருணை மேன்மேலும் மிகுந்து விளங்க; உறுதுயர் களைவேன் - பெருகி வரும் துன்பங்களெல்லாம் நீங்கி வாழ்வேன்.

மயல்களை சிவையையு மதகரி முகனையு
மயல்களை யயிலர சனையுமொன் னலர்கட
மியல்களை சிவனையு மொருபொரு ளெனிஙிடர்ப்
புயல்களை யருளூறு மெனநனி புகழ்வேன். (4)

மயல் களை சிவையையும் - அடியார்களின் மனமயக்கத்தை (அறியாமையை, மோகத்தை) நீக்குகின்ற உமை அம்பிகையையும்; மதகரிமுகனையும் - மதம்வாய்ந்த யானை முகம் உடைய கணபதியையும்; அயல் களை அயில் அரசனையும் - அன்னியம் எனப்படும் துவிதநிலையை அழித்து அத்துவிதப் பேற்றை அருளும் வேற்படை அரசனான குகப்பெருமானையும் (அல்லது அயலார் எனப்படும் பகைவரை அழிப்பவனான வேற்படை அரசனையும்); ஒன்னலர்கள்தம் இயல் களை சிவனையும் - பகைவர்களின் தீமைத் தன்மைகளை நீக்கிவிடுகின்ற சிவபெருமானையும்; ஒரு பொருள் எனின் - ஒரு பரம் பொருளே

எனக் கருதி வழிபட்டால்; இடர்ப் புயல் களை அருள் உறும் - துன்பமாகிய புயற்காற்றை நீக்கிவிடுவதான அருளானது வந்து சேரும்; என நனி புகழ்வேன் - என்று கருதி மிகவும் நன்றாகப் புகழ்ந்து துதிப்பேன்.

மாலொடு விதியறி யாதசெம் மரைமலர்க்
காலொடு நவிரமு மாரிறை களியுமை
வேலொடு வருகுக வேள்கள பமுகன்மெய்
வாலொடு மிளிரறி வினிதென மகிழ்வேன். (5)

மா'லொடு விதி அறியாத செம்மரை மலர்க் காலொடு நவிரமும் ஆர் இறை - திருமாலும் நான்முகனும் கண்டு அறியாத செந்தாமரை மலர் போன்ற திருவடியும் திருமுடியும் (நவிரம் - தலை உச்சி; அதாவது திருமுடி) உடைய சிவபெருமான்; களி உமை - சிவானந்த மயமான உமை அம்பிகை; வேலொடு வரு குகவேள் - அடியாரைக் காக்க எப்பொழுதும் வேலோடு விரைந்து வரும் குகப் பெருமான்; களப முகன் - யானைமுகனான கணபதி (ஆகிய இந்நால்வரும்); மெய் வாலொடு மிளிர் அறிவு - எப்பொழுதும் தூய்மையாகவே திகழ்கின்ற ஞானமே வடிவான ஒரேபரம் பொருளே எனக் கருதி; இனிதென மகிழ்வேன் - இவ்வாறு பேதம் காணாமல் ஒன்றெனக் கண்டு வழிபடுவதே சிறந்தது எனக்கருதி மகிழ்ச்சி அடைவேன்.

திருவருள் புரியுமைங் கிலீந்திரி புரைபரை
குருவருள் புரிசௌங் கிரீஞ்சிவை குகனிட
ரொருவருள் புரிபத விநாயக னுயர்சிவ
னருவருள் புரிபதி யாயெனைக் காக்க. (6)

திருவருள் புரியும் ஐம் கிலீம் திரிபுரை - திருவருள் புரிகின்ற ஐம், க்லீம் எனும் பீஜாட்சரங்களுடன் விளங்கும் திரிபுரையும்;

பரை - பராசக்தியும்; குருவருள் புரி சௌம் கிரீம் சிவை - ஞான குருவாக எழுந்தருளி ஞானப் பாற்சோறு அளிப்பவளும் "சௌம்" "ஹ்ரீம்" எனப்படும் பீஜாட்சரங்களுடன் கூடியவளு மான உமையம்பிகை; குகன் - குகப் பெருமான்; இடர் ஒருவு அருள்புரி பத விநாயகன் - வணங்கும் அடியார்களுக்கு நேர உள்ள இடையூறுகள் நீங்கும் வண்ணம் அருள்புரிகின்ற திருவடிகளை (அல்லது கருணை நிலையை) உடைய கணபதி; உயர் சிவன் - ஏனைய தெய்வங்களினும் மேம்பட்டு விளங்கும் சிவபெருமான் (ஆகிய இந்நால்வரும்); அருஅருள் புரிபதி - தடத்த நிலையில் இல்லாமல் சொரூப நிலையில் விளங்கி அருள்புரியும் ஒருபரம்பொருளே; ஆய் எனைக் காக்க - இவ்வாறு ஒரேபரம் பொருளாக விளங்கி என்னைக் காத்தருள்க. (பீஜாட்சரங்கள் வரும் இத்திருப்பாடலை மிகவும் கவனத்துடன் பிழையின்றி ஓதுக.)

வாணுதன் மடப்பிடி மலைப்புன மானலம்
பேணுதல் விழிச்சர வணபவப் பெருந்தகை
மாணுத னயனகங் கணபதி வளரனல்
காணுத லரனுமை யருளெனைக் காக்க. (7)

வாள் நுதல் மடப்பிடி - ஒளிபொருந்திய நெற்றியை உடைய தெய்வயானைப் பிராட்டியார்; மலைப்புனமான் - வள்ளிமலைத் தினைப்புனத்தில் விளங்கிய வள்ளிநாயகியார் ஆகிய இருவரின்; நலம் பேணுதல் விழிச் சரவணபவப் பெருந்தகை - பேரழகையும் கண்டு களிக்கும் திருக்கண்களை உடைய, சரவணபவ எனும் திரு ஆறெழுத்துக்குரிய பெருந்தகையாம் குகப்பெருமான்; மாண் நுதல்நயன 'கம்' கணபதி - பெருமை பொருந்திய நெற்றிக் கண்ணை உடையவரும் 'கம்' எனும் பீஜாட்சரத்துடன் கூடியவரு மான கணபதி; வளர் அனல் காண் நுதல் அரன் - வளர்கின்ற அக்கினி,

நெற்றிக் கண்ணாகக் காணப்படும் சிவபெருமான்; உமை - உமை அம்பிகை (ஆகிய இந் நால்வரும் ஒருபரம் பொருளே ஆதலின் அப்பரம் பொருளின்); அருள் எனைக்காக்க - திருவருள் என்னைக் காப்பதாக.

பாமகண் மறைபுக ழோங்கண பதியெழிற்
சீமக ணனிபுக ழோநமச் சிவாயவை
பூமகள் புகழுமை பூம்புகழ்க் கவியிறை
யேமக கனவருள் காத்தருள் கெனையே. (8)

பாமகள் மறை புகழ் ஓம் கணபதி - கலைமகளும் நான் மறையும் புகழ்கின்ற ஓங்காரப் பரம்பொருளான கணபதி; எழிற் சீமகள் நனிபுகழ் ஓம் நமச்சிவாய - அழகு பொருந்திய திருமகள் துதிக்கும் திருவைந்தெழுத்துக்குரிய சிவபெருமான் (திருவைந் தெழுத்தே வடிவாக விளங்கும் சிவ பெருமான்); வை பூமகள் புகழ் உமை - நிலவுலகத்தாலும் திருமகளாலும் புகழப்படும் உமை அம்பிகை; பூம்புகழ்க் கவி இறை - அருட்பொலிவும் சந்தப் பொலிவும் மிகுந்த திருப்புகழ்ப் பாடல்களை அருளிய அருணகிரிப் பெருமானின் இறைவனான முருகப்பெருமான் (ஆகிய இந்நால்வரும் ஒரே பரம்பொருள் ஆதலின் அப்பரம் பொருளின்); ஏம் அக கன அருள் - பேரின்பக் களிப்பை உள்ளத்தில் ஊற்றுவதான பெருமை பொருந்திய திருவருள்; காத்தருள்க எனையே - என்னை என்றென்றும் காத்தருள்வதாக.

ஸ்ரீமத் சுவாமிகளின் விளக்கம்.

(ஸ்ரீமத் சுவாமிகள் சரித்திரத்திரத்திலுள்ளது)

அனவரத பாராயணாஷ்டகம் வலம் சுற்றிப் பார்க்கினும் இடம் சுற்றிப் பார்க்கினும் ஒரு படித்தாகவே நிகழ் ஆறறையாகும்.

அனவரதபாராயணாஷ்டகம்.

ஆறறை விவரம்

சிவன்	முருகன்	சிவன்
உமை	விநாயகன்	உமை

அனவரதபாராயணாஷ்டகம் முற்றிற்று.

பத்துப்பிரபந்தம் ஸம்பூரணம்.

குமரகுருபரன் திருவடி வாழ்க.

குவியறிவுடையார்க்குச்

செவியறிவுறூஉ

தீஞ்சுவைத்தேறலே.

– ஸ்ரீமத் சுவாமிகள்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

ஓம் குஹேசாய நம:

செவியறிவுறூஉ.

(STATEMENT - உபதேசம்)

முதற்செவியறிவுறூஉ
(FIRST STATEMENT)

புதுப்பாக்கம் பு. சம்பந்த முதலியார், பொ. குழந்தை வேலு முதலியார், திருவல்லிக்கேணி தா. வேங்கடாசல முதலியார், மயிலை கந்தசாமி முதலியார் என்னும் பெயருடையார் களையும், புதுப்பாக்கம் ஞானசாகர முதலியார், செ. கந்தசாமி முதலியார் முதலிய பெயர்க் குரியார்களையு நோக்கி ஆசிரியர் சில வாய்மைகளைச் செவியறிவுறுப்பான் தொடங்கினார்.

அன்பின் மிக்கீர்! என் போதகத்தைக் கேட்குமாறு இங்ஙனம் அன்பார்ந்த ச. சச்சிதானந்தம் பிள்ளையும், க. இராஜமுத்துப் பிள்ளையும் இல்லை : ஆயினும் கூறக்கடவேன். இறைவன்பால் எத்துணைத் தூய்மையுளதோ அத்துணைத் தூய்மை யெய்துதலே வீடுபேறென்றல்சாலும். அசத்தியஞ் சத்தியமெனப்படின் அது நிலை நில்லாதாகலிற் சத்தியமே நித்திய வாழ்க்கைக்குரிய தென்பதை மறந்து திரிவோர் தாம் புரி பாவத்திற்குக் கழுவாயு மறிவரோ! பொறுமையுங் கழுவாயாம். பிறபாவ மனைத்திற்கும் கழுவாயெனப்படுவது, பெயர்த்தும் அப்பாவஞ் செய்யாதிருந்து கண்ணீர் வாரவாரக் கலுழ்ந்து கருத்தாவை நினைந்து துதித்து வழிபடலே யென்றறியாது புரி பிறமுயற்சிகள், மூக்கு மயிர் பறித்து ஆட்பாரங்குறைக்க வெண்ணுதலொக்கும்.

மிக்க பணமுடையனே யாயினும், மிக்க சனமுடையனே யாயினும், மிக்க செல்வாக்குடையனே யாயினும், மிக்க கல்வி

Pondicherry

கேள்விகளுடையனே யாயினும், மிக்க மருத்துவப் பயிற்சி யுடையனே யாயினும், மிக்க காய பலமுடையனே யாயினும், மிக்க படைக்கலப் பயிற்சி யுடையனேயாயினும், மிக்க ஆலோசனை யுடையனேயாயினும், அவன், யமபடர்கண் முன்பாக யாது புரிய வல்லுநனாவன்! மீன் வாயிலே தூண்டிலையேய்த் திழுப்பது போல அவர்களது சூக்கும பாசத்தைத் தனது சுவாசத்திற் கோத்திழுத்தற்குச் சற்று முன்னரேனும், மூன்று கடிகைக் குள்ளேனும், மும்முகூர்த்தத் திற்குள்ளேனும் தான் அவர்களுடைய கைவயப்படல் கூடுமெனல் புலப்பட்டவுடன் ஐயோ! எனக்குறுதித் துணையாக ஆண்டவனருளைத் தேடிக் கொள்ளாமே அவலந் தேடித்தேடி மகிழ்ந்தேனே யென்று தனக்குட்டானே கவலையுங் கலக்கமுங் கொள்பவனேயாகிச் சடிதி மூர்ச்சை போன்ற சாவெய்துவான். இவனுக்குப் பாவக்கழுவாய் நரகானுபவமே ஆம்.

இவ்வனுபவத்தை யெதிர்த்து நிற்குந் தகைமை வாய்ந்த அறத்தின் பேறாகிய சுகானுபவ சுவர்க்கம் இந்திரன் முதலிய தேவர்கள் வசத்திலுளது. பண்டையொரு காலத்தில் அச்சுவர்க்கவளம் அசுரர்களாலழிக்கப்பட்டது. சத்திதரக்கடவுள் அவ்வசுரர்களையழித்து முன்போலவே அச்சுவர்க்க வளம் விளங்குமாறருள் பாலித்து இந்திரனுக்கு முடி சூட்டுவித்து அச்சுவர்க்கத்தையும் ஈந்தருளினான். அஃதின்றுகாறும் அல்லற் படாது நிலவிக் கொண்டிருக்கிறது.

அச்சத்திதர கர்த்தாவை இழித்துரைக்கத் துணிந்தாரை அவ்விந்திரன் முதலிய தேவர்கள் கண்ணுறின் மன வருத்தங்கொள்ளுமாற்றானே அறப் பயனை அவர்க்கு நல்கார். இறைவனை யிழித்துரைத்த மறத்திற்கு அவரிழைத்த அறத்தை யீடுபடுத்தித் தள்ளுவார். ஆகலின் அறப்பயனாகு சுவர்க்கம் பலிப்பான் நடைதருவோரெவரும் வேற்பராபரனாகிய

பெருமானை இழித்துரையாடு கதைகளையியற்றல், இயற்றி யிருப்பனவற்றை யுண்மையெனக் கோடல், கேட்டல், படித்தல், உரைத்தலென்பனவற்று ளெதையுஞ் செய்யொண்ணாது. செய்வோர்க்குப் பிரணவ வாச்சியப் பிரபல வாயிலாக வுண்மை யெடுத்துரைப்பாருரைத்துங் கேளாப்பாவ ரூபத்தைப் பார்த்தலும் பரிவினர்க்கு ஆகாது.

உடம்பின் ஓரமிசத்திலே துர்மாமிசம் வளர்வது போலவே துர்மதியும் சிலர்பால் வளர்கின்றது. உலகர் சுவர்க்கம் புகாது ஒல்லையொல்லை இங்குப் பிறத்தலும் இறத்தலுமாய் உழிதருமாறு வஞ்சமாயை புரி வன்செய்கையே அவ் விழித்துரையாட லாக முளைத்த தென்றலும் முதுகு காட்டுமோ? நண்பின் மிக்கீர்! சுவாமி சுவர்க்கமளித்தருளினமை வைதிக நூற்கண் மணக்க மணக்கவுளதென அறிதிர். இது, கண்டன மாதற்கு என் புத்தகங்களுள் இடனுமின்றே, வேதமெல்லாம் பொய்யென்று சொல்லியிடுவது ஒருவனுக் கெளிதே. அதனால் அவை பொய்யாய்விடுமோ! விவரித்து நியாயங்காட்டி அனைத்தையும் மறுக்கத் துணிதல் எளிதன்றே.

வித்தைகளுட் சுருதி பிரபலமாதலின் வாதத்திற் சுருதிக்குச் சுருதியே யீடாம்: மிருதிக்கு மிருதியே யீடாம்; புராணத்துக்குப் புராணம் ஈடாங்கால் தலபுராணம் ஈடாகாது: பிரபலம் ஏனையெவற்றினும் பிரபலமே. வித்தை பதினெட்டினுட் சேராச்சுவடி யெதுவும் வித்தைகளை வெல்ல மாட்டாது. வைதிக நூல்களுக்கு மாறாம் ஆகம மாற்றங்களுங் கோடற்பால தன்று. இவைகளுள்ளும் வேறெந்த வடமொழி தென்மொழிப் புத்தகங்களுள்ளும் ஒன்றற்கொன்று மாறுபாடுறிற் பிரபல மான தூய்மை நியாயமே கோடற்பால தாம். ஆதலிற் கண்டனமென்பது கண்டனமாகி நிற்றலும், ஆகாது நிற்றலும் உய்த்துணர்தல் நிபுணர்மாட்டுளதாலோ. இந்நிரலும் நியாயமுமுணரார் கண்டனம் இதுவென வரைதல் கண்டு

மகிழ்மடவோர் செய்கை யுண்டாயின் அது, மற்போரின் மலர்ந்து வீழ்ந்தவனெழுந்து நின்று நாணமொரு சிறிது மின்றித் தன் மீசை முறுக்குதலை மதித்து உளம்பூரிப்பார் செய்கை யினை யொக்குமெனவு நீவிருணரலாமே.

மாட்டை, மருப்பாட்டைக்கண்ணுறு போது குழந்தைகள் அஞ்சுவதுபோலமுரணார் மூர்க்கரைச் சாந்த குணசீலர் காணின் அஞ்சவேண்டியவரே; வளையும்வில் இழிவுடைத் தன்றே. நிலவுலக ஐசுவரியமே ஐசுவரியமென்றெண்ணு வோன் செவிக்கு, நித்திய கருத்தாவின் ஐசுவரியம் அளவிடற் பாலதன்றேயென்னு முண்மை உருசியுளதாமோ? ஈசனைத் தியானித்து நிற்கு நிலைக்களத்தே இன்ன நன்மை வேண்டுமென்றவாறு பலிப்பது அது கிடைக்குமென்னு நம்பு பிறந்துழியாம். புறங்கூறலும், பொறாமையும், வஞ்சகமும், கபடமும் நஞ்சினுங் கொடுமையவாகலின் அவற்றை யுடையோன் தன்னையுஞ் சார்ந்துள்ளனவற்றையுங் கெடுக்கும் மூரி மூங்கிலாக வெண்ணப்படுகிறான்.

இவன் வாழ்நாளும் வாழ்நாளாய் மதிக்கப்படுமோ? நாகபடம் நாகவுருவின் மறைந்தாங்குச் சீவான்மாவும் பரமான்மாவும் உடம்பிலு முலகிலும் மறைந்துள்ளன வென்பதை நன்குணராமையினாலேயே அப்புறங்கூறல் முதலிய காரியங்களிலே மனிதன் தலைப்படுபவனாகின்றனன்: இப்படிப்பட்டவனையும், இவன் போன்றாரையும், (இன்னோரும் வேறு பலரும் வதிதற்கிடனாயுள்ள) இந்தச் சுகதுக்கானுபவ வுலகினையும் பராபரன் படைத்த காரணம் யாது? எனக் கடாவுநர், பகலாகவும் இரவாகவும் கிரகங்களுள் சில சுபக்கிரகங்களாகவும் சில அசுபக் கிரகங்களாகவுங் காணப்படும் பெருஞ்சான்று கொண்டே சுக துக்கானுபவ வுலகெனத் தாபனஞ் செய்தலுங் கூடும்.

செவியறிவுறூஉ.

அன்பார்ந்தவர்காள்! இத்தாபனம் ஏற்புடைத்தே, ஆயினும் படைத்த காரணம் யாது? எனக் கடாவல் விடைபெறற்குரிய வினாவாகாது. இறைவன் திருவுளச் செய்கையை இனிதறிந்துரைப்பார் எவருமிலரே. அறிந்த வாறீதென எப்புத்தகமேனுங் கூறத்துணிந்தக்கால் அது பல்லாற்றானும் பழுது பட்டொழியும். தூங்கற்க.

1. முன்னர்ப் புளிப்புடை மாங்காய் பின்னர் இனிப்புள தாகின்றது.

2. முன்னர் மதுரச்சுவையுடை நுங்கு பின்னர் அச்சுவை யிலதாகின்றது.

3. முத்துச் சோளமெனும் ஒருவகைத் தானியம் பூவின்கட் டோன்றாது பயிரடியிற் றோன்றவுளது.

4. சுரை பூவினடுவே காயை நல்காது அதனடியில் நல்குவதாயுளது.

5. வேர்க்கடலை வெளியின்மிளிர் தனது பூவிற்றோன்றாது மண்ணிலாங் கிழங்கு போலத் தோன்றிப் பருப்பை யுட்புலத்தே கொண்டுளது.

6. அத்தி பூத்துக் காயாமல் மரத்திலேயே காய்க்கின்றது.

7. முந்திரி மரம் தன் பழத்தினுள்ளே கொட்டையை வைத்துக் கொள்ளாது பழத்தின் புறத்தே கொட்டையை வைத்துக் கொள்கின்றது.

8. பனைவிதை தன் முகத்தின் வழி முளையாது அடிப்புடை வழி முளைக்கவுள்ளது.

9. தெங்கம்பழம் தன் கொட்டைக்கு மேலுறு பாகத்திலே ஓரின்சுவைச் சாறும் வைத்துக் கொள்ளாமே அக்கொட்டைக் குள்ளே தாகத்தைத் தீர்க்கத் தக்க இனிய நீரை (= தேங்காய்த்

தண்ணீரை) வைத்துக் கொள்வதாயிற்று.

10. பச்சையோந்தி இருந்தவிடத் தசையாதிருந்து கொண்டே தன் விழியைச் சுழலவிடும்படி செய்து நாற்புறமும் பார்க்கவுளது.

11. கூகை பகலிற் பார்வையிழந்து இரவிற் பார்வை பெறுவதாயுளது.

12. வௌவால் சிறகுகளாற் பறவை போலவும் பற்களால் விலங்கு போலவுங் காணப்படுதலோடு வாயாலே தின்று வாயாலே கழித்தலும் மரக்கிளை முதலியவற்றிலே தலைகீழாகத் தொங்கிக் கிடத்தலு நடத்தலுமுடைய பிராணியாயிற்று.

எத்திற எத்திற மாறுபாடும் எத்திற எத்திற இறும்பூது மாயுள்ள இவைகளும் வேறுபலவும் எல்லாம் வல்லவனாகிய அவன் சங்கல்ப சிருஷ்டியிலாகின்றமையின் எதனை யெப்படியாக்கினுமாக்குவான்; அவனா லாகாதது ஒன்றுமின் றெனவுணர்ந்து அவனனுக்கிரக அருளை எதிர்பார்த்தவ னாயிருத்தலே விவேகமாம். அவ்விவேகம், அவன் திருச்சன்னிதியி லுய்யவுளதாம். அச்சன்னிதி (யாண்டும் நிறைந்துள்ள) பரமான்மாவையே ஆன்மாவாகக் கொண்டுள்ள திருமேனித் திருக்குமாரன் வசத்திலே நித்தியமாய் நிகரிலதாய் நிலவிக் கொண்டிருக்கிறது. ஆன்ம தத்துவ மாத்திரையாய நிறைவிலே அவ்வித சன்னிதியில்லை. இவ்விவரமுணராதார், ஆன்மாவின் நித்திய திருத்தி வாழ்க்கையை யுணராதவரேயாவர். பலபல பாடியென்னை! ஆடியென்னை!! அருத்தங்கள் கேட்டென்னை!!!

ஒரு மனிதனுக்குத் திங்கள் தோறும் வருவாய் வழி வரவேண்டிய பணம் (100) நூறு ரூபாயென அவனதுடம்பின்கண்

அடையாளமேற்பட்டிருப்பின் அது பொய்யாதபடி எவ்வழி யாலேனும் அந்த ரூபாயை முன்னாக வேனும் பின்னாக வேனுஞ் சமர்ப்பித்தலும், மண்ணிற் பிறந்த மனிதத் தொகுதிக்கெல்லாம் இவ்வண்ணமே ஏற்புடைமை யேற்புடைமையாக எவ்வாற்றானும் வருவாய் வழியே பொருளைச் சேரச் செய்தலும் இறைவனாணையா யிருத்தலினால் அவ்வாணையின் ஆச்சரிய ஆற்றல் அளவையாலளத்தற்கு மடங்குமோ! என்னளவிலுள்ள அனுபவங்கொண்டே இது சத்தியமென நிறுவவுள்ளேன். தெய்வச் செயல் இத்திறத்த ஆச்சரியமாயுள தென்பதையும், ஆகாசத்திற் சுடர்ந்துள்ள வெஞ்சுடர் தண்சுடர்களும் ஏனைய கிரகங்களும் எண்ணிறந்த விண்மீன்களும் வீழ்ந்துவிடாமே ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமே காப்புச் செய்திருக்குங் கருத்தாவின் ஆணை எத்திறச்சூக்கும ஆச்சரியத்த தென்பதையும் நீவிருணரின் நுங்கள் நம்பு போலி நம்பாமோ? நுனிப்புல் மேய்ந்துதிரி விருகமன்ன இதயமுடையார்க்கும் இது புலனாமோ? பணம் ஈட்டலே பரம காரியமென்றெண்ணும் புத்தியோடு நாளைக் கழிப்பார் செய்கையை நுங்கள் நறிய செய்கை பரிகாசஞ் செய்ய வேண்டுமே.

ஆண்டவனருளுஞ் சேய்மைத்தென்னலாமோ? சூக்கும சரீரம் நுங்கட்கு மிருக்கின்றது. அது சூக்கும சரீர தேவதைகள் காரிய உடம்பாட்டிற் குரியதா யுளதென்பது நுங்கள் புத்தியிற் பதியாத காலங்காறும் கடின சித்த மேற்படும். ஆதலால் அதற்கிடமில்லாமல் இளகிய சித்தத் தோடு நம்பு பிறங்க நிற்றல் நலம். என்னால் அது. பன்முறையும் அறியப்பட்டுள்ளதென்று யான் சத்தியமான சான்று கூறவுளேன்.

தூலசரீரத்திற்குள்ளே சூக்கும சரீரமுளதென்பதை அனுபவத்தாலறியாதவன், மரணத்திற்குப் பின்னருந் தானிருப்பதை நம்பாதவனாய் நாஸ்திகனா யிருப்பான். அவன்

மனிதனாகப் பிறந்துந் தனக்குத் தானே கேடு விளைத்துக் கொள்பவனானானென்பது வச்சிரத் தாணுவாய் நாட்டப் படும். சூக்கும சரீரத்தினுள்ளுஞ் சரீரமுண்டென அதிகங் கூறிக்கோடல் ஈண்டைக்கு விசேடபயன் பயக்கமாட்டாது. என்னை? உரையளவாய்ப் போமாகலின்.

இறைவன் என்முன் வெளிப்பட்டு நின்றருளிய உறுதியுரையும் உபகாரமும் பல. என்பாடல் அவனால் அங்கீகரிக்கப்பட்டது பிரசித்தம். யான் இறந்தாரை யெழுப்பாமை நுங்கண்மதிப்பைக் குறைக்கலாம். யான் அது விரும்புவோனுமல்லன். அஃதெனக்குக் கொடுக்கப் படவுமில்லை. அது பற்றி யாண்டேனும் எழும் பண்டைச் செய்தியை வற்புறுத்தலும் உலகம் அவமானப்படுத்தற்கே உரியதென்பது எனது நிர்ணயம். ஆன்மலாபம், அது புரிவார் மாட்டே யுண்டாமென நினைத்தற்கும் அனேக மகான்மாக்கள் சரிதைகள் இடங்கொடா. இதுபற்றி நீவிர் அதிகமும் வினவின்மின்.

என்னை யாதரித்தருள் பரமரகசிய சத்தி, என்னை நம்பினாரை ஆதரியாது நிற்குமோ? ஐயம் வேண்டாம்.

அந்தப் பரமரகசியசக்தி இரகசியத்துக்கேபிரியப்படும். அதன் காரியத்திற் கண்ணுங் கருத்துமா யிராநின்ற தேவர்களும் அந்தப் பிரியமே யுடையராகலின், தேவ கைங்கரிய தருமமெதுவும் இடம்பத்திற் சேர்ந்தொழியாமே இரகசியம் பேணிச் செய்யப்படல் வேண்டும். சத்தியத்தின் பொருட்டு நாவைக் காத்துக் கொளல் போலவே தருமத்தின் பொருட்டு இரகசியத்தையுங் காத்துக் கொளல் தகுதித் தாகும். இக் காலத்திற் பிரகடன பத்திரமின்றி எத்தருமஞ் செய்வாரையுங் காண்டல் கூடாததாயிருக்கிறது. இத்தரும ரகசியம் பேணிக் கொள்ளாதார், எந்த இச்சை நீங்கின சித்தசுத்த முடையராவர்? இது, நீவிர் பெரிதும் கவனிக்கத் தக்கது.

இராஜத்துரோகம், அழுக்காற்றினாலேனும் அவாவினாலேனும் நீதியிகந்து நிகழ்வதொன்றாகலின் அதுவும் ஈசுவரத் துரோகத்தில் வைத்தெண்ணப்படும். ஈசுவரன் எல்லாவுலகத்தும் நீதி செலுத்தும் ஓரரசன். இராஜன், ஒரூரிலே ஒருலகிலே நீதி செலுத்தும் ஓரரசன். இவனிலனேல் எளியவரை வலியவர் அடக்கியாள முயல்வர். இவன் காப்பை ஈசுவரன் காப்பில் வைத்துக் கொண்டு தருமம் பாராட்டத்தக்கதே. இத் தேசத்தை ஆள்கின்ற ஆங்கிலேயருடைய நீதிச் சட்டத்தை யான் இன்று காறும் நன்கு மதித்தவனாகவே யிருக்கின்றேன். இராஜ நீதிக்கெட்டாது போங்குற்றம் தேவநீதியிலெடுத்துக் கொள்ளப்படும். அந்நீதி நிகழுநிமித்தம் விண்ணிலே வெள்ளிடியென ஒரு தெய்வவெடியும் வைக்கப்பட்டுள்ளது.

அண்டப் பெருங்காற் றில்லையாயின் எவ்வுயிர்க்கு மூச்சுவிட முடியும்? பகலாக நிற்குஞ் செவ்விளக்கிற்கு யாவரே பொருளுபகரிக்கின்றார்? இருண்மால் சீக்கும் வெள் விளக்கிற்கு எவரே உம்பள முதவுகின்றார்? பயிர் முதலியன பல்குமாறு குளிர்மை நல்கி யிரங்கு கொண்டலுக்கு யாவரே கொடை கொடுக்கின்றார்? இவற்றையனுபவித்தற் குரிய உட்கருவி புறக்கருவிக ளீந்தமைக்கும் எவரே ஏமாப் பளிக்கின்றார்? எம்பெருமான் இணையிலா வுபகார மிருக்கின்றவா றென்னே! என்னே!!

இவ்வுபகாரத்தை மகத்தினும் மகத்தென மதித்து நிற்கும் எனக்கு உற்ற கால் முரிவு கருதிச் சென்னைப் பெரிய வைத்திய சாலைக் கண் எனக்கு உபகாரஞ் செய்ய வந்தார் பலருள்ளும் புதியராய்க் காணப்பட்டவர்கள் புராணபோதக தங்கவேற் பிள்ளை, A.S. அண்ணாமலை முதலியார் முதலினோராவர். இன்னோருள்ளே சென்னை C. S. மதுரை முதலியாரும், P. ஜகந்நாத முதலியாரும் இன்றுகாறும் நீங்கா அன்பினராகவே யுளர். இவர்களை உபகாரத்தினிற்க ஏவி நின்றது இறைவன்

கிருபையென்றே யான் மதித் துள்ளேனாகலின் அக்கிருபை அவர்களுக்கு உரிய வுதவியைச் செய்தருளுமாக. இது தப்பாதென நீவிரு நினைமின். இன்னோர்க்கு நம்பரமன் மீது பக்தி பிறந்திருத்தலின் இவர்களும் மகா தேசோமண்டலத் தாரோடு சேரத்தக்கவர்களே.

தான் தேடிய பொருள்களை அநியாயச் செலவிலேனும், அபகரிப்புடையார் செய்கையிலேனும், தேகவியோக தசையிலேனும் இழக்க நேருமுன் ஈவோர்க் கீந்துவிட்டு ஈசனுடைய திருவடிப்பேற்றை விரும்பினவனாய்த் திடசித்தத் தோடு வேற்றிடஞ் சென்றுவிடுவோன், விட்ட பொருள்கட்குப் பன்மடங்கதிகமான பெருஞ்சம்பத் துடையவனாய் ஈசனால் என்று மிரக்ஷிக்கப்படுபவனாய் மறுமையில் இலங்கவுளான். இவன் இப்புடவியில் அதிக காலமிருத்த லேற்படின் உடலோம்பலாற் பல துன்பமுறலுங் கூடும். நீளமாக முறுக்கப்பட்ட கயிறும் இடையிலிறுமாயின் அஃதற்ற கயிறே ஆம். இஃதினி துய்த் துணரத் தக்கது.

மாமிச சாரம் அதிகரித்த வுடலினனே மாமிசத்தை விரும்பி மயங்குகிறான். மானிலம் வியக்குமாறு புத்தகங்கள் படித்துப் பொருள்கூறி மகிழ்தல் உற்றிருப்பினும் அம்மயக்க முதிர்ச்சியின் அவையாவும் மூட்டைகட்டப்பட்டு மூலையில் வைத்து விடற்குஆம்; தலையணையாக வைத்துக்கொளற்கும் ஆம்.

இன்னுஞ்சில கூறக்கேண்மின்; ஒருவருக்கு முன்னிருந்த பற்றுப் பின்னிராமல் மற்றொன்றாயினுமாம். அங்ஙனம் அவரெழுத்துமாதல் கூடுமாதலால் இவர் முன்னுக்குப்பின் முரணிக் கூறுகிறாரென்றல் ஏன்று கொள்ளக் கூடாததாம். என்னை? முன்னெழுத்தினின்றும் பின்னெழுத்தே மேம்பாடுடைத்தாமதனால். இரண்டுங் காலக்கரப்பிற் கிடப்பனவாயின் மேம்பாடு விளம்பற் கிடனில்லையாம்.

வடமொழி தென்மொழி முதலிய பல பாடைகளிலுள்ள இப்பரத கண்டத்துப் புத்தகங்களெல்லாம் அந்தக் கரப்பிற் கிடக்கின்றனவெனவே நிச்சயிக்க வுள்ளன; ஒரு பெயரே பலருக்கு மிருக்கலாமன்றோ. அந்தக் கரப்பினைக் கண்டுபிடித்தற்கு முயல்வார் முயலினும் அது, விராலி யிலையைக் கசக்கிச் சாறு பிழியத் துணிதலொக்குமாதலின் நுங்கட்கு அம்முயல்வு விரும்பத் தக்கதன்றால்.

இரத்தினக்கல் விற்போர் அம்மிக்கல் சுமந்து விலை கூறுவரோ? பொன்னினுண்டாம் வள்ளிபோல அறிஞர் சொல்லே அறிவு நூலாம். தவப்பேறுடையார் வாக்குச் சத்தியமாகலின் அது தலைவன் வாக்கென மதிக்கப்படும். அழுக்காறு புறம்போக்கும். பூனை புலியைப்போலிருப்பினும் புலியாக மாட்டாதே.

கிழக்கே செல்லும் உடுபதியெனப்படு சந்திரனை மேற்கே செல்லுவதாக வெண்ணுவார் மயக்கம் போலப் பொய் வாழ்வை மெய்யென மதிக்கும் மயக்கம் ஆவிகளைப் பற்றியுள்ளது. அவர் அல்லற்படன் முதலியன கருதி மடவோனாற் செய்யப்பட்ட திவ்வுலகமெனவுங் கூறல் உளதன்றே. இவரினும் உலகியற்றியான் இரானெனக் கூறுநன் நல்லவனென்பாருளரேல் அவரது புத்தியையான் புகழ வுள்ளேனால்.

ஒலியே எழுத்தாகிறது; எழுத்தே சொல்லாகிறது; சொற்களே சொற்றொடராகின்றன; சொற்றொடர்களே பாட்டாகின்றன; பாட்டுக்கூட்டமே புத்தகமாகிறது. இதனைச் சாஸ்திரமென மதிப்போன், ஆரம்பம் யாதாயிருந்ததெனக் கவனிப்பவனாயில்லை. இத்திற வழக்கப் பேழ்வாய் முதலை அவன் முதலிய உலகரை விழுங்கி விடுகிறது.

இஞ்ஞான்றும் உண்மை கண்டார் மாட்டு ஏதங்கூறத்

துணிதல் ஏதமேயாம். ஒவ்வொரு மாந்தர் பற்களுங் கணக்கிடப்பட்டுள; கணக்கிடப்படுகின்றன; எண்ணமும் அளக்கப்படுகின்றன; மறைத்தற்கியலாது.

அகழ்வாரைத் தாங்கு தரை போலத் தன்னையிகழ்வார் செயல்பொறுத்தல் சால்பினுஞ் சால்பிற்று. நீங்கி நிற்றல் நேர். ஈசனை வணங்குவோன் தன்னை வணங்கும் படி செய்து கொள்ளான். கொடையுடையான் மூப்பு, நோய், சாக்காடென்ப வற்றிற்கு அஞ்சா வாகையனே. நீர் வேட்கையினனே நீரை யவாவுகின்றனன்; வறுமையாளனே வாலீசனை மனத்திருத்து கின்றனன். வருவாய் விழைந்து நிற்போன் இவ்வுலகைப் பன்முறையும் பார்ப்பன். ஈரத்தில் விதை முளைத்தெழும்; ஈரத்தில் இயற்கையறிவினன் விழுப்பம் வெளிப்பட்டுப் பிறங்கும்.

புறங்காடு புறங்காடாகப் புத்தியுடையார் புத்தியைச் செலுத்துகிறார். அஃறிணையெனப்படு தாவரமனைத்தும் மேனோக்கி வளர உயர்திணை மக்களுட் சிலரன்றோ கீழ்நோக்கி நிற்கின்றனர்.

முட்செடியிலே முட்பறித்தல் பலித்திடினும் முள் முளைக்கும்; இன்னன பல்ல. வெண்சுண்ணத்தில் மஞ்சள் கூட்டப்படிற் செந்நிறமெழுமாறு முயற்சி முஞ்சாது பலிக்கும்; இன்னன பல்ல. மனம் இயங்கியற் பொருளாகலின் முன்னுஞ் செல்லும் பின்னுஞ் செல்லும்; நெருப்பாறு மயிர்ப்பாலங் கருதி நடத்தல் கடன்.

மௌனத்தினும் மிக்க தவமும் தத்துவ நீக்கமும் இல்லை. மௌனத்தினும் மிக்க சாந்தமும் இன்று, தனிமையும் இன்று.

இரண்டு ஆழாக்கு வாழைத்தண்டுச் சாற்றை ஒல்லையி லுட்கொள்ளலாற் பாம்பின் நஞ்சத்தை வெல்லலாம்; குமாரபகவான் நாமோச்சாரணத்தாலும் அதுநல்கிய

நல்லாசிரியனை நம்புதலாலும் உயிர்த் துன்பத்தை யொழிக்கும் மதுகையுறலாம். தகுதி யுணர்வீர்! ஊசித் துவாரத்தில் நுழைவது பெரும் பிரயாசமாயினும் அத்துவாரங் கடந்துவிடின் விசாலமான இடமே காணப்படுவதாகலின் அது கருதி யெவ்வாற்றானும் முயலல் விவேகமாகும். வெற்றார வாரங்கள் ஈண்டுப் பயக்கும் பயன் யாதுகொல்!

பாவம் புரிந்த மனிதன் யேசுவினிடம் அடைக்கலம் புகலால் விடுதலை யுறுவனென்பது எளிதிற் கூடு நெறியன்றோ என்பார்க்கு முன், அருணாசலமென நினைத்தன் மாத்திரையே விடுதலையுறுவனென்பது அதனினும் எளிதிற்கூடு நெறியன்றோ என்பாருமுளர். இங்ஙனம், வேண்டுவார் வேண்டலின்படி விமலனருள் செய்யுமென்பதே யான் கண்டுபிடித்த முடிவாம்; வயா யாதென்றுணர்க. உண்மை யுணரினும் தேசாபிமானம், பாஷாபிமானம், சினேகாபி மானம், குலாபிமானம், தனாபிமானம், மதாபிமானம், அசூயை யென்பவைகளால் மனச்சான்று கொன்று கூறலேற்படும். மனச்சான்று கோறல் சத்திய மிழந்ததாகும். அது, சத்தியம் பேணிச் சத்திய சங்கல்பனது நித்திய சன்னிதியை யடைவார் கொள்ளத்தக்க தன்று. மனச்சான்று கோறலை நேசித்தலும் முத்தி விக்கினமாம். தூங்கற்க.

மூத்து ஊனிலுண்டாகியும், பட்டு பூச்சியிலுண்டாகியும், ஊது குழலோசைகள் எச்சிற்காற்றின் சம்பந்தமாய்த் தோன்றியும், வாய்திறந்து பாடுபாட்டுக்கள் அவ்வாறு தோன்றியும் மேம்பாடுடைமை கொண்டன; அசத்திய நீத்த அறிவுடையார் எத்தேசத்தில் எக்குடியிற்றோன்றினும் மேம்பாடுடையராயினர் ஆவர். ஈருயிரின் கூட்டம் ஒருயிர் வருமிடமாம். மூவுயிரின் கூட்டமே ஒருயிராய் நிற்கும். இரு குரங்குக்கையையும் வெள்ளரியையுமரைத்து அடையெனத் தட்டிச் சட்டியிலிட்டுச் சுட்டு வெண்ணுரை தடவியுண்டல்

இருமலையொழிப்பது போலச் சத்திய சங்கல்பனடியவரை நம்புஞ்சரதம் அழுங்க லொழித்தருளும்.

வெண்டைக்காய் சமைத் துண்போனுக்கு மண்டை மூளை யறிவு வன்மைத் தாதல் போலவே எனது செவியறிவுறூஉ ஆன்மாவுக்கு மதுகைத்தாமென்று கூறுநான், கடன்கொடுத் தானைக் கண்டு கடன்பட்டான் வில்குவதுபோலச் சாதிபேதமற்ற சர்வ கர்த்தாவின் சன்னிதியைச் சாதிபேத முடையான் அடையாது விலகுநனாவன்; புராதனமாக உண்டி ஆசாரம் பாராட்டுதலினின்றும் நவீனமாக அதனோடு உளத்திற் கபடம் முதலிய அனாசாரமெய்தாது காத்தல் விசேடம் என்னும் பொருள்கள் இனிது பொருந்தப் பின்னத்தூர்ச் சீடர்களுளொருவராய சிவராமப்பிள்ளைக்கும் அன்பார்ந்த சந்திரசேகரப் பிள்ளைக்குங் கூறத்தக்க வமையத்திற் கூறியுள்ளேன்; நீயிருங் கவனித்துக் கொள்வீர்களாக.

உடம்பு வீக்கம் உவகைப் பூரிப்பாகாதே என வறிந்தாங்கு அல்லலிற் பெருகு கண்ணீர் ஆனந்தக் கண்ணீராவதின்றே எனவுமறிந்து உய்திவிழை நுண்ணியோர் புகழ் அருணகிரிநாதர் சிந்தை குடிகொண்ட தெய்வத்திருவருள் நம்மைக் காத்தருள்க. ஓம்.

இரண்டாஞ் செவியறிவுறூஉ

(SECOND STATEMENT)

திருவல்லிக்கேணிவாசியும் சீடருமாயுள்ள பு. சின்ன சுவாமிப் பிள்ளையெனும் பெயரிய சுப்பிரமணிய தாசரைப் பார்த்து ஆசிரியர் அறம்பிறங்கச் சில கூறத் தொடங்கினார்.

அன்பிற்பெரியாய்! நெடுந்தூரத்துள்ள ஒரு மஹா சிவாலய க்ஷேத்திரத்தைத் தரிசிக்க வேண்டுமெனும் அவாவினாலே பெரிதுந் தூண்டப்பட்ட வொருமனிதன் ஒல்லையில் அது காண்பதெஞ்ஞான்றோ வெனும் வயாவின் வயப்பட்டே விரைந்து செல்பவனாவான். அது கண்டவுடனே கோபுரமாந் தூல லிங்கத்தை வணங்கிக் கொண்டு உள்ளன்பூற்றெடுக்க அத்தல மூர்த்தியையும் வணங்கி நிற்பான். வணங்குதலின் அற்றைப்போதிருந்த சிரத்தை மறுநாளிராது. நாளாக ஆக உதிர்ந்த பூ வாடி வரள்வதுபோல அது குன்றிக்குன்றிப் புலர்தலுறும். காரணம், நாம் கண்ணுற்றதுதானே அதிசய மொன்று மின்றெனுந் துணிபேயாம்.

இப்படியே மகாத்துமாவெனுங் கேள்வியினாலும் ஆக்கிய நூல்களாலுந் தன்னாற் பெரிதும் மதிக்கப்பட்ட தூரதேயத்து மனிதரொருவரைத் தரிசிக்க வேண்டும்; அத் தரிசனத்தாற் பாவம் போக்க வேண்டும்: புண்ணிய மேற்க வேண்டுமென்னுங் கருத்துடை யொருமனிதன் செய்கை யுமாம். அன்புடையாய்! மனிதர்களுக்குள்ளே சகசமாய் இஃதுண்டாமென்றுணர்தல் விவேகி கடன்மையாம். இக்கடன்மை யுடையோன் எளிதாக மனிதரை நம்புதல் கூடாது. பல்லாண்டு பழகி நயங்கண்டு நம்ப வேண்டும். இகழ்தலாலும் ஏசலாலும் அவர் தன்மையை வெளிப் படுத்திக் கொள்ளலுங் கூடும்.

பரிவிற்பிரியாய்! யான் நின்னையும் நின் மனைவியையும் பன்முறையும் ஏசியிகழ்ந்துள்ளேன். நீவிர் நல்கு ஆகாரத்தையும் இன்சொற்களையும் எட்டு மாதங்காறும் விலக்கிப் புதுப்பாக்கம் – அன்பார்ந்த இராமநாத முதலியார் நல்கும் ஆகாரத்தையுட். கொள்பவனாயிருந்தேன். பின்னர் நீயும் நின் வாழ்க்கைத் துணைவியுங் கண்ணீரோடுங் காட்டிய பேரன்பு பெரிதுங்கண்டு கழிபெருங் காதல் கூர்பவனாயினேன். நுங்களுக்கும் மற்றுள்ளபடி என்னை நம்பி நலமிழைத்தார்க்கும் என்னுள்ளும் புறமுமிருந்து என்னையாதரித்தருள் பரமன் யாவனோ. அவனது திருவருள் உயிர்த்துணையாய் நின்றருளுமாக. இது தப்பாது. ஏது – யான் அதிவயோதிக தசையிற் காலொன்று முரிந்து தளர்தலிற் பெரிய வைத்தியசாலையில் உடலொழிவை யெதிர்பார்த்துக் கிடந்தபோது அவ்விறைவன் தகுதரிசனங் கொடுத்துத் தனது இரக்கத்தையும் மகிமையையும் பல்லாற்றானும் வெளிப்படுத்தி நின்றவாறும், என் சிறு பிராயகாலந் தொடக்கமாக இன்று காறும் ஏற்புடைமை கருதி யென்னை யிரக்ஷித்தருளியவாறு மேற்பட்டமையாம். நீயும் சில கிருபைப்பாடுகளை நன்கறிந்து கொண்டவனாகவே யிருக்கின்றனை.

மன்பதையுள் ஒருவனது உடலொழியுங்காறு மெய்து பலன்கள் மிகுதியும் ஊழ் வழியேயாமென்பது தான் இரகசியமாய் மறைந்துகிடப்பது. அனுபவமாமாறு முயற்சியும் அது தழுவிநிற்குந் தன்மைத்தே. இது மெய், மெய், மெய்யென மும்முறையும் வலியுறுத்தவுள்ளேன். இதுவே ஜனன சக்கரம். இவ்வுண்மை யுணராதிழுக்கினாரெல்லாம் ஆகூழ் போகூ ழறியாதாராகலின் அவர்க்கு யான் யாது கூறவுள்ளேன். இவ்வூழ் எவ்வாறேற்படுகிறது? எனக் கடாவலும், ஆண்டுறு காரணங்கூறத் துணிதலும் ஏற்புடையன ஆகா, ஆகா.

உலகமாயுள்ள தாவர சங்கமங்களின் சகல விலக்கண

காரணங்களையும் எவர் தாமறிந்து கூறவல்லுநராவர்? எப்புத்தகந்தானெடுத் தியம்பும்? என்னும் கடாக்களுக்கு ஏற்புடை விடை யாவை? ஈசனது திருவுளப்பாட்டை அறிய வல்லுந ரொருவருமிலரே.

எல்லா வன்மையுமுள்ள அவன் வசத்திலே கால மிருத்தலினால் அவன் சித்தத்தின்படி யாவுமாம் என்னுமொரு நிச்சயஞ் சால்புடைத்தே. அதுகொண்டு அவன் திருநாமத்தை உச்சரித்தலும் இயன்றவளவு அவனைத் தியானித்தலும் அறம்பேணலுமுடையார் இகத்திலே தெளிவுடையராய் அவனை நீங்காதவராய்ப் பரத்திலும் பேரின்பப் பேறுடைய ராய் வாழ்வாரென்றலின் அவனது அகளங்க வுலகை யடைவோர், இறப்புப் பிறப்பெய்தாரென்று முறுதியாகவே யுரைக்கக் கடவேன்.

அறம்பல புரிவோனே யாயினும் ஐயமுடையோனாய்ப் பல தெய்வ வழிபாடு செய்வோன் அவ்வுலகையடையான்; பிறப்பிறப்பிலுழலுவன். செக்கர்வே ளொருவனே என்கடவு ளென இவ்வுலக வாழ்வொழித்து வழிபடலிற் சிறந்தோ னெவனோ அத்தீவிரதரன், இப்பிறவியிற்றானே வீடு பேறெய்தியுய்வான். இவ்வுண்மை என்னால் இலிகிதமுஞ் செய்யப்பட்டுள்ளது.

இவ்வடியவனாகிய என்னையும் என் சொல்லையு நம்பாதவன் இத் தீவிரதர கதியை யடையமாட்டான்; நீ மயங்கவேண்டாம். பரிவிற் பெரியாய்! நீ பாராயணஞ் செய்கின்ற மகா மகிமையுடைச் சண்முக கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து அக்கதியிற் சேர்க்குமே.

சிவஞான தீபத்தி லென்னாற் கூறப்பட்ட குமாரரோ பாஸ்திக்கும் வேறாகு சடக்கர எந்திர மந்திரங்களோடு கூடிய அனுதின கருமானுஷ்டான மொன்றும் இத்தீவிரதரகதி

மார்க்கத்திற்கு வேண்டற்பாலதன்று. உடம்புக்கு உறுதிபயக்கு மாறு உபவாசம் வேண்டற்பாலதாம். அது தபமென மதிக்கப்படுகிறது. "மந்திர மெந்திர மந்தர நெறிக்கில்" என்னு ஞான வாங்கியங் கருதுக.

என்னையும் சேய்ப்பரமனையும் நீங்கா நெறியராவா றெல்லாம், என்னுடைய செய்யுள் நூல்களாய ஆறு மண்டலங்களையும் வசன நூல்களையும் படித்துணரக் கடவரால்.

வாய்வாழாமை (மௌனம்), கறைமொழி கேளாமை, பாவரூபகன்மம் பாராமை, வாசனை விரும்பாமை, பெண் தழுவலின்மை எனப்படும் இந்திரிய பந்தனம் ஊமைக்கும், செவிடற்கும், குருடற்கும், மூக்கிலிக்கும், பேடிக்குங்கோடல் விவேகமாகாமை போல யூகமில்லியைக் கபடமிலானெனக் கோடலும், பெறற்கருக ருணராது பிறர்க்கு நல்குமூட்னை கொடையாளனெனக் கோடலும், மரியாதை மானம் பேணாதானைப் பொறுமையனெனக் கோடலும், வறுமை நோய்க்காற்றாது மரிக்கத் துணிந்தானை மரணத்துக்கஞ்சா மாவீர விவேகியெனக் கோடலும் விவேகமாகா.

இரண்டு கடுங்கற்களை யிரண்டுகைகளாலும் பற்றிக் கொண்டு ஒன்றிலொன்று படும்படி இடைவிடாது தட்டுஞான்று வீழ் தீப்பொறியைப் பஞ்சிற் பிடித்துத் தும்பிலூட்டித் துணியிலேற்றி நெருப்புண்டு பண்ணுஞ் சிரமகாரியம் பண்டைத்தாகலின் அதனை இஞ்ஞான்றுங் கொண்டு, மருந்து பூசிய சிறு குச்சிவழிச் சிரமமிலாது நெருப்புண்டுபண்ணுங் காரியம் புதுவதாகலின் இதனைத் தள்ளிவிட வேண்டுமென்பதூஉம், பீங்கானெனும் ஒரு வகை மட்கலத்தில் உணவுப் பொருகளிட்டு உண்ணுங் காரியம் நாகரிகமான புதுவதாகலின் இதனை யெஞ்ஞான் றுங்கொண்டு வாழையிலையில் உணவுப் பொருள்களிட்டு

உண்ணுங் காரியம் பண்டைத்தாகலின் இதனைத் தள்ளிவிட வேண்டுமென்பதூஉம் ஏற்புடையன ஆகா. பழையதே யாயினும் புதுவதேயாயினும் நயமுணர்ந்த வழிக் கொள்ளத் தக்கது கொளல் விவேகிகண்மாட்டுளதாலோ. தகுதித்தாய இக்கொள்கையை எத்தேசத்து எப்பொருட் செயலிலுஞ் செலுத்தற்கு உலக நலங்கருதுவார் தடையுண்டுகொலோ?

மறத்தையும் அறத்தின் பாலதாக்கி கூறுஞ் சமர்த்து, மறம்புரிந்து அதன் பயனுற்று உய்திபெறுமோ? விண்ணிலும் மண்ணிலும் விவேகமுடையார் யாவுமறிந்து முடிவு மொழிந்தன ரென்றற்கிடனின்றி அறிய வேண்டிய பொருள்க ளுஞ் செயல்களும் எண்ணில வுளவென்றல் கொளக் கிடக்கின்றது. தோல், செந்நீர், தசை, நரம்பு முதலியவற்றைக் கடந்துள்ள எலும்பையும் ஈரல் முதலியவற்றையும் வெளிப்படக் காட்டு மொருகருவி பண்டைக் காலத்து மிருந்ததுண்டோ? மண்ணெண்ணெய், மாகமீன்களிலுறு பொருள்கள், காரணங்களனைத்தும் பண்டைநாளறிந்து கொண்டதுங் கூறினது முள்ளனவோ? யுத்திவாதப் புத்தகங்கள் படித்துப்பிதற்றித் திரிவாரும் அச்சமர்த்தரும் ஈங்கென்கடவர்! நடுவுநிலை திறம்பாதார் கவனிக்கக் கடவர்.

பேரன்பிற் பெரியாய்! தையல்நசைத்தளையர் துறவறத்தை யிகழ்ந்து ஞானம் பேசல், வியபிசாரி, கற்பையிகழ்ந்து களிகூர்தலொக்கும். கொல்லாவிரதி யானென்பானை நோக்கி நின்கை வாள்கொண்டமை யாது கருதி? எனக் கடாவுநர்க்கு அவன், சும்மா கொண்டுள தென்பதை விடையாயிறுக்கு மேல்வை, சும்மா கொண்டதைச் சுமக்காதெறிந்துவிடல் அறிவுடைமையாமே யென்பார் கட்டுரையை அத்தளையர் புத்தியிற்படுமாறு செய்யலாம். தோலுரியாது பழந் தின்றலில்லை. பிரபஞ்ச நீக்கமே பெருமான் ஆக்கமென்பது சரதம்; சரதம். தோலொடு தின்னத்தக்க பழமுஞ்

சிறுபான்மையுண்டு. இது சாமுசித்தத் தன்மையிலேயும். இவ்வுணர்ச்சிக்கு உதவி புரியத் தக்க பெருநூல், எனது பரிபூரணானந்த போதத் துறவற விளக்கப்படலமும் அதனுரையுமாம்.

நாய்கட்கிடுமுணவாற் பேய்கள் திருப்பதியுறா, பேய்கள் திருப்தியுறலாலும் தேவர்கள் திருப்தியுறார்; அவ்வக் காரியத்திற்கேற்பச் சிற்றளவும் பேரளவுமாஞ் சகதருமமே சித்திக்குமாகலின் ஆண்டவனை யுளப்படுத்துமொரு நிலை நீக்கித் தேசத்தார்க்கு உபகாரஞ் செய்யக் கடவேனென்னும் ஊக்கத்தெழூஉமுஞற்றல், இக பர சாதகமாம் இரு பெரும் பயன் ஈயாது.

குடிகள் அரசற்கடங்கியும், அரசன் முனிவர்நூல் உரை மறைகட்கடங்கியும், முனிவர் ஆண்டவனருட் குணத் தடங்கியும் நீடுநின்ற நிலைதான் பூர்வத்திற் பிறங்கியிருந்த பெருவாழ்வென்பது திறம்பட்டவுரைக்குந் திருவுரையாம். இகம் சித்தியாதுபோயினும் பரம் சித்தியாது போமோ?

மரணத்திற்குரிய மனிதன் மரணமிலா வொருவனை நாடல் யாண்டும் போற்றற்குரிய அரும்பெருங்குண மெனற்கு ஆர்தடை யொன்றுமின்றே.

எட்டிப்பழத்திற்கு அதியழகிய செவ்வண்ணத் திண்மை வாய்ந்தாங்குச் சில மனிதர்க்கு இரத்தினவேல், தங்கவேல் சித்திரவேல், வச்சிரவேல், குமரன், குமாரன், கந்தன் முதலிய திவ்விய நாமங்கள் வாய்ந்திருக்கும். அவர்கள் வளவிய சிவசின்னங்களோடுங் காணப்படல் கூடும். அவர்களை நம்பி மோசம் போதல் கூடாது.

1. விழுப்பமற்ற வறுமையினாலேனும்,

2. மனைமக்கள் தாய் தந்தையர் புரிஅடாச் செய்கை

களாலேனும்,

3. அன்னோர் தன்னை மதியாமே இகழ்தலினாலேனும்,

4. நோய் வாய்ப்பட்டு அவயவ உபயோகங் குன்றினமை யாலேனும்,

5. பிறர்புரி வந்தன வழிபாடுகளில் தனக்கு ஆசை தலைப்படு மியல்பினாலேனும்,

6. தனதிஷ்டப்படிக்கெல்லாம் உண்ணுமுணவு விருப்பத்தினா லேனும்,

7. மரணமேயின் தன்னுடம்பைப் பூமியிற் புதைத்து வைத்துப் பூசிப்பார்களெனும் அவாவினாலேனுந் துறவி வேடம் பூண்டு நிற்குநனை மெய்யடியானென நம்பி நிறைவு விரும்பி நிற்றல் மின்மினிப் பூச்சியிடம் நெருப்புக் கேட்டு நிற்றலொக்கும். ஆளைத் தெரிந்து கோடலே இங்ஙனம் அவசிய மென்றுணர்க.

அன்னோனனைய யாவர்பாலும் அபரவித்தையையுங் கவனித்தல் கடப்பாடாம். அவ்வித்தைகளாம் புத்தகங் களுடன் முழுப்பொய்யும், பொய் கலந்த மெய்யும், அறியாமையு மிருத்தலுங் கூடுமாகலின் அனைத்தும் மெய்யெனக் கோடலுங் கூடாது. உதாரணம்:— இமயமலை கடந்து வான்மீகி முதலிய இருடிகளைக் கண்டு அவர்களோடு கைலாச பருவதத்தை வலம்வருஞான்று யான்பாடு தமிழ்ப்பாட்டுக்களை அவ்விருடிகளெழுதினார் களெனவும், ஆங்குறு திருக்கோயி லிலே சிவபெருமானை நேரிலே யான் தரிசித்துக் கொண்டு அப்பாட்டுக்களோடு பரதகண்டத்துக்கு வந்துவிட்டே னெனவும், பின்பு பொதிய மலை போந்து அகத்தியமா முனிவரைத் தரிசித்து அவர் கட்டளைப்படி தமிழ் நாடெங்கும் மோனஞானோபதேசஞ் செய்ய வந்தேனெனவும் ஒருவர் தமது

புத்தகத்தெழுதி வைத்தாரென்றலும், அவர் முன்பாகவே சம்பாஷித் துண்மையுணர்ந்து கொண்ட யான் அவர் 4, 5– வருடங்கட்கு முன்னேதான் இத்தேயத்தே தேகவியோக மெய்தின ரென்பதை யறிந்து கொண்டேனென்றலும், விலைக்கு விற்கும் பொருட்டுத் தாயுமான சுவாமிகள் பாடலை அச்சிட்ட வொருவர் அச்சுவாமிகள் சரித்திரச் சுருக்க மாயுள்ளதைச் சுருக்கி வரைந்து கொண்டு அதன்கண், இராமநாதபுரத்தில் அவரது திருமேனி சமாதி செய்யப்பட் டுளதென்பதை மறைத்து, அவர் ஆகாயத்திற் சோதியாய்ச் சென்று மறைந்துவிட்டனரென எழுதியிருத்தலைக் கண்ணுற்ற யான் அவ்விதமாக வரைதற்கு ஆதரவென்னை? என்று அவ்வெழுதினாரை நேரில் வினவியபோது அவர் அப்படித்தானிருக்க வேண்டுமென்று சொல்லின ரென்றலும், (கலியுக புராணம்) கல்கி புராணமெனவொரு புத்தகம் நூதனமாகத் தமிழில் வரையப்பட்டதை யானறிந்துளே னென்றலும், தான் கூறும் எதிர்காலச் செய்திகளுள் யாதும் நடைபெறாமையாற் பௌஷியோத்தர புராணமென்ப தொன்று அங்கீகாரமிலாது கிடக்கின்ற தென்றலுமாம். இன்னனவும் பலப்பலவென்னலாம். அவை பழையனவுமாம்; புதியனவுமாம்.

இவ்வித புத்தகங்களுள் வருகதைகளை நம்பிச் சுவர்க்காதிபதியாய இந்திரனுடம்பிலுற்ற ஆயிரம் பெண்குறிக ளுமே ஆயிரங் கண்களாயினவென்று வசை கூறுதலும், மகா ஞானசிரோமணியாய் மகா மகிமை யுடையோராயுள்ள அகத்திய மாமுனிவரும் பிற இருடிகளும் இந்திரனேறிச் செல்லுமொரு தண்டிகையைச் சுமப்பவர்களே யென்றிழித் துரையாடலும், மிக்க நியாயாதிபதியாய் விளங்காநின்ற யமதருமராஜாவை, “கண்டாயடாவந்தகா வந்துபார் சற்றென் கைக்கெட்டவே” என்னும் அருணகிரிநாத சுவாமிகள் வாக்கினை யனுசரித்து அறம் பிழைத்தலில் வைத்துக்கூறத்

துணிதலும், விக்கினேசுவர ருடைய உத்தமாங்கமாகிய யானைத்தலை இயற்கைத் தென்னாது செயற்கைத்தென்னலும் ஏற்புடையனவல்ல என்றலே பெரிய தருமமு நீதியுமாம்.

சூரியனும் சந்திரனும் மற்றெவ்வுலகங்களும் அவற்றிற் காதாரமான பிரணவமும் உயிர்த் திரள்களும் பரம காரணத் தடங்கி யுள்ளனவாகலின் அவ்விதகாரணப் பொருளாய் உமாபதியாயுள்ள சிவபெருமான் குமாரனா யுள்ள செவ்வேள் முதலிய திவ்விய தேவமூர்த்திகளை மலபந்தத்துட்படுத்து மகிமைமாழ்கக்கூறுங் கூற்றுக்களை யொழித்தலும் இங்ஙனம் வேண்டற்பாலதே.

போந்த அகத்தியனார் முதலினோரல்லாத அப் பெயர்களுடை முனிவர் வேறிராரோ? எனின், ஈங்கது பற்றிய வெதிர்ப்பு ஒன்று மின்றென்க.

படித்தவொரு மானவன் *60*–வயதிற்கிருப்பானாயின் தன்னுடைய *30, 40*– வயதிற்குட்பட்ட காலத்தே தான் கண்ணுறு பெரியாரை மதியாதிகழ்ந்து பேசுமோ ரமுக் காற்றிலே ஆழ்ந்து கிடத்தலும், அப்பெரியாரே தெரித்துள்ள தேவசம்பந்த நூல்கள் அவ ருடம்பழிவின் மேலே *50, 60*– வயதிற்குள்ளே தான் காணக் கிடைத்தக்கால் அவற்றையும் அவரையும் புகழ்ந்து கூறுதலான் மதவிருத்தி யுண்டாமெனும் ஓரபிமானங் கொண்டு அளவிற் கதிகமாம் மகிமைகளை அவர்மாட்டேற்றிப் பொய்க்கதைகளியற்றலும் இப்பரத கண்டத்திற் காண்டல்அருமையன்று.

இவ்வழியேற்படு புத்தகம் மற்றெந்த மதத்திலும் உண்டென்றலும் அரிதோ; வறிதோ? மேல், போந்த மகிமைகள் பொய்யாயினும் தெய்வ பக்தியை விருத்தி செய்யாவோ? எனின் — நூற்றைக் கெடுத்தது குறுணி என்றற்கிணங்கப் பற்பல வுண்மைகளையும் அவை கெடுக்கு மென்பதூஉம்,

பிற்காலத்துப் பொய்யடியா ராகா மெய்யடியாரனைவரையும் இழித்துக்கூறும் அவிவேகி காரியத்திலே அவை எடுத்துக் காட்டாய் நிற்குமென்பதூஉம் கூர்த்த புத்தியுடையார் எளிதாகவே உணர வுள்ளன வாகலிற் பக்தி விருத்தி செய்யாவென்க.

அருளுக்குரியாய்! யாவர் சருவஞ்ஞத்துவ முடைய ராய்க் காணப்பட்டார்? அப்படி யொருவரிருந்து பூதபௌஷிய வர்த்தமானம் எழுதிவைத்தனரா? என்பனவற்றிற்கு விடை யாவை? அத்திறநூலொன்று மின்றே. இவ்வேதுவொன்றும், ஆண்டு திங்கள் நாளொன்றுங் காட்டா புத்தகங்களே பழையனவெனக் காணக் கிடக்கின்றன வெனும் ஏதுவொன்றும், ஆன்மலாப அற்புதப் புதுச்சரிதைகள் காட்ட வழியின்றிப் பழஞ்சரிதைகளே அப்புத்தகங்களிலிருந்து காட்டப்படும் ஏதுவொன்றுமாகிய மூன்றுங்கொண்டு பண்டையெழுத்துக்கள் நம்புதற் குரியனவல்ல வென்று துணிதல் முதுகுகாட்டுமாறு யாங்ஙனம்? கொளற்பாலனவே கொளத்தகும். 9000 டிக்கிரி வெப்பங் கொண்ட இப்பூலோக சூரியனுக்கும் பெரிதெனும்படி 11000 — டிக்கிரி, 14000 — டிக்கிரி, 19000 டிக்கிரி வெப்பங்களுடை நக்ஷத்திரங்களாய சூரிய கோளங்கள் உன்னத விண்ணிற் காணப்படுகின்றன வென்று ககன கணித நிபுணர்கள் கணக்கிட்டனரால். இவ்வெப்புப் பொருள்களை ஆண்டவன் இன்ன பயன்கருதியுண்டு பண்ணினனென்று எவர் தாம் அறிந்துரைத்தனர்? உரைக்கின்றனர்? உரைப்பார்? ஆன்ற அருட்குண இறைவன், ஏககாலத்திற் பல்லாயிரந் திரள்மாந்தர் உயவுற்று இறந்துபடவும் பார்த்திருத்தலென்கொல்? எனக் கடாவுந ருளரேல் அவர்க்கு, அவ்விறைவன் திருவுளப்பாங் கெல்லாம் நீர் உணர்ந்து கொண்ட துண்டா? அத்திறவுணர்ச்சி யெவர்க்கும் வாயாதே. இன்னனவும் பலவே எனவியம்பல் ஏற்புடைத்தாம்.

ஊசித்தலையன், எத்துணைப் பெரும்பொருள் வருவாயைக் காண்பவனேயாயினும், எத்துணை யுயர் கல்வியுணர்வுடையனே யாயினும், எப்பீடருதவியை யுடையனே யாயினும் அவை யெல்லாம் ஒழியும் வழியாயொழியத் தரித்திர மனுபவிக்கப் பிறந்தவனேயாவன். மாங்காய்த் தலையனுங் குருவித் தலையனும் அறிவு பெரிதும் மங்கினவராய்த் தரித்திரமு மனுபவிக்கப் பிறந்தவரேயாவர்.

இப்படியே பொறாமைப் பேய் நெஞ்சனுங் கடவுளாக்கத்தைப் பெறாமல் அறிவு மாழ்கி யொழியப் பிறந்தவனே யாவன்; ஐயமின்று. அவன் பிறரை நோக்கி 'நீவி ரெல்லீரு நல்லாராயுள்ளீர்' என்றுங் கூறுவன், தன்னை நல்லவனென்று நினைக்குமாறு. அதிலே மகிழ்தல் ஒரு சிறிதும் வேண்டற்பாலதன்று. 'ஆண்டவனொருவனே நல்லான் மற்றையார் அச்சொல்லைத் தாங்கற்குரியரல்ல ரென்னுஞ் செஞ்சொல், நின் செவிக்கு இன்சொல்லாய் நிகழ்தல் வேண்டும்.

உடம்பிற்கு வேறான வெளியிடத்துப் பொருள்களின் தூசியோடு உடம்பின் உரிதோலுஞ் சேர்ந்தே அழுக்காகத் திரளுகின்ற தென்னு முண்மையுணரா மாந்தரெல்லாம் அத்தூசி படிதலே அழுக்கென வெண்ணுகின்றனர். விழுமியோர் உண்மையுணர்கின்றார். அவர் அத்தூசிக்கு நிகராகவே பல்பொருள்களின் வனப்பு, மணம், சுவை, சொற்சம்பிரமம், தொழிற்பீடு ஆகிய இவையனைத்து மெண்ணப்படுமெனவும், அவ்வுரி தோற்கு நிகராகவே புலன்களினியல்பாகு நசைகளு மெண்ணப்படுமெனவும், ஒன்றுபடுதலினெழும் அவ்வழுக்குத் திரட்சிக்கு நிகராகவே அந்நசையு நசைக்குரியனவு மெண்ணப்படுமெனவு முணர்கின்றார். ஆகலின் அழுக்காம் அனித்தியவுலக நசைவிடயம் அணுத்துணையும் வேண்டாது நித்தியவுலகப்

பிரயாணியாய் நிற்கவேண்டும். உண்பனவு முடுப் பனவுமாகிய இரண்டுங் குகார்ப்பணஞ் செய்து கோடல் கடன். பிரிய நேயனே! அந்தப் பிரயாணத்திலே யான் முன்னே நிற்க வேண்டியவனாவேன் ஆகலின் நீ என்னுருவை மறத்தலாகாது. ஆவதேல், யான் யாது பெறுவேனோ அது, நினக்கும் பிராப்தமாம். ஒருவனையே நம்பியுள்ள என்னை நம்பு வோர்க்கு அவ்வொருவனருள், செய்வதைச் செய்யவுளது. அதற்கது கடன்மையாம். அவன் யாவுங் கண்டுகொண் டிருக்கிறான்.

எதிலே புத்தி பதிதலில்லையோ அது சித்தியாகாது. எங்ஙனே யிறைவனை நம்பவில்லையோ அங்ஙனே அவனாலெய்து நயமில்லாதுபோமாகலின் முழு மனத்தோடும் ஊக்கத்தோடும் இரண்டற்ற தேவவழிபாடு செய்யத்தக்கது.

சிறகுகளையசையாது விண்ணிடைப் பறந்து செல்பருந்து, மேலிடத் ததிகமுஞ் செல்லும். சிறகுகளையசைத்துச் செல் காக்கை முதலியன, ஆயிடை அதிகமாகச் செல்லா: உய்த்துணர்க.

நயன நோய் தீர்க்கச் சீரையிற் சிதைத்து வைக்கப்பட்ட வாழைக் கிழங்கும், படிகாரமுமாமாறு மனநோய்தீர்க்க வாலிறை வாலீசன் நினைவன்றி மற்றெஃதாம்? நோய் நோயைப் போக்காதே. நீ யிரக்கங் காட்டினால் அவனும் இரக்கங் காட்டுவான், நீ கடினமானால் அவனுங் கடின மாவான். உன் கை நீண்டால் அவன் கையுநீளும். நீ பிறர் குற்றம் பொறுத்தால் உன் குற்றம் அவன் பொறுப்பான்; எஞ்சுவதொன்றுமின்று. இவைகளை யுய்த்துணர்க.

அருணகிரிநாதனார் இதயாரவிந்தத் தேறல் நுகர்ந்த தெய்வத்திருவருள் யாண்டு மெஞ்ஞான்றும் முன்னின் றருள்க. ஓம்.

மூன்றாஞ் செவியறிவுறூஉ

(THIRD STATEMENT)

C. மீனாக்ஷிசுந்தர முதலியார், V. இராஜாபாதர் முதலியார், S. சிவசங்கரத் தம்பிரான், C.S. மதுரை முதலியார், P. ஜகந்நாத முதலியார், V.C. இராமநாத முதலியார், ஆ.ந. அருணாசல முதலியார், க. வேலாயுத முதலியார், மாசிலாமணி முதலியார், தாமோதர முதலியார், குருசாமி முதலியார் முதலிய பலரையு நோக்கி ஆசிரியர் சில அறிவுடைமைகளைப் போதிக்கத் தொடங்கினார்.

அன்பின் மிக்கீர்! ஆகாயவெளியில் அனேக கோடி வருடங்களுக்கு முன் அளவிடற்கொண்ணாப் பேராவிப் பிழம்பொன்று தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருந்த போது மிக்க பெரிய பெரிய சில கொம்புகள் தோன்றின் வெனவும், (அப்பிழம்பிற்றோன்றிய) அவற்றுட் கடினமும் ஒளியும் பொருந்தியன மட்டும் பல்கோடி வருடங்குட்குப் பின் தெறித்தோடி ஆகாய வெளியில் நட்சத்திரங்களா யினவெனவும், அவை யாவுஞ் சூரிய கோளங்களாயவாறு போல நாம் காண்கின்ற சூரியனும் அவற்றுளொன்றேயாயிற் றெனவும், அச்சூரியனிற் பல்கோடிமைல் நீட்சியுடைய ஆவிக் கொம்பொன்று தோன்றிற்றெனவும், அதன்கட் கடினமான பகுதிகள் தெறித்தோடி இந்த பூமியும் செவ்வாய், புதன், வியாழம் முதலிய கிரகங்களுமாய்த் திகழ்ந்தனவெனவும் மேனாட்டுக் ககோள ஆராய்ச்சியினர் ஊகித்தோதுகின்றனர்.

இவ்வூகத்தை நம்புவோருள் அனேகர் இவ்வுலகம் தானேயுண்டாயதெனுந் துணிபுகொண்டு நாஸ்திகமும் பேசுநராயினர். அனேக கோடி வருடங்கட்கு முன்னே

தெறித்தோடினவற்று ளெதுவுந் தெறித்ததாகவேனும் ஒன்றன்மீதொன்று வீழ்ந்த தாகவேனும் இன்றுகாறுங் காணப்படாமையால் அவ்வூகம் நிலைபேறாதலும், காத்தருளொரு தெய்வம் இலதெனவாதலும் யாண்டைய? எனக் கடாவி ஆஸ்திகமே நிலைபெறுத்துவரால்; அதன் செயல்களை யாவரே அளந்துரைக்கற்பால ரென்பரால் கூர்த்த மதியுடையார்.

ஆலின் கனியினுள் அம்மரமிருக்கின்றது. அதுவும் அத்திறமரங்கள் பல தோன்றியிருக்கத்தக்க பெருமர மாயுள்ளது. அது காண்டற் கரிதாம் இரகசியத்தில் இரகசியமாயுள்ளது. அக்கனியே அண்டபிண்ட சராசர புவனமாம். அது குமாரபகவானது எட்டுருவென வெண்ணப்படும். கனியினுள் விதையே அம்மரமாம். அஃது அப்பகவானது சருவ சிரேஷ்ட லக்ஷண சருவஞ்ஞத்துவ சிற்றுருவென வெண்ணப்படும். விதையினுள் முளையும் மரமாம். அம்மரம் பழுக்குங்கால் அப்பழத்தினுள்ளிருக்கும் விதைகளே பல மரங்களாம். அவை தோன்றியிருக்கத்தக்க அம்மரம் பெருமரமாம். அஃது அப்பகவானது சிற்றுருவின் கண்ணே காணப்படு சருவ புவனத் தொகுதியாம். இது பாம்பு தன் படத்தைக் காட்டுவதுபோல் அவன் காட்டுங்காற் காணப்படுவதாம். இதனைப் பாரமேசுவரரூப மென்ப.

அச்சிற்றுருவே சிந்தையி னிறுவித் திறம்ப லிலாது நெடும் பொழுது உபாசித்தற்குரியது. அது பிரணவாகாரம்.

பகிர்முகத்தனவனைத்தும் அவனது தூலமெனக் கருதத்தக்கன.

இவ்வதரான் உள்ளும்புறமு நிறைந்த ஒரு பெருந் தெய்வம் குமாரபகவானென்றல் சரதம்மாம்.

இலை முதலியன கருதல் விதை கருதும் விசேஷமாக மாட்டாது.

சேய் சேயாகாமற் கருதும்பாடுடையார் சிறந்த பாக்கியவான்களே, நன்மை கடைப்பிடி என்றபடி மரண பரியந்தம் அப்பாடு பற்றத்தக்கதாம். அம்மரண நாளறிந்து கோடலும் எளிதன்று. சோதிடத்தால் முன்னிகழ்ந்தனவெலாம் உண்மையென்று கண்டு கொளினும் மரண தினங் குறிப்பாகக் கண்டுகோடல் ஒல்லாதாகலின் விழித்திருத்தலே விவேக மாகும். இதனையிழத்தல் தனக்குத்தானே வஞ்சகமிழைத்து மடிவதாய் முடியும்.

மனத்தூய்மை யுடையரெல்லாம் அவனருளைக் கண்டு களிகூர்பவரே யாவர். உப்பும் உப்புமிக்க பொருளும் விரவியவுணவுண்போன் கழிக்கு மலமே துர்க்கந்தமாமாறு அருண்மறதி கலந்த நசைய னெண்ணமே அந்தோ! தூய்மையிலதாகின்றது; தூய்மையிலதாகின்றது.

அகிலம்புகழ் அற்புதமெல்லாம் யானுனக்கு நல்குவேன்! என் மதத்தினைக் கைக்கொண்டு நட என்றொருவ னியம்பி அற்புதமெனச் சில காட்டினும் குகப்பெருமான் திருவடி விழைந்து உச்சிக் கைகூப்பி நிற்பார் அது கொள் ளொண்ணாது. இவரே ஒரு தெய்வ வழிபாடுடைப் புண்ணிய மூர்த்திக ளாகலின். அன்பின் மிக்கீர்! சமயம் விசேடம் நிருவாணமென முத்திறத் தீக்ஷைகள் சைவத்திலுள்ளன வென்றும், அவையின்றி ஆன்மலாப மேற்படாதென்றுங் கூறுவார் கூற்றையும் ஒரு பெருந்தெய்வ வழிபாடுடைய நீவிர் விழைபவரல்லர். என்னை? அம்முத்திறத் தீக்ஷைகளிலும் ஒன்றற்கொன்று விசேஷமான மூவகைத்தெய்வங்கள் உபதேசிக்கப்படுகின்றன வாகலின்; திருவாறெழுத்தின் மந்திரநாயக முருகவேள் வழிபாடு அஃதன்றாகலின்.

மேலைத் தீக்ஷைகளை அறுபான்மும்மை நாயன்மார்கள் கொண்டு நடந்தாரெனற்கும், தேவாரத்தில் அக்கருமபேத தீக்ஷைகள் செய்து கொள்கவென்று எவ்விவரத்தோடுங் கட்டளையிட்ட துண்டெனற்கும் ஆதாரமின்று. அக்கருமஞ் செய்து சீவனஞ் செய்கருமி, ஒரு மனிதனை யோகியாக்கி ஞானியாக்கி நடாத்தத் துணிதல் குருடனுக்குக் குருடன் கண்கொடுத்து நடத்தத் துணிதலை யொக்கும். என்னை? திருமூலர்—

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே."

என்றாராகலின். அத்தீக்ஷைகளையும் பெறுவார் பெறுக; யானொரு தடையுங் கூறகில்லேன்.

என் சீடர்களாய பரமபந்த சிறப்புச் சைவர்களுக்கு என்னாலுபதேசிக்கப்பட்ட அனுட்டிப்பும் திருவா றெழுத்துமே உரிமையுடைய சிறந்த தீக்ஷையாம். (பேதமேய) பொதுச் சைவர் புறனேபோவர். சிறப்புஞ் சிறந்து நிற்பான் பெற்றது கடைக்காலங்காறும் ஓம்பத் தக்கதே. சிறப்பாகிய பயிரோடு களைமுளைத்து நிமிரலுங் கூடும். பயிர் நிமிரும் பொருட்டு அக்களையை நீக்கலும் உரிய வருக்குக் கடப்பாடாம். ஈண்டுப் பழஞ் சூத்திரக் கோளொன்றை ஞாபகப்படுத்துவேனாக. என்னை? அருணகிரிநாதர்—

"முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள் கொண் டறியா ரறியுந் தரமோ"

என்றாராகலின்.

தன்னடியவர்க்குச் செய்யும் அன்னம், ஆடை முதலிய சருவோபசாரங்களையுந் தனக்காகச் செய்யப்பட்டனவென ஏன்றுகொண்டு செய்தோரைத் தனதாக்கத்திலிருத்துந் திருவருட் பெருங்கடலே முருகவேள். அவனைச் சோதிக்க எவருமெண்ணலாகாது. கடின சித்தமுள்ளோருக்கு அவன் அண்மையாக மாட்டான். எஞ்ஞான்றும் எல்லா மகிமையுமுடைய எங்கள் கடவுளே! எதிர்த்துவருந் தீங்கினின்றும் அடிமைகளாகிய எங்களைக் காத்தருள் வாயாகவென்னும் பொருள் பயக்கத்தக்க கந்தக் கடவுள் தோத்திரங்கள் பாடத் தக்கன. யான் உறுதியினின்று பாடியதுண்மையாயின் அத்தோத்திரங்கள் உங்களைத் திருத்தி செய்யவுள்ளனவே. அழுங் குழந்தைக்குத்தான் பால் கிடை.க்கும்.

அன்புடையீர்! குழந்தைகளின் குணங்கோடலும் மேன்மைத்தே. இறைவனிமித்தம் துன்பமுறுநர் இன்பமுறுவார். இது, திண்மைத்தே; திண்மைத்தே.

என் பொருட்டு நிந்திக்கப்படுவோரையும் அவனருள் நலத்திற் சேர்க்கும். என்னை முன்னிட்டுக் கொண்டது காரணமாக நுங்கள் துன்பம் யாதாயினும் தீர்ந்ததாயின், யான் இறைவனிமித்தம் ஏற்படுத்திய மயூர வாகன சேவனமும், கந்த சஷ்டி மகாவிரதமும், மகாசிவராத்திரி பூஜையும், சித்திரா பௌர்ணமி சமுத்திர தீர விசேடமுமாகிய நான்கனு ளொன்றற்கு இயன்ற வுபகாரத்தை நீவிர் செய்யலாம். செய்யாமை கருதி வருந்துதலும் முயறலும் என்போல் வார்க்கில.

திருவடிப் பேற்றை யிச்சிப்போரே! தேடிய சொத்துக்களை ஆளுதற்குச், சந்ததியில்லையேற் சுவிகார புத்திரன் விரும்ப

வேண்டாம். அவ்விருப்பத்தினால் நுமக்குப் பெரும் பிரயோசனமின்று. அவற்றைக் கூறிப்போந்த மயூர வாகன சேவன மொன்றற்கே உபயோகமாம்படி செய்து பெரும் பிரயோசனமடையலாம். கன்மலைமிசைக் கட்டுங் கட்டிடம் எப்பெரு வெள்ளத்தாலும் எப்பெரு மழையாலும் வீழ்ச்சியுறுமோ? உய்த்துணர்மின்.

மார்கழி மாதத்துப் பூருவ பக்கப் பிரதமைதோறு மேற்படக்கூடிய இச்சேவனத்தில் விமானத்தின் மிசை விக்கிரக மிருத்தி வெளியே தூக்கிச் செல்லலில்லை. செய்யொணா தென்பதே எனது துணிபாம். எழிலுடையிரண்டு கோழிக் கொடிகளுக்கும் வேல்களுக்கும் வச்சிராயுதத்துக்கும் புட்பமாலைகள் சார்த்தப்பட்டுச் சந்தனதூபதீப உபசாரங்க ளோடும் நல்ல வாத்திய தோத்திரங்களோடும் இனிது அலங்கரிக்கப்பட்ட வீதியில் அவையுலாவி யிருப்பிடமடையத் தக்கன. சிறந்த ஆயுதம் குடை முதலியன கூடச் செல்லலாம். மற்றுஞ் சிறப்புகள் பல புரியலாம். இருப்பிடத்தே மயூர வாகன பரமன் படத்தைப் பூந்தொடையல்களால் அலங்கரித்து விடியுங்காறும் சண்முக சகச்சிரநாமார்ச்சனை புரிதலோடு அசோகசால வாசமும் படித்தல் வேண்டும். அருட்பெருங் கடலின் மகிமைகளைக் குறிப்பாக வெடுத்து விளம்பும் இது படியாமே இத்திருவிழா நடைபெறுவதில்லையாம். அடுத்த தினம் அடியவர் களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமும் பயசு கலந்த மதுரபானமுங் குறைவிலாது நல்கியுபசரித்தல் புரியத்தக்கது. பண வருவாய் அதிகமேற்படிற் பகர்ந்து போந்த பரம காரியங்கள் ஏற்புடைமையிற் பல தினங்கள் புரிதலு மேற்புடைத்தே. ஞான பூஜையை யனுசரித்து நடப்பதே இப்பரம காரியங்களென எண்ணுக.

நோய் தீர்க்கும் பரிகாரி, அந்நோய் தன்னைப் பற்றாது போமாறு நடந்து கொள்ளக் கடவன்.

என் போதகத்தை உன்னதமான மலைமீதேற்றிய தீபமென நினைமின். அடியவராக்கத்தின் பொருட்டு மகோன்னதத் தானத்திலே அவ்வொருவனிருக்கின்றனன். அது கந்தகிரி யென்றுங் கூறப்படும். அதன் பிரபாவங்கள் ஒரு சில ஸ்ரீமத்—குமாரசுவாமியத்தில் என்னாற் கூறப்பட்டன. அவ்வொருவனைப் பற்றித் திருமந்திரத்தில்—

“எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந்தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்த னிவனென்ன மாட்டிக் கொளீரே.”

என்னுந் திருச்செய்யு ளெழுந்துளது. இதனைச் சைவ ரென்பார் உணர்ந்துளரா ?

திருவள்ளுவர் சகோதரி வள்ளியம்மையா? என வினவுவோர்காள்! தமிழ்நாட்டிலே வடம்துரையென்னு மூரிலே வைகிய கச்சன் எனப்பெயரிய ஒரு சிற்றரசனுடைய மகனே அவ்வள்ளுவரென்பதூஉம், அவருடன் பிறந்தா ரெவருங் காணப்படவில்லை யென்பதூஉம், அவர் ஆதியென்னுந் தாயையும் பகவனென்னுந் தந்தையையு முடையரென்றல் “அகர முதல வெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு” என்னும் அவர் வாக்கினின்றே ஊகித்தலாக வெழுந்த தென்பதூஉம், அவ்வெழுச்சியை விளக்கிக் காட்டற்காய கபிலரகவலானது விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையரெனும் வீரசைவர்களால் முன்னர்ச் சிலவடிகளும் பின்னர்ச் சிலவடிகளுமாக வரைந்து திருக்குறட்

பதிப்புக்களிலே சேர்க்கப்பட்ட தென்பதூஉஞ் சாதிப்பான் மேற்கோள் பலப்பல காட்டி ஆய்வு மெழுதியுள்ள புத்தகம் என்னாற் பார்வையிடப்பட்டது.

இதனால் அவ்வாதிக்கும் பகவனுக்கும் பிறந்தவர்களென எழுதிக்கொள்ளப்பட்ட எழுவர்களு ளொருத்தியாய் வள்ளியம்மையிருக்கவில்லை யென்பதுணரக் கிடக்கின்றது.

மான் வயிற்றில் வந்த வள்ளியும் வள்ளுவருடன் பிறந்த வள்ளியும் வேறுவேறெனச் சிலர்கொண்ட துணிபும், மான் வயிற்றில் வந்த வள்ளிக்கு மறுபிறவி மற்றெருத்தியா யிருக்கலாமெனச் சிலர் நினைத்ததும் பொருந்துமாறில்லை. வள்ளிமாதேவிக்குப் பிறவி கூறல் அசப்பியமாம்.

சாதியுயர்வு தாழ்வு கொள்ளப்படாத வீர சைவாபிமானங் காரணமாகச் சில கேள்விகளையுமொட்டி அவ்வகவ லேற்படுத்தப்பட்டதெனும் ஊகமு மேற்படு கின்றது. அன்பீர்! பிறப்பினாற் சாதி நிலையாதென்பதே எனது துணிபும். திருவள்ளுவர் விடயமாக—

“மலர்கலி யுலகத் துன்னிய மேலோன்
வள்ளலெண் குணனற வாழி
குலகுரு மரபோன். கொற்றவ னென்னுங்
குடமது ராபுரிக் கச்சன்
தவமதி லுதித்த தண்டமிழ் மறையோய்
சருவமு முணர்ந்தபா வலனே
தலமெலா முதற்சீ ராகுல வியார
சங்கமெய் நாயனே யருளே.”

“செந்நாப் புலவர் சீர்பெயர் பெற்றுத்
தெண்ணிறை திருக்குற ளருளி

நன்னா வலர்க்கு நாவுர மீந்து
நானிலத் தோர்நல முற்றார்
புன்னா வடியேன் போற்றவு மறியேன்
புனிதமெய்ஞ் ஞானமா வமுதே
தின்னனூர் மேய திருவளூ ரானாய்
சின்மய நாயனே யருளே."

எனவரு செய்யுள்கள் சிலாசாசனத்துள வென்பதூஉம், கி.பி. 1831–ல் அச்சிடலாய திருக்குறளில் அதனாசிரியர் யாரோடும் பிறந்தனரென்பதொன்றுமின்று; 1835–ம் வருடத்தும் அதற்குப் பின்னரும் அச்சிடப்பட்ட பிரதிகளுள் அஃதுண்டு என்பதூஉம் பார்வையிடலாய புத்தகத்தே காணப்படுகின்றன.

யான் குடும்பியாயிருந்தகாலத்தும் துறவியான காலத்தும் சிலர்க்குத் திருநீறளித்துச் சில நோய்களையுந் துயரத்தையும் தீர்த்ததுண்டு. ஆனால் அச்செய்கையில் யான் அதிகமும் பிரவேசிப்பதில்லை. சென்னையில் ஒருவருக்கு அடுத்தடுத்து வந்துகொண்டிருந்த பெரு வெப்புநோயை அவர் வேண்டுகோளையும் பிறர் வேண்டுகோளையும் அங்கீகரித்து, என்னிறைவனே! இவ்வமையம் இவருதவி வேண்டும்; இவருக்குற்ற நோயைத் தீர்த்தருடி என்று பிரார்த்தித்துத் திருநீறளித்தேன். அஃதுபயோகிக்கப்பட்ட வுடன் அந்நோய் நீங்கினமை கருதி அவர் என்மீது மிக்க பரிவுடையரா யிருந்தார். பின்னர் எனது கால் முரிவுண்டு வைத்தியசாலையை யடைந்தவுடன் அவர் வரவு கண்டிலேன். இறைவன் அருட்டிறத்தால் அம்முரிவு கூடிக் குணப்பட்டு யான் வெளிப்போந்த பின்னரும் அவரைக் கண்டிலேன். யான் துன்புற நேர்ந்த தொன்றே அவர் பரிவு மாறியதற்குக் காரணம் போலும்.

சில ஆண்டுகளாக என்னோடு அன்புடையராகக் காணப்பட்டுப் பேத சைவக் கொள்கையால் என்னை விட்டு விலகிய ஒருவருக்கு எனது கான்முரிவு களி விளைத்தமையின் அது கொண்டாடுமாறு தமக்குத் தெரிந்துள்ள ஒருவருக்கு உடனே முடங்கலெழுதினார். இச்செய்தியை அது பெற்றவரே யெனக்குத் தெரிவித்தார். இவ்வாறு பகைச் சமயிகளுட் சிலருங் களிகூர்ந்தார்களென்னுஞ் செய்தியை யானறியலானேன். மனிதரிவ்வா றிருப்பினும் அவர்களறியாமைக்குங் கடினத்துக்குமே நாம் வியசனிக்க வேண்டியவர்களாவோம். கந்தநாதனுடைய அடிமை விஷயத்திற் கடினங் காட்டுவோர்க்கு, முன்னரேனும் பின்னரேனும் அவனருள் யாங்ஙன மிரங்கியருளும்? நீவிர் பெரிதும் இது கருதற்பாற்று.

வயசாலும் விவேகத்தாலும் ஒழுக்கத்தாலும் முதிர்ந்த பெண்பாலாரும் எம் பரமபிதாவின் திருவடியருளை விரும்புவாராயின் அவர்களும் நுஞ்சிறப்புச் சைவத்திற் சேர்ந்துய்குநரேயாவர்.

நுங்களுள் ஞாபக சக்தியுடையார், என் கொள்கைக்கு வேறுபடா நிலையினின்று நெறியை யெடுத்துப் பிரசங்கிக்கலாம். எத்துணைக் கூலியும் பெறலொண்ணாது.

நுங்களுட் பலரும், எனது பூர்வாச்சிரம நிலையும் எனதுள்ளமும் நன்கு தெரியாதவர்களாயிருக்கலாம். ஆயினும் தெரிந்தமட்டும் எனது பரம பற்றுக்கோடு நுங்கள் கருத்துக்குப் புலனாயிருக்கலாம்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென்னும் ஐந்து திணைகட்கும் முருகன், காளி, திருமால், இந்திரன், வருணன் தெய்வமென வரையறை கூறவந்த தொல்காப்பியப் பொருளதிகாரம், குறிஞ்சி நிலத் தெய்வமே முருகனென்னும்

விவரமும் கூறுவதாயிற்று. இம்முருகனைச் சர்வ கர்த்தாவென அவ்வதிகாரங் கூறினதில்லை யென்பது வெளிப்படை யாகலின் முருகனுக்குப் பரத்துவமும் ஐம்பெருந் தொழிற் பிரபாவமும் அதன்கட் பெறல் கூடாதால். கூடுவது வடமொழி மறை, ஸ்காந்தமென்னும் விசால நூல்களிலேயாம்.

இவ்விவரம் ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம், திட்பம் முதலிய என் புத்தகங்களாற் செவ்வனே தெளியப்படும்: தமிழ்ப் புலவர்களின் ஒவ்வாக் கூற்றுக்களும் அறியாமையும் உணரலாம். தாங் கூறப்புகுந்தவற்றுள் அக்காலத்துத் தமிழர் செய்கைகளையு மெடுத்து அப்பொருளதிகாரத்தே களவிய லென ஏய்த்தார் தொல்காப்பியனாரென்பது பின் வரு விவரங்களாற் கொளக் கிடக்கின்றது. அவ்வதிகாரத்திற் களவென்றுங் கற்பென்றும் பகுத்துக் கொள்வானெழுந்த கூற்றுக்களுள்—

களவாவது — எவருமறியாது தலைவியைக் களவாய்ப் புணர்ந்து திரிந்த தலைவன், அவள் தனித்திருக்கு மிடத்திலே அவளை நாடி இரவில் வருஞான்று இடையூறு காண்பா னாயின் தோழியின் வாயிலாகத் தலைவியின் தழுவல்கருதித் தழையுங் கண்ணியும் பிறவுங் கையுறையாக அத்தோழியிடங் கொடுத்துத் தலைவிக்குச் சேருமாறு செய்தலும், ஆங்கொருசார் அவன் ஒளிந்துகொண்டிருத் தலுமாம் என்ப.

கற்பாவது—தலைவன், தலைவியைக் கொடுத்தற்குரிய இருமுதுகுரவர் முதலாயினார் வேள்விச்சடங்கோடு கொடுப்பக் கொள்வதாம் என்ப.

களவைக் களவொழுக்கமென்றும், கற்பைக் கற்பொழுக்க மென்றுங் கூறிக்கொள்வோர், இருவர் மனமொத்துக் கூடலைக் களவொடு புணர்த்தல் யாது பற்றியோ? ஒல்லுமாறு

தெரியவேண்டும். அது, "இன்பமும் பொருளும் அறனும்" என்னுங் களவியல் முதற் சூத்திரவுரையில் "இருமுது குரவர் கொடுப்பக் கொள்ளாது இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின் இது பிறர்க்குரிய பொருளை மறைப்பிற்கொள்ளுங் களவன்றாயிற்று" என நச்சினார்க்கினியர் வரைந்தவாற்றா னறியப் படுகின்றதே யென விடையிறுப்பினும் "களவலராயினும்" என்னுஞ் சூத்திரத்திற் களவு அலர் ஆயினும் என்னுங் கிளவிகளுக்குக் "களவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாய் அலர்தூற்றப் படினும்" என்னுமுரைர்யை அவரெழுதினதும், அங்ஙனம் சூத்திர ஆசிரியரும் களவு அலர்தானென்று ஒப்புக்கொண்டதும் அக்களவை இழிவின்பாற்படுத்த வெழுந்தனவாயின. அலர் = பழிமொழி.

இஃதேயுமன்றி இக்களவில், "மெய்யும் பொய்யும் விராயும் பிறவாறாகவுங் கூறுவன" உளவென்பதாக "நாற்றமுந் தோற்றமும்" என்றற்றொடக்கத்துச் சூத்திர வுரையிலும், மதிற்புறத்தே பகற்காலத்தும் புணரலா மென்பதாகப் "பகற்புணர் களனே புறனென மொழிப" என்றற்றொடக்கத்துச் சூத்திரவுரையிலும், "களவுபோல இழிதொழிலின்றி ஆராய்தற்கரிய சிறப்போடு கூடிய தலைவன்" என்பதாகக் "கரணத்தினமைந்து" என்றற் றொடக்கத்துக் கற்பியற் சூத்திரவுரையிலும் அந்நச்சினார்க் கினிய ரெழுதினமையால் ஒழுக்கமென்பது பெறக்கூடாதன்றே. "இரவுக்குறியிலே கூடுதற்கு வருகின்ற வரவினது தன்மையை இஃதொழுக்க மன்றென்று நினைத்து அவன் வரைந்துகொள்ள இல்லற நிகழ்த்துதலே நல்லொழுக்கமென்று துணிகையினாலே" என்று குறிஞ்சிப் பாட்டுரையிலே அந்நச்சினார்க்கினிய ரெழுதியதுங் காண்க. ஒழுக்கம்=சீலம்.

களவுப்புணர்ச்சி மகளிர் பூப்புக் காலத்தும் நடக்கக் கூடிய தீவிரமுடைத்தென்பது கருதிப் "பிராயச்சித்தம் விதிப்பர்" என்பது களவியல். "முந்நாளல்லது" என்னுஞ் சூத்திரவுரையில் அவ்வுரையாசிரியரு மெழுதியுள்ளாரால்.

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசமென வட நூல்கள் கூறும் மணம் எட்டனுள் மேலே கூறிப்போந்த களவு காந்தருவ மாகலாமென அதிலே கூட்டப்பட்டதாயுளது.

இதனைக் களவியல் முதற் சூத்திரத்தில் "மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்–துறையாமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே" என வருதலினறியலாம். யாழோர்=கந்தருவர். இக்கந்தருவமணம் சகுந்தலையைத் துஷ்யந்தனெனும் இராசனும், பாண்டியன் மகள் சித்திராங்கதையை அருச்சுனனெனும் அரசனும் வனத்திலே கூடிய சரிதங்களாதி பல்லாற்றானு மறியப்படுதலிற் பகற்காலக் கூட்டமெனலே கொளக் கிடக்கின்றது. என்னை? வனம் போதரல் இராக் காலத்திற் குரியதன்றாகலின்.

இஃதிங்ஙனமாகக் "குறியெனப்படுவது" என்றற் றொடக்கத்துச் சூத்திரவுரையில் "இரவு களவிற்குச் சிறத்தலின் முற்கூறினார்" என்பதூஉம், "நாற்றமுந் தோற்றமும்" என்னுஞ் சூத்திரவுரையில் "இது தாய்துயி லுணர்ந்து தலைவன் வந்தமை தோழி தலைவிக்குக் கூறிக் குறிவயிற் சென்றது" என்பதூஉம் எழுதப்பட்டமையிற் கந்தருவமணத்திற் களவு ஒட்டப்பட்டதே யன்றி உரியதாக மாட்டாது. களவியல் "ஒன்றே வேறே" என்றற்றொடக்கத்துச் சூத்திரவுரையில் "இவ்வொழுக்கத்துக்கு ஓதியது குறிஞ்சி நிலமொன்றுமே ஆதல் சிறப்பு" என்பதும், "மெய் தொட்டுப் பயிறல்" என்னுங் களவியற் சூத்திரவுரையில்

"பெருந்தன்மையா னொருவன் யானை முதலியன வினாயும், தழையுங் கண்ணியுங் கொண்டும் இப்புனத்து வாராநின்றானெனவும், அவன் என்மாட்டுப் பெரிதுங் குறையுடையனெனவும், அவன் குறை முடியாமையின் வருந்தா நின்றானெனவும், அத்தழை நீ ஏற்றல் வேண்டுமெனவும், அக்குறை முடித்தற்கு இஃதிட மெனவும், யான் கூறியது கொள்ளாயாயின் நினக்குச் செறிந்தாருடன் உசாவிக் குறை முடிப்பாயெனவும், மறுப்பின் மடலேறுவனெனவும், வரை பாய்வனெனவும், பிறவாற்றானுங் கூறிக் குறை நயப்பித்தலாம்" என்பதும், "கன்றுதாய் மருளுங் குன்ற நாடன் உடுக்குந் தழை தந்தனனே" என்பதுந் தீட்டப்பட்டமை குறிஞ்சிநில வேடர் கொள்கையை யுணர்த்துவதாயிற்றேயன்றிக் கந்தருவ மணத்தார் கொள்கையை யுணர்த்திற்றில்லை. என்னை? குறிஞ்சி நிலப் பெண்கள் உடுத்தும் ஒருடை விசேடமே தழையாகலின். அது தளிராலும் மலராலுஞ் செய்யப்படுவது. "மாற்றருங் கூற்றம்" என்றற்றொடக்கத்துப் புறத்திணையியற் சூத்திரவுரை யுதாரணத்தில் "அளியதாமே சிறு வெள்ளாம்பல்–இளையமாகத் தழையாயினவே" என வருதலுங் காண்க.

குறிஞ்சி நிலத்து ஆணும் பெண்ணுமே களவு விழைச்சிற் குரியரென்பதைப் "பண்பிற் பெயர்ப்பினும்" என்ற்ற றொடக்கத்துக் களவியற் சூத்திரவுரை உதாரணத்திற் "குன்றக் குறவன் காதன் மடமகள் – வண்டுபடு கூந்தற்றண்டழைக் கொடிச்சி–வளையணி முன்கை வாலெயிற்றரிவை– இளையளாயினு மாரணங்கினளே" என வருவதும், "படுசாந்து சிதைய முயங்குஞ் சிறுகுடிக்கானவன் பெருமடமகளே" என வருவதும் வற்புறுத்தும். மேற்போந்த "ஒன்றே வேறே" என்னுஞ் சூத்திரவுரையிற் "பிறப்பு முதலியன பத்தும் ஒத்த தலைவனுந்

தலைவியும் எதிர்ப்படுப" என்றதனாலும் இது வலியுறுமால். இதன் கீழ் "தலைவனுயர்ந்தோனாயினுங் கடியப்படா" என்றுரைத்தது சிறப்பிற் சொற்றதாகாது. இவ்வாறே ஏனைத் திணைகளும் அவற்றின் ஆடுஉ மகடூஉவென்பார் தாமே கூடும் கூட்டங்களும் அவ்வத்திணைக்குரிய பிரிவு முதலியவற்றை மாறிக் கூறலுஞ் சிறப்பிற் கூறப்பட்டனவாகா,

கந்தருவ மணத்தோடு களவு ஒட்டப்பட்டவாறே இச்சிறப்பில்லனவும் ஒட்டப்பட்டனவென்ற லேற்புடைத்தாம். "இவ்வொழுக்கத்துக்கு ஓதியது குறிஞ்சி நிலமொன்றுமே ஆதல் சிறப்பு" என மேலெடுத்துக் காட்டப்பட்டதும் தழையீதலு மேற்றலும் ஈங்குக் கருதிக் கொள்ளத்தக்கன.

இவ்வாறாயிற் களவியல் முதற்சூத்திரவுரையிற் "களவொழுக்கம் பொதுவாகலின் (அந்தணர் அரசர் வணிகர் வேளாண்மாந்தரென்னும்) நான்கு வருணத் தார்க்கும் உரித்து" என்றதென்கொல்? என்னின், — அவர் மேலே கிளந்துபோந்த யாவுங்கவனித்தலுஞ் சிறப்புள்ளதுஞ் சிறப்பில்லதும் இஃதிஃதாமென உய்த்துணர்தலும் மயங்கிய் அதரினின்று கொண்டஃதெழுதினார்போலும், காமுகரனைவர்க்குந் திருப்தியுண்டாமா றெழுதினார்போலும், ஆவதாகுக.

மேலே யுரைத்துப் போந்த உரையகத்தே "மடலேறுவன்" "வரைபாய்வன்" என்பனவற்றைக் களவியற் சூத்திரத்துழை மடலுலேறுதலும் வரைபாய்தலுமென்னும் பொருளிற் "சாக்காடு" என்னுஞ் சொல்லானும் களவொழுக்கமென்று கூறுப என்னும் பொருளிற் "களவென மொழிப" என்னுஞ் சொற்களானும் பெறலாம். பின்வரு முரையில் "மடலேறுவ லெனக் கூறுதன் மாத்திரையே தலைவற்குச் சாக்காடு" என வருதல் பிடித்து, உண்மையிற் சாவதில்லை அது

சொல்லளவேயென்று நிச்சயிக்கின்றனர் சிலர். இது பற்றி விவரிக்கும் புத்தகத்தில், முயற்சி கைகூடாமையால் வருந்திய கிழவோன், இனி, மடலேறுவேனெனப் பனங்கருக்காற் குதிரையும் பனையிலுள்ளன வற்றால் வண்டில் முதலியனவுஞ் செய்து அக்குதிரையிலேறுதலும், அங்ஙனம் ஆடையொன்று மணியாதவனாய் உடம்புமுழுதும் நீறு பூசிக்கொண்டு தன் கையாலெழுதப்பட்ட கிழி (=படம்)யின் தலைப்புறத்தில் அவள் பெயரைத் தீட்டி அது பிடித்த கையையுடையனாய் நாற்றெருக் கூடியவிடத்தே ஊணுறக்கமின்றிக் கிழிமேற் கண்ணுங் கருத்துஞ் செலுத்தினவனாய் மழை வெயில் காற்றானுந் தடுமாறாவுளத் தினனாயிருத்தலும், ஆண்டவ் வூரவர் குழுமி வந்து "நீ மடலே றுதியோ அவளைத் தருதும்" என்றவழி யியைதலும், அரசன் உடம்பாட்டின்மீது அதுபுரிதலும் முறைமை யென்னுஞ் செய்திகள் பெறப்படுதலால் அவ்வுண்மை எத்துணைத் தென்பது கொளக்கிடக்கின்றது.

"இப்புனத்து வாராநின்றான்" "குன்ற நாடனுடுக்குந் தஃழதந்தனனே" "குன்றக் குறவன் காதன் மடமகள்" "தண்டழைக் கொடிச்சி" "படுசாந்து சிதைய முயங்குஞ் சிறுகுடிக் கானவன் பெருமடமகள்" களவாம் "இவ்வொழுக்கத் துக்கு ஓதியது குறிஞ்சி நில மொன்றுமே ஆதல் சிறப்பு" என்பனவற்றானும் பிற ஏதுக்களானும் இக்காரியம்புரி தமிழரை வனசரரெனற் கிடனுண்டாகிறது.

இது கருதிக் கொண்டுதானோ? பொருளதிகாரம் எமக்கு நனி வரூஉ மென்பது காட்டு நிமித்தந்தானோ? அவ்விரண்டுங் கொண்டு தானோ? அக்களவுச் செய்கைகளைக் குறிஞ்சிக் கிழவனெனும் முருகநாதன் மீதும் வள்ளிமாதேவி மீதும் தோழி மீதும் ஏற்றிக் கொண்டு அவன் காமவேட்கையனாய் மடலேறுவலெனலும் அலைந் தலைந்து அழுது புலம்பலும்

பிறங்க வருணிக்கத் துணிந்தார்போலுஞ் சில தமிழ்ப்புலவர். ஐயோ! வருணித்தற்கு வேறு பிறரில்லாதொழிந்தார் கொலோ? இவையெல்லாம் இறைவனிலக்கணத்தோடு முரணு வனவென்று அவற்றைத் தள்ளி விடுவதே அவன்றிருவடி நுதலிநிற்கும் நுங்கள் கடப்பாடாம்.

அறியாதார், அக்கற்பனைக் கதைகளை நாடகமாக்கிக் கொண்டு நடித்தலும் படித்தலும் இத்தமிழுலகிற் காணப்படல்கருதி அவையொழிய வேண்டுமெனல் பிடித்து ஸ்ரீமத் – குமாரசுவாமியத்து மணி மஞ்சரியில்—

"வாக்கி னினைப்பா லளவிடற் கொண்ணாத மானவள்ளி
நோக்கி னுளத்தை யறிந்துண் மகிழ்ந்து நுதியயிலோன்
பூக்கிளர் மாலை புனைந்து மகிழ்ந்ததைப் புல்லர்கதை
ஆக்கி நடித்திடு நாடகம் பார்ப்ப தருளழிவே".

என யான் கூறியது முண்டன்றோ. உண்மையுணர்ந்து கழிபேருவகை யுறும்பொருட்டு அந்தக் குமாரசுவாமியத்திலே தினைப்புனத் திருவிளையாடல் முதலியன கவனித்துக் கொண்மின். மேலும், இக்காலத்து எந்நற்குடிப் பிறந்தார்மீதும் ஏற்றிக் கூறற் கிலக்கணமாகா அக்களவியலையும், அதனைத் தழுவி யெழுந்த் பிறகூற்றுகளையும், அதுபோலிருப்பனவற்றையும் பழையனகழிதலி னுட்படுத் தொழித்தல் கறையறு தமிழர்க்குக் கடப்பாடென்றே நீவிர் கழறுதலும் பேரறமாம்.

இவ்வறம், தொல்காப்பியனாரும் பேணினரென்றே கூறல் வேண்டும். என்னை? கற்பியலில் "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்—கீழோர்க்காகிய காலமுமுண்டே" எனவும், "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணமென்ப" எனவுஞ் சூத்திரங்கள் செய்தமையின்.

நச்சினார்க்கினியர் முற்பட்ட தனுரையில் "முற்காலத்து நான்கு வருணத்தார்க்குங் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது; அஃதிரண்டாம் ஊழி தொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது" எனவும், பிற்பட்ட தனுரையிற் பொய்யும் வழுவுதலுமாகிய "இவற்றைக் கண்டு இருடிகள் மேலோர் மூவர்க்கும் வேறு வேறு சடங்கு கட்டிக் கீழோர்க்குங் களவின்றியுங் கற்பு நிகழுமெனவுஞ் சடங்கு வேறு வேறு கட்டினார்" எனவுந் தீட்டினமை காண்க. கரணம்=வேள்விச் சடங்கு : இவ்விதமே உரையாசிரியரு முரைத்தனர்.

இருடிகளா லொழிக்கப்பட்டது களவென்பதையு மறிந்து கூறவந்த தொல்காப்பியனார், தமது நூலிற் களவியலென வொரு பகுதியமைத்துக் கொண்டது என் கருதியோ? என்னுஞ் சங்கைக்கு உத்தரம் வேண்டும். அது, பண்டைத் தமிழர் கொள்கையை யுணர்த்தியதா மெனின், அத்தமிழரை யிழித்துக் கூறல் தலைப்பட்ட தாகவே முடியும். அவரே "களவென மொழிப" "என்மனார் புலவர்" என்னுஞ் சொற்களைத் தஞ்சூத்திரங்களிற் பிரயோகித்த வாறுங் காண்க. இது நிற்க.

களவியல் கற்பியல் மூலங்களும் உரைகளும் ஒரு திறக் காமபோதனை யென்றே கொளக் கிடத்தல் எம்மூதறிவாளர் புந்தியிற் படாதுபோம்? விடுதலை விழைவார் கவனிக்க.

முருகனாகிய அவன், 'காமவேட்கையனாய்' என்றதைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் –

"கன்று காமநோய்க் கவலை யுள்வைத்தான்"

என வருதல் கொண்டும், 'அவன் மடலேறுவல்' என்றதை அந்தப்புராணத்தில் –

"தோட்டின் மீதுசெல் விழியினாய் தோகையோ டென்னைக்
கூட்டி டாயெனிற் கிழிதனி லாங்கவள் கோலந்
தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனில்
ஓட்டு வேனிது நாளையான் செய்வதென் றுரைத்தான்".

என வருதல் கொண்டும், அவன் 'அஞ்ஞானியாய் அலைந்து அலைந்து அழுது புலம்பினன்' என்றதை அந்தப் புராணத்தில்—

"புனையிழை தன்னைக் காணான்
புலம்பியே திரித லுற்றான்"
"வனந்தனை வினவு மற்றை
வரைகளை வினவு மாதோ"
"வாடினான் றளர்ந்தா னெஞ்சம்
வருந்தினான் மையற் கெல்லை
கூடினான் வெய்துயிர்த்தான்"

என வருதல் கொண்டும் அறியலாம். இச்செய்யுள்களும் இவை சார்ந்துள்ளனவும் தொல்காப்பியத்துக் களவியல் படித்துக் கொண்டுதான் இயற்றப்பட்டன வென்பது களவியலில் "நாற்றமுந் தோற்றமும்" என்னும் பிரயோகமே வள்ளியம்மை திருமணப் படலத்துச் செய்யுள் 122—ல் "நாற்றமுந் தோற்றமும் நவிலொ ழுக்கமும்" என்னும் அடியுழை வருதலானு மறியக்கிடக்கின்றது.

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

எனத் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலிற் சொல்லப்பட்ட கந்தழி என்னுஞ் சொற்குப் பொருள் "ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த

பொருள்"– எனவும், இச்சொல் வருவிக்கப்பட்ட திருமுருகாற்றுப்படை யுரையில் "ஒரு பற்று மற்று அருவாய்த்தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள்" எனவும் நச்சினார்க்கினியர் கூறினாரென்பன காணலாம். இப்பொழு திதனைச் சிலர் தமிழ்ப்பெருந் தெய்வப் பெயரெனக் கோடல் வேண்டுமென்கிறார். இதனைத் தெய்வப் பெயர்களு ளொன்றாக வைத்து எந்தத் தமிழ் நிகண்டும் அகராதியுங் கூறக் கண்டிலேன். சைவாசாரியார்கள் வைணவ ஆழ்வார்கண் முதலினோர் பாடிய பாட்டுக்களுள் தெய்வப் பெயர்களுள் இயைத்துத் துதித்ததுங் கண்டிலேன்; முந்தைச் சித்தாந்தமென மொழிந்த தமிழ் மூலங்களில் உரைகளிற் போந்ததுங் கண்டிலேன்; இவையேயுமன்றி அக்கந்தழி அழியென்னும் அமங்கலத்தோடேய்ந்து அழகிலதா யிருத்தலின் அது, கூறுவார்க்கு மங்கலம்பயக்குமெனற்கு மிடனின்று. இஃதேயுமன்றிக் 'கந்தழி' 'கந்தழி' என உருப்பெருக்கி வீடுபேறெய்தினார் இன்னாரெனச் சுட்டவும் ஒரு கதை காட்டுநரிலராகலின் நீயிர் இதனை அங்கீகரித்தல் கூடாதென்னும் கருத்தாலேயே ஈங்கிஃதுங் கூறலுற்றேன்.

அந்தண ரென்பதை அந்து+அணர் எனப் பிரிவு செய்யுமாற்றானே 'அந்தத்தை யணவுவார்' = 'வேதாந்தத்தையே நோக்குவார்' என அந்நச்சினார்க்கினியர் பொருள் செய்தவாறு கந்தம் அழிந்த இடமே கந்து + அழி = கந்தழியெனப்பட்டது: இது புத்தமத முடிபாகலா மெனப் பொருள் செய்துகொண்டு கடவுள் வணக்கங்கூறித் தொடங்கப்படாத் தொல்காப்பிய மாக்கியோர் கடவுள் பெயர் கந்தழியெனக் கூறினாரென்பது பொருந்து மாறின் றெனுங் கருத்துமுறத் திருநெல்வேலித் தமிழ்ப் பண்டிதரொருவர் கூறினரென்பதையும் யானறிந் துளேன். இஃதியா தாயினு மாகட்டும்.

போந்த சூத்திரத்திற் கொடிநில்லை யென்றதற்குக் "கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம்" என்றும், வள்ளி யென்றதற்குத் "தண்கதிர் மண்டிலம்" என்றும், என்ற வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும் என்னு மொழிகளுக்கு "என்று சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்றும்" என்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே என்னுஞ் சொற்களுக்கு "முற்கூறிய அமரரோடே கருது மாற்றாற் பொருந்தும்" என்றும் அவர் பொருள் செய்தமையாற் பலவகைப்பட்ட தெய்வங்களுளொன்றாக வைத்தோதிய கந்தழி தனிப் பெருங் கடவுளெனற்கும் இடனின்று. பின்னரும் உரையாசிரியர் "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரவுரையில் "தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை" என்ப தெழுதினமையின் இது, கடவுள் நாமமெனக் கோடற்கு 'மிடனின்று. இவ்வாற்றான் உரையுஞ் சூத்திரமுந் தெளிவுடையனவும் அல்ல. கந்து=பற்றுக் கோடு; நிகண்டு காண்க. பற்றுக்கோடு மரமெனக் கொளப்பட்டுழி அதன்கட் பற்றி யதனையழிக்குந் 'தீ' கந்தழி யாகலாமெனப் பொருள்கோடல் வெஞ்சுடர் தண்சுடர்களோடு பொருத்தி முச்சுட ரெனற்கும் ஏயும்.

இழுக்க மணையா விழுப்பமுறு மன்பீர்! இன்னும் என் போதகத்தைச் செவி கொடுத்திருந்து கேண்மின். நெருப்பு நெருப்பைச் சுடுவதில்லை. இவ்வித சம்பந்தமே இறைவன் சம்பந்தமாம். கழுகுகள் பிணங்கிடக்குமிடத்திற் குழுமும். துர்மதிகள் துயரிழைத்து மகிழ்வுழிக் குழுமும். இவ்வித சம்பந்தமே இழிபிறப்பின் சம்பந்தமாம். நீத்துடையார் நீர் நிலைகளில் வீழினுங் கரையேறுவர். இவ்வித சம்பந்தமே ஆகப்பியாச சம்பந்தமாம்.

தன்பொருள் பேணு நினைப்பு, பிறர் பொருண்மாட்டு மிருத்தல் நிறையாகும். அது பொன்னேபோற் போற்றற்குரியது. பிறர் செய்த தீங்குகருதித் தீங்கு புரிவது கடுநாகத்தின் செய்கையாம். இது மைந்தர்பால் நிகழின் மைந்தரொடு கூட்டல் கூடுமோ? நன்றி கொல்பவன் நடுவுநிலைமை கொல்பவனே. உள் மறைந்திருக்கும் மலம் வெளிவரின் துர்க்கந்தமே.

இலக்கணப் பயிற்சியிலா னெழுத்து வழுவாதல் போலத் தேசிகன் அனுமதியின்றிச் செய் சற்கருமங்களும் வழுவின் பாற்படும்; சீடர் கவனிப்பாராக.

வியபிசாரி தன்னைக் கெடுத்துக் கொண்டது மன்றி, தான்பெற்ற ஆணையும் பெண்ணையும் அவமானப் படுத்தினவளானாள்; தேசிகன் கவனிப்பானாக.

பூண்டேம் இறைதொழும்பு புகழேம் பிறர் தமையே என நிற்கத்தக்க தெய்வத் தலையன்புடையீர்! அருணகிரிநாதர் திருநெறியை விழைவீர்! நவமணி செறிக்கப்பட்ட நப்பெரும் பெட்டியுட் செலுத்தப்பட்ட கைக்கு யாது மகப்படாது போங்கொல்? சொறிக்கல் கரிக்கல் என்பன கொடுவருங்கொல்? நன்றே ஆகுக. ஓம்.

செவியறிவுறூஉ முற்றிற்று.

குமரகுருபரன் திருவடி வாழ்க.

ஸ்ரீ குமார பரமேஸ்வரனை
பூஜையில் வணங்கும் முறை

சிவமு மாசிவ சத்தியு மெழிலே
திகழ்மும் மூர்த்தியு மவரடி களுமே
சீர்கொ ணீயென மிளிர்முறைமைக்கென்
சென்னி மீதுபன் னிருவிரன் மேலும்
அவமி லேனைய தேவரு நீயென்
றாகு முறைக்குயர் தலையிலு மாசா
னாயி லங்கிடு முறைக்கில லாட
மதிலுந் தந்தையு மரசுமென் முறைக்கு
நவிலும் வாயெதி ராகவு மெய்ம்மை
நண்ணு வேதிய னாமுறைமைக்கு
நாப்பண் மார்பிலு மொய்த்தாய் முறைக்கு
நல்ல மோட்டிலு மாக்கரங் கூப்பி
உவகை யோடுனைத் தாழ்வே னின்னு
முற்றவன்னைபி தாகுரு தேவென்
றுன்னு முறைக்கிரு நான்குவந் தனமு
முஞற்று வேனருள் வேலுடை யானே.

– திருவலங்கற்றிரட்டு – பல்சந்தப்பரிமளம்
ஆசிரியவியல் – 161

Rs.65/-